# விடைகள்

## பாகம்-7

# விதைகள்...

பகுதி -7

என் தேவனாகிய அப்பாவுக்கு கோடானுகோடி ஸ்தோத்திரமுண்டாவதாக. விதைகள் பகுதி—7க்காக தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன். தொடர்ச்சியாக புதிய பிரமாணத்தினடிப்படையிலான சத்தியங்களைத் தியானிப்போம், தேவன் உதவி செய்வார்.

“ஒரு புத்தகம் இருதயத்திலிருந்து பிறந்திருந்தால், அதுவே மற்ற இருதயங்களுக்குள் நுழைவதற்கு அதுவே வழி செய்து கொள்ளும்” என்றார் கார்னவல் என்ற அறிஞர். உண்மைதான்...

நம்மில் வாசம் செய்யும் பரிசுத்தாவியானவர் தரும் வார்த்தைகளைக் கோர்த்து புத்தகத்தை எழுதினால், அதை வாசிப்பவரது இருதயத்திலிருக்கும் ஆவியானவர் அதை கிரகிக்க வைப்பார்! (யோவான். 16:13)

அபிஷேகம் நிறைந்த இதயங்களுக்கு

பரிசாக இந்த விதைகள் புத்தகங்கள்...

இந்த புத்தகங்கள் சுற்றியோடும் இடங்களிலெல்லாம்

தங்கம் விளையும்!

ஆம்....

நிச்சயமாகவே தங்கம் விளையும்! (ஆதி. 2:11)

## முதலில் ஒரு ஜெபம்:

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் தேவனும் மகிமையின் பிதாவுமானவரே,

உம்மை நான் அறிந்துக்கொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை தாரும். என்னை நீர் அழைத்ததினாலே எனக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும், பரிசுத்தவான்களிடத்தில் எனக்கு உண்டாயிருக்கிற சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும்,

நீர் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த உமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே விசுவாசிக்கிற என்னிடத்திலே காண்பிக்கும் உம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம்

*இன்னதென்றும், நான் அறியும்படிக்கு எனக்கு பிரகாசமுள்ள மனக்கண்களைத் தாரும். (எபே. 1:17—19)*

*நான் இயேசுவின் ஆவியினாலே உள்ளான மனுஷ(ஷியி)னி(ல்) வல்லமையாய்ப் பலப்படவும், விசுவாசத்தினாலே கிறிஸ்து என் இருதயத்தில் வாசமாயிருக்கவும், நான் அன்பிலே வேரூன்றி நிலைபெற்றவனாகி, சகல பரிசுத்தவான்களோடு கூட கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து; அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவனாகவும், உம்முடைய சகலபரிபூரணத்தாலும் நிறையப்படவும், உமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே எனக்கு அநுக்கிரகம் பண்ணும். (எபே. 3:16:19)*

*உத்தமமானவைகளை நான் ஒப்புக்கொள்ளத்தக்கதாக என் அன்பானது அறிவிலும் எல்லா உணர்விலும் இன்னும் அதிகமதிகமாய்ப் பெருகவும், தேவனுக்கு மகிமையும் துதியும் உண்டாகும்படி கிறிஸ்துவினால் வருகிற நீதியின் கனிகளால் நிறைந்தவனாகி, கிறிஸ்துவின் நாளுக்கென்று துப்புரவானவனாகவும், இடறலற்றவனாகவுமாயிருக்க உதவும். (பிலி. 1:9—11)*

*எங்களிலுள்ள சகல நன்மைகளும் தெரியப்படுகிறதினாலே எங்களுடைய விசுவாசத்தின் அந்நியோந்நியம் கிறிஸ்து இயேசுவுக்காகப் பயன்படவேண்டுமென்று வேண்டுதல் செய்கிறேன். (பிலே. 1:6)*

*என்னை உமது அழைப்புக்கு பாத்திரமாக மாற்றும். உம் தயையுள்ள சித்தம் முழுவதையும் விசுவாசத்தின் கிரியையையும் பலமாய் என்னிடத்தில் நிறைவேற்றும். 2 தெச. 1:12*

*கர்த்தருடைய வசனம் எங்கும் பரவி மகிமைப்படும்படிக்கு, துர்க்குணராகிய பொல்லாத மனுஷர் கையினின்று எங்களை விடுவித்து காத்தருளும். 2 தெச. 3:1,2*

*நான் நல்மனச்சாட்சியுள்ளவனா(ளா)ய் எல்லாவற்றிலும் யோக்கியமாய் நடக்க உதவும். எபி. 13:18*

*கிறிஸ்துவினுடைய இரகசியத்தினிமித்தம் கட்டப்பட்டிருக்கிற நான் அந்த இரகசியத்தைக்குறித்துப் பேசவேண்டிய பிரகாரமாய்ப் பேசி, அதை வெளிப்படுத்துவதற்கு, திருவசனம் செல்லும்படியான வாசலை திறந்தருளும். (கொலோ. 4:3,4)*

*இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன் பிதாவே. ஆமென்.*

*(இந்த ஜெபத்தை செய்யும் போது எதுவுமே புரியாதது போல இருக்கும். ஆனால் இது வேத வசனங்களில் இருந்து நேரிடையாக பெயர்த்து எடுக்கப்பட்ட ஜெபம்! அதனால் புரிந்தாலும் புரியாவிட்டாலும் தொடர்ந்து செய்யுங்கள்,*

*பலன் நிச்சயம். புரியாமல் நான் செய்து வந்த இந்த ஜெபத்தின் பிரதிபலன்கள்தான் இந்த "விதைகள்" புத்தகங்கள்!)*

*இந்த ஜெபத்தை ஒரு நாள் இரண்டு நாளல்ல, தினமும் செய்து வரவேண்டும். இந்த ஜெபத்தை நமக்காக மட்டுமல்ல, அடுத்தவருக்காகவும் செய்ய வேண்டும். இப்படி ஜெபிக்கும் போது என்னவெல்லாம் கிடைக்கும், என்னென்ன நடக்குமென்பதையும் பார்க்கப்போகிறோம்.*

*உங்களது சந்தேகங்கள் — கேள்விகள் — ஆலோசனைகள் ஏதேனுமிருப்பின் எங்களுக்கு எழுதுங்கள். தொடர்பு கொள்ளுங்கள்.*


எங்கள் முகவரி:

சகோதரி. **லதா டேவிட்**
**நித்தியர் இயேசு ஊழியங்கள்**
A-79, கால்டுவெல் காலனி முதல் தெரு,
தூத்துக்குடி-628 008

தொலைபேசி: +91-461-2377889
அலைபேசி: +0-90034-56506
+0-94424-66250

**Our Address:**
**Sis. LATHA DAVID**
**SOVEREIGN JESUS MINISTRIES**
**A-79, CALDWELL COLONY**
**FIRST STREET,**
**TUTICORIN-628 008**

**Ph.: +91-461-2377889**
**Mobile: +0-90034-56506 / +0-94424-66250**

Email:

**sovereignjesus@gmail.com**
**lathadavid@dataone.in**

**Website:**

**www.sovereignjesus.com**
**www.sovereignjesus.googlepages.com**

## பிதாவே:

நாம் பிதாவிடம்தான் ஜெபிக்க வேண்டும், இயேசுவிடம் அல்ல என்பதை புதிய ஏற்பாட்டில் பல இடங்களில் பார்க்கிறோம். (மத். 6:6,8,9, எபே. 3:15) ஏனென்றால் இயேசுவின் நாமம் எல்லாவற்றிற்கும் மேலான நாமம் என்று பார்க்கிறோம். இயேசுவின் நாமம் கடிதத்தின் முகவரி போன்றது. முகவரி **(address)** எழுதப்படாத கடிதம் ஊர் போய் சேராது!

அவர்கள் கர்த்தரின் நாமத்தைத் துதிக்கக்கடவர்கள்; அவருடைய நாமம் மாத்திரம் உயர்ந்தது; அவருடைய மகிமை பூமிக்கும் வானத்திற்கும் மேலானது. சங். 148:13

எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாக தந்தருளினார்.

அதனால் வேறு எந்த நாமமும் இயேசுவின் நாமத்தை இடையூறு **(Disturbance)** செய்ய முடியாது. அதனால் பதில் வரும் என்ற சந்தேகமில்லாமல் விசுவாசிக்க முடிகிறது, விசுவாசித்து பதிலைப் பெற்றுக்கொள்ளவும் முடிகிறது. பிதாவை நோக்கி இயேசுவின் நாமத்தில் கேட்கும்போது, பிதாவாகிய தேவன் நமக்குத் தருகிறார். (யோ. 15:16, 16:23,24) இயேசுவின் நாமத்தில் நாம் ஜெபிக்கும்போது நம் தேவன் இயேசு பிதாவிடம் நமக்குப் பதிலளிக்கும்படி, பலனளிக்கும்படி வேண்டிக் கொள்கிறார். தன் ஒரே பிள்ளை வேண்டிக் கொண்ட பிறகு பிதா கண்டிப்பாக பதில் கொடுப்பார் என்பதைச் சொல்லியா தெரிய வேண்டும்?

முதலில் சாத்தானை தேவதூதனாகத்தான் பிதாவாகிய தேவன் இயேசுவின் மூலம் சிருஷ்டித்தார். பிரதானமான 3 தூதர்களில் அவன் முதன்மையானவனாக இருந்தான். பெருமை தேவதூதனை சாத்தானாக மாற்றியது பாருங்கள்! சாத்தான் சிருஷ்டிதான், இயேசுவோ சிருஷ்டிகர்! உருவாக்கப்பட்ட வஸ்து தன்னை உருவாக்கியவனைவிட ஒருநாளும் பெரியவனாக முடியாது. களிமண் குயவனைவிட பெரியவனாக முயற்சித்திருந்தால் ஒருநாளும் பானையாக மாறியிருக்க முடியாது. உலகத்தின் 1,00,000 பிரச்சனைகளுக்கும் காரணமான சாத்தானைவிட இயேசு பெரியவர். சாத்தானை உருவாக்கியவரே அவர்தான். இப்போதும் அவனை பாதுகாத்து வருபவரும் தேவன்தான்! ஆண்டவர் உருவாக்கிய வானமண்டலங்களில்தான் அவன் உலா வந்து கொண்டிருக்கிறான். அவனுடைய எல்லைகளிலிருக்கும் பாதுகாவலை தேவன் எடுத்துவிட்டாரானால் அவன் இல்லாமல் போய்விடுவான்.

சாத்தானால் நம்மை எதுவும் செய்துவிடமுடியாது என்று பார்க்கிறோம். அவனைப் பற்றிய விவரங்கள் தெரியாமல் பயந்தால் தலைமேல் ஏறி உட்கார்ந்து விடுகிறான் அவ்வளவுதான்!

நம் ஜெபம் நெருப்பு என்றால், வசனங்கள் விறகு போல! விறகில்லாமல்

நெருப்பில்லை, அடுப்பு எரிய ஏதாவது ஒரு எரிபொருள் தேவை, மண்ணெண்ணெய், சமையல் வாயு, மின்சாரம், சூரிய ஒளி, ஏதாவது ஒன்று. இல்லாவிட்டால் அன்றைக்கு சோறில்லை, குழம்பில்லை, பொரியல், அவியல் எதுவுமே இல்லை! புரியவில்லையா? வசனம் இல்லாமல் ஜெபமே இல்லை, அப்படிச் செய்யப்படும் ஜெபத்தைத் தேவன் ஜெபமாக அங்கீகரிப்பதும் இல்லை. விறகில்லாமல் நெருப்பு மூட்டப்படுமா? நெருப்பில்லாமல் பானையில் சோறு வேகத்தான் செய்யுமா? அது அரிசியாகவேதான் இருக்கும்! "வேதத்தை கேளாதபடி தன் செவியை விலக்குகிறவனுடைய ஜெபமும் அருவருப்பானது. நீதி. 28:9"

## தேவனை அறிந்து கொள்ள வேண்டும்:

தேவனைத் துதிக்கிறோம், வேண்டுதல் செய்கிறோம், ஆராதிக்கிறோம், ஆனால் அவரை அறிந்து கொள்வதற்கான முயற்சிகள் எதையுமே பெரும்பான்மையானவர்கள் எடுப்பதில்லை. உலகத்தின் நம் மாம்சத்தின்படியான தாய்தகப்பன்மார்களைப் பற்றிய புள்ளி விவரங்களைத் தெரிந்து வைத்திருக்கும் நாம், நம்மை ஆளுகை செய்கிற ஆவிகளின் தேவனைப் பற்றி எதுவுமே தெரியாதவர்களாக இருக்கிறோம்.

உலகப்புகழ்பெற்ற நாடகங்களை எழுதியவர் ஷேக்ஸ்பியர், இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவர். ஆனால் இங்கிலாந்து மக்கள் பலருக்கு அவர் யார் என்றே தெரியவில்லையென்று ஒரு கருத்துக்கணிப்பு கூறுகிறது. மூன்றில் ஒரு பகுதி மக்கள் ஷேக்ஸ்பியர் இங்கிலாந்தில் மன்னராக இருந்தவர் என்று கூறினார்கள், அவரின் நாடகங்களைப் பற்றி அவர்கள் கேள்விப்பட்டிருக்கவே இல்லை!

சத்தியத்தை அறியாத ஒரு கூட்ட கிறிஸ்தவர்கள் கூட இன்னும் இயேசுவைப் பற்றி அறியாதவர்களாகவே இருக்கிறார்கள். இயேசுவை கிறிஸ்தவ மதத்தின் ஸ்தாபகர் என்றே நினைக்கின்றனர். அந்த கிறிஸ்தவ மதத்தின் உபதேசங்கள் நன்றாக இருப்பதால் தாங்கள் கிறிஸ்தவ மதத்தில் இருப்பதாக கூறுகின்றனர். நினைத்துக் கூட பார்க்க முடியாத இந்த வேதனை தரும் மனநிலையில் நானும் இருந்த காலங்கள் உண்டு.

நாம் ஆராதிக்கும் தேவனைப் பற்றிய முழு விவரத்தையும் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம். (1 நாளா. 28:9) தேவனை நாம் சரியான விதத்தில் அறிந்து கொண்டிராவிட்டால், தவறாகப் புரிந்து கொள்வோம். தவறாகப் புரிந்து கொள்ளப்பட்ட தேவனை ஆராதிக்கும் போதும், அல்லது ஜெபிக்கும் போதும் தவறுகள் நடப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. அதாவது தவறாக ஆராதிப்போம், அல்லது தவறாக ஜெபிப்போம். தவறான ஜெபத்திற்கு தேவனால் சரியான பதிலைக் கொடுக்க முடியாது. அதனால் அவர் பதில் கொடுக்காமல் மௌனமாக இருக்க வேண்டியதாகிவிடுகிறது. ஆண்டவரைப் பற்றிப் பிரச்சனையேயில்லை. ஆனால் நம்முடைய தவறான ஜெபத்தைக் கேட்டுவிட்டு சாத்தானால் சும்மாயிருக்க முடிவதில்லை, அதுதான் பிரச்சனை!

தேவனை அறிந்து கொள்ளும் போது, அவருடைய பிள்ளை இயேசுவையும், அவர் சிலுவையில் நமக்கு ஏற்படுத்தி வைத்திருக்கும் காரியங்களையும் அறிந்து கொள்வோம். புதிய உடன்படிக்கையின் வெளிச்சமும் கிடைக்கும். பிதாவை அறிந்து கொள்ளாதவன் தேவனையும் அறிந்து கொள்ளவில்லையாதலால்; புதிய உடன்படிக்கை அவர்களுக்குப் புரியாது, தெரியாது. அதனால் மீண்டும் பழைய ஏற்பாட்டின் நியாயப்பிரமாண வழிகளிலேயே நடப்பார்கள். இதைத்தான் கள்ளமார்க்கம் என்று வேதம் எச்சரிக்கிறது.

*"உடன்படிக்கைக்குத் துரோகிகளாயிருக்கிறவர்களை இச்சகப் பேச்சுகளினால் கள்ளமார்க்கத்தாராக்குவான்; தங்கள் தேவனை அறிந்திருக்கிற ஜனங்கள் திடங்கொண்டு, அதற்கேற்றபடி செய்வார்கள். ஜனங்களில் அறிவாளிகள் அநேகருக்கு அறிவை உணர்த்துவார்கள்; … தானி. 11:32, 33"*

நாம் தேவனால் அறியப்பட்டிருக்கும்போது, அவரால் அறியப்பட்டும் இருக்கிறோம்... பரஸ்பர புரிந்து கொள்ளுதல் **(Mutual understanding!)** கலா. 4:9 இந்த பரஸ்பர கவர்ச்சியால் அவரோடு ஒன்றாகிறோம், இணைகிறோம். சரியானபடி ஜெபிக்கவும், சரியான பதிலைப் பெற்றுக் கொள்ளவும் முடிகிறது. எந்நேரமும் அவருடன் உலாவவும், அவர் நம்முடன் சஞ்சரிக்கவும் ஏதுவுண்டாகிறது.

*"தேவனை அறிந்து கொள்ளும்போது; கிரியை செய்ய ஆரம்பிக்கிறோம். இதனால் நம் ஆவியின் கனிகளை, முக்கியமாக அன்பை மற்றவர்கள் பார்க்கும் சூழ்நிலை உருவாகிறது. இது சுவிசேஷம் பரவவும், அது வெற்றியடையவும் உதவி செய்கிறது. தீத்து. 1:16"*

தேவனை அறிந்து கொள்வதில் விருப்பமற்றவர்களாக இருப்போமானால், வஞ்சக ஆவியை, சாத்தானை அறிந்துகொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாவோம். சாத்தான் வந்து, இயேசுவின் சிலுவை சத்தியங்களை, மகத்துவங்களை, ஆசீர்வாதங்களை திரைபோட்டு மறைத்துவிட்டு, பாடுகள், கண்ணீர்கள், துக்கங்கள், வியாதிகள், தரித்திரங்கள்… இப்படியே ஏகப்பட்ட "கள்"கள் வழியே நம்மை நடத்திக்கொண்டு போவான். அதுமட்டுமல்ல... இதுதான் தேவனுடைய வழி, உபத்திரவங்களின் வழியாக நடந்தால் தான் ஒழுங்காக இருப்போம் என்று உபதேசமும் பண்ணுவான். ஏற்கெனவே உபத்திரவத்திலிருந்து மீள வேண்டும் என்பதற்காகத்தான் இயேசுவிடம் வருகிறோம். இயேசுவிடம் வந்த பிறகும் அதே உபத்திரவங்கள்தான் என்றால்? மனுஷன் கசங்கி செத்துப் போகமாட்டானா என்ன? சாத்தான் உங்களை ஆளுகை செய்யாமல் இருக்க வேண்டுமா? தேவனை அறிகிற அறிவில் வளருவோம். (தானி. 11:32, ரோமர். 1:21)

## தேவன் நம்மை ஏன் அழைத்தார்? அதனால் நமக்கு என்ன நம்பிக்கையுண்டு?:

*"நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மகிமையை அடையும்பொருட்டாக எங்கள் சுவிசேஷத்தினாலே அந்த இரட்சிப்புக்கு அவர் உங்களை அழைத்தார். 2 தெச. 2:14"*

நம் பிதாவாகிய தேவன் நாம் அவருடைய குமாரன் இயேசுவுக்குச் சமமாக ஆக வேண்டுமென்று **(equal)** அதாவது அவரைப் போலாக வேண்டுமென்றே நம்மை அழைத்தாராம். அதனால்தான் நம்மை இயேசுவுடன் கூட உன்னதங்களில் உட்கார வைத்திருக்கிறார். அதனால் உன்னதங்களில் இருந்து கொண்டு இவ்வுலகத்தை பார்க்கும் பாக்கியம் பெற்றிருக்கிறோம். இயேசுவின் பார்வை நமக்குண்டு!

"அவர் நம்முடைய கிரியைகளின்படி நம்மை இரட்சியாமல், தம்முடைய தீர்மானத்தின்படியும், ஆதிகாலமுதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியும், நம்மை இரட்சித்து, பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார். 2 தீமோ. 1:9"

தம்முடைய தீர்மானத்தின்படி அழைக்கிறார். அப்போதுதான் தம்முடைய விருப்பத்தின்படி நம்மை உருவாக்க முடியும். நம்முடைய கிரியையின்படி நம்மை அழைத்தாரானால் அவருடைய விருப்பத்தின்படி நம்மை உருவாக்க முடியாது, கோணல் மாணலாக இருப்போம், இயேசுவைப்போலாக முடியாது. பிறகு தேவனுடைய திட்டம் நிறைவேறாமல் போய்விடுமே!

ஆதிகாலமுதல், அதாவது தேவன் வானத்தையும் பூமியையும் உண்டாக்கிய அந்நாட்களிலேயே கிறிஸ்துவுக்குள் நமக்கு உண்டாயிருந்த கிருபையின்படியும் நம்மை அழைத்தார். கிருபை? தகுதியில்லாத நமக்கு கொடுக்கப்படும் சகாயம். நம் தகுதியின்படிதான் கிருபை கொடுக்கப்படுமென்றால் யாருமே பெற்றுக் கொள்ள முடியாது. ஏனென்றால் நாம்தான் நம் தகுதியை இழந்துவிட்டோமே! எப்போது? எங்கே? ஏதேன் தோட்டத்தில், சாத்தானும் ஏவாளும் சந்தித்த இடத்தில்! அதனால் இயேசுகிறிஸ்துவின் தகுதியின் அடிப்படையில் நமக்குக் கிருபை அளிக்கப்படுகிறது. காரணம் கிருபையைப் பெற்றுக்கொள்ளும் தகுதி இயேசுவுக்கு மாத்திரம்தான் உண்டு.

நாம் இரட்சிக்கப்படுவதும் அந்த கிருபையின் அடிப்படையில்தான் நடக்கிறது. நம ஜெபமோ, உபவாசமோ, காணிக்கையோ நம்மை இரட்சிக்கவில்லை. சுவிசேஷம் கேட்டோம், விதை விழுந்தது, ஆவியானவர் அசைவாடினார், இயேசு பிறந்தார், **Happy Christmas!** அவ்வளவுதான்!

"கைவிடப்பட்டு மனம்நொந்தவளான ஸ்திரீயைப்போலவும், இளம்பிராயத்தில் விவாகஞ்செய்து தள்ளப்பட்ட மனைவியைப்போலவும் இருக்கிற உன்னைக் கர்த்தர் அழைத்தார் என்று உன் தேவன் சொல்லுகிறார். ஏசா. 54:6"

நம் சஞ்சலத்தை நீக்க நம்மை அழைத்தார். சந்தோஷம், சமாதானம், நிறைவு ஆசீர்வாதம் தர அழைத்தார். அன்னதண்ணி ஆகாரம் இல்லாமப் போனாலும், அன்பு எனக்குப் போதுமையா என்று பாடாதீர்கள். அன்னதண்ணி ஆகாரம் இல்லாத இயேசுவா? அது எப்படி சாத்தியம்? வெறும் இயேசுவா? சோற்றுக்கில்லாத விசுவாசமா? பஞ்சப்பரதேசியாக ஆராதனையா? என்னவொரு மதியீனம்? தரித்திரத்தை ஒழித்துக் கட்டத்தானே இயேசு சிலுவையை சுமந்தார்?

இப்படிப் பாடிப்பாடியே பிசாசைப் போல தேவபிள்ளைகளும், தேவனைப் போல சாத்தானின் கூட்டத்தாரும் மாறிப்போனார்கள்! அதாவது, பிசாசின் தரித்திரத்தை தேவபிள்ளைகள் அனுபவிக்கிறார்கள். நம் ஐசுவரியங்களைச் சாத்தான் களவாடி தன் கூட்டத்தாருக்கு கொடுத்துவிட்டான்! (பிர. 10:7) (ஏசா. 1:8) பாட்டைத் திருத்துங்கள், புதிய பாடல்களைப் பாடுங்கள், புதிய ஏற்பாட்டின் புதிய உடன்படிக்கையைப் பாடுங்கள், உங்கள் பாடல் புதிய உலகத்திற்குள் உங்களை நடத்தும்.

அவர் நம்மை அழைத்ததினால் நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கைகள் என்னென்ன?

சாவைக் குறித்ததான பயம் நமக்கு தேவையில்லை, ஏனென்றால் உயிர்த்தெழுவோம் என்று அறிந்திருக்கிறோம். (அப். 23:6)

வாக்குத்தத்தங்கள் நிறைவேறும் என்ற முழு நிச்சயத்தோடிருக்கலாம். விசுவாசத்தோடு அறிக்கை செய்து கொண்டே இருக்க வேண்டும். (அப். 26:7)

தேவனுடைய மகிமையைப் போன்ற மகிமையை அடைவோம் என்ற நிச்சயம் வருகிறது, அதாவது அவரைப் போலாவோம், அவர் (இயேசு) இருக்கிற வண்ணமாகவே நாமும் இருப்போம்; பிதாவின் குமாரர்களும், குமாரத்திகளுமாக (ரோமர். 5:2)

வெட்கப்பட்டுப் போகமாட்டோம்... கேவலங்கள், கிண்டல், கேலிகளுக்கு ஆளாக மாட்டோம். நிந்தை அவமானங்கள் விலகும். (ரோமர். 5:5)

காணாததையும், காணக்கூடாததையும் நம்புவோம்! (ரோமர். 8:24)

கிறிஸ்துவுக்குள்ளான நம் பிரயாசங்களுக்கு, ஊழியங்களுக்கு நிச்சயம் பிரதிபலன் உண்டு. (1 கொரி. 9:10)

தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி, இச்சையினால் உலகத்துக்குண்டான கேட்டுக்குத் தப்பி திவ்விய சுபாவத்துக்கு பங்குள்ளவர்களாகும் பொருட்டு, மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. (2 பேதுரு. 1:3,4)

அறுசுவை சாப்பாடு இருக்க பிடிவாதமாக பட்டினி கிடந்தால்... பிரியாணி இருக்க கஞ்சியைக் குடித்தால் ... இயேசுவின் சிலுவைப் பாடுகளை, அதன் ஆசீர்வாதங்களை வீணடித்தால்? யாருக்கு நஷ்டம்? பிதாவாகிய தேவன் நமக்காக இயேசுவை விதைத்தார், விளைச்சல் வீணாகப் போவானேன்? அறுவடை செய்வோம்.

## தசமபாகம் - ஓர் பார்வை! *(a view):*

*சிலுவையின் ஆசீர்வாதங்கள் எல்லாமே கிரையமில்லாதது, இலவசமானது. அப்படியானால் ஏன் காணிக்கை கொடுக்க வேண்டும் என்ற கேள்வி வரலாம். விதைத்தால் தான் ஆசீர்வாதம் என்றால் அது கிரையம்தானே என்று கேட்கக்கூடும். தேவனைத் தவறாகப் புரிந்து கொண்டவர்களின் சரியான கேள்வி இது!*

*விதைப்பு என்பது ஒரு விசுவாசக் கிரியை. நாம் நம் தேவைகளுக்கு நம் சம்பளத்தை நம்பியிருக்கவில்லை, தேவனைத்தான் நம்பியிருக்கிறோம் என்பதை வெளிப்படுத்தும் காரியம் இது. காணிக்கை செலுத்தும் போது நம் விசுவாசம் வெளிப்படுகிறது. 1000 ரூபாயிலிருந்து தசமபாகமாக 100 ரூபாயை எடுத்து காணிக்கை செலுத்தும்போது; மீதம் இருக்கிற 900 ரூபாய் நமக்கு பற்றாது என்பது நமக்கு தெரிந்துதான் இருக்கிறது. என்றாலும் நம் நம்பிக்கை 1000 ரூபாயின் மீது இல்லாததினால் தசமபாகம் கொடுக்கிறோம். அதாவது நம் நம்பிக்கை தேவன் பேரில் இருப்பதால், அவர் தான் நம்மை போஷிக்கிறார் என்று நாம் நன்றாக அறிந்திருப்பதால், தைரியமாக மிகக்குறைவான சம்பளமான 1000 ரூபாயிலிருந்தும் 100 தேவனுக்காக எடுத்து வைக்கிறோம்.*

*அதாவது நம் விசுவாசத்தை எடுத்து வைக்கிறோம், அல்லேலூயா! நீங்கள் காணிக்கையாகக் கொடுப்பது வெறும் 100 ரூபாய் அல்ல, உங்கள் விசுவாசம்! பிதாவாகிய தேவன் மேலும், அவரின் வார்த்தையான இயேசுவின் வார்த்தைகள் (வசனங்கள்) மேலும் உள்ள விசுவாசம்! ஏனென்றால் புதிய உடன்படிக்கையின்படி வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட ஐசுவரியங்களைச் சுதந்தரிக்க விசுவாசம் தேவையாயிருக்கிறது. அந்த விசுவாசத்தைச் செயல்படுத்த கிரியை தேவையாயிருக்கிறது, அந்த கிரியைதான் காணிக்கை — தசமபாகம் — முதற்பலன்! (எப்படி வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளலாம்.)*

*தேவன் நம்மிடம் காசு கேட்கிறாரா? இல்லை...* **No!**

*“நான் பசியாயிருந்தால் உனக்குச் சொல்லேன்; பூமியும் அதன் நிறைவும் என்னுடையவைகளே. சங். 50:12”*

*தேவனை முதலிடத்தில் வைத்திருக்கிறோம் என்பதை இந்த விசுவாசக்கிரியையின் மூலமாக வெளிப்படுத்துகிறோம். முடிந்ததைக் கொடுத்தால் போதும், குடும்பச் செலவுகள் முக்கியம், குடும்பத்தைக் கவனிக்காதவன் தேவனுடைய சபையை எப்படி கவனிக்க முடியும்? என்று சாக்குப் போக்குச் சொல்லி எல்லா செலவுகளையும் செய்துவிட்டு கடைசியில் கொடுக்கலாம் என்று இருப்பீர்களானால் ... கண்டிப்பாக அதற்கான வாய்ப்புகள் இல்லை. இப்படி முயற்சிப்பீர்களானால் உங்களால் 1% கூடக் கொடுக்க முடியாமல் போவது நிச்சயம்... இது அனுபவ உண்மை... நீங்களும் வேண்டுமானால் பரீட்சித்துப் பாருங்கள். இதைப்பற்றி முந்தைய புத்தகங்களில் நிறைய எழுதியிருக்கிறேன். திரும்பத் திரும்பச் சொல்வதில்*

பிரச்சனை ஒன்றுமில்லை. விசுவாசம் கேள்வியினால் வரும், திரும்பத் திரும்பக் கேட்டுக்கொண்டேயிருப்பதினால் வரும். கேள்வி பிரசங்கத்தினால் வரும். பிரசங்கம் வேத வசனங்களிலிருந்து தயாரிக்கப்படுகிறது. தயாரிக்க உதவி செய்பவர் பரிசுத்த ஆவியானவர்.

நம் வருமானத்தில் பத்தில் ஒன்று அல்லது அதற்கு அதிகமாக எடுத்துக் கொடுக்கும் போது நம் தேவைகளுக்கான தேவனை நோக்கி நம் கையை நீட்டுகிறோம். அதுவும் சும்மா அல்ல, நம் விசுவாசத்தைக் கையில் வைத்து நீட்டுகிறோம். நம் தேவைகளுக்கு முதலிலேயே தேவனை நோக்கி கை நீட்டிவிட்டோமானால் வேறு யாரிடமும் நீட்ட வேண்டிய அவசியம் இருக்காது. நம்முடைய விசுவாச வளர்ச்சிக்கும் இது உதவி செய்கிறது... ஓட்டத்தை ஜெயமாக முடிக்கவும் உதவி செய்யும்.

தேவனை முதலிடத்தில் வைத்தால்தான் நமக்கு ஐசுவரியத்தைத் தருவாரா? இல்லாவிட்டால் தரமாட்டாரா? இப்படியெல்லாம் கேள்வி கேட்டால்? சரி ஆனால் இதற்கான பதிலையும் கேள்வியாகத்தான் கேட்க முடியும்! உங்கள் வாழ்க்கையில் தேவனை முன்னிறுத்தாமல் வேறே யாரை முன்னிறுத்தப் போகிறீர்களாம்? சாத்தானையா?

நம்முடைய தேவனைப் பற்றி நாம் அதிகம், ஏன் முழுமையாகத் தெரிந்து வைத்திருக்க வேண்டும். அது ஒரே நாளில் நடக்கிற காரியமல்லவென்பதால், அதுதினமும் அவரைக்குறித்த அறிவில் வளர வேண்டும். மாம்சத்தின்படி எனக்கு அப்பாவாக இருக்கிறவரைப் பற்றி யாராவது என்னிடத்தில் விசாரித்தால் ... "அவர் பெயர் எல்க்கையா, செஸ் **(chess)** விளையாடுவார்கள், ஹிந்தி பாடல்கள் கேட்பதில் விருப்பம் உள்ளவர்கள், வேட்டை அனுபவங்கள் உண்டு, அதிகம் கோபப்படுவார்கள், என் மீது அதிகம் அன்பு வைத்திருந்தார்கள் இவ்வளவுதான் தெரியும்" என்று முடித்தால்? இது போதாது, அப்பாவினுடைய புத்தகம் எழுத வேண்டும், பக்கம் பக்கமாக எழுத வேண்டும். சுயசரிதம் **(Autobiography)** எழுத வேண்டும்!

இப்படியிருக்க நம் ஆவியின் தேவனைப் பற்றி நாம் அறிந்து எழுத வேண்டுமானால்? வானத்தையே பேப்பராக மாற்ற வேண்டியதாயிருக்கும். (வெளி. 6:14)

எல்லா மரமும் பேனாவானாலும்,

எல்லா ஜலமும் மையானாலுமே...

ஆகாயத்தைத் தாளாக்கி,

அதிலெல்லாம் எழுதினாலும்

அன்பர் அன்பை யாரால் கூறலாம்...

தேவனைப் பற்றிய விவரங்களை அனுதினமும் புதிது புதியதாக, நிறைய நிறைய வேதம் வாசித்து அறிந்து கொள்கிறோம். பிரகாசமுள்ள மனக்கண்களுக்காக ஜெபிக்கும்போது, பரிசுத்தாவியானவர் நிறைய

காரியங்களைக் கற்றுத் தருகிறார். இதைச் செய்வதால் நமக்கு என்ன கிடைக்கிறது?

சகல விதமான ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் (ஒரு கணக்குக்காக 1,00,000 என்று வைத்துக் கொள்வோம்) அதன் நிழலாட்டமான உலக ஆசீர்வாதங்கள் 1,00,000—ம் நமக்குக் கிடைக்கிறது. மரம் இருந்தால் நிழலும் உண்டு. நிழலினூடே கடந்து நிஜத்தை அடையும் உன்னத அனுபவம் இது! (2 பேதுரு. 1:3)

பரிசுத்தவான்களிடத்தில் நமக்கு உண்டாயிருக்கிற சுதந்தரத்தின் மகிமையின் ஐசுவரியம் என்னென்ன?

பரலோகத்திலுள்ள எல்லாக் காரியங்களிலேயும் நமக்கு சொத்துரிமை உண்டு.

... பரலோகத்தில் அதிக மேன்மையும் நிலையுள்ளதுமான சுதந்திரம் உங்களுக்கு உண்டென்று அறிந்து, உங்கள் ஆஸ்திகளையும் சந்தோஷமாகக் கொள்ளையிடக் கொடுத்தீர்கள். எபி. 10:34

பரலோகத்திலுள்ளதெல்லாம் நமக்குத்தான்! பிதாவாகிய தேவன் இயேசுவுடன் சேர்த்து எல்லாவற்றையுமே நமக்கு கொடுத்து விட்டார், உயில் எழுதி வைத்துவிட்டார்.

இயேசு மரித்து அந்த உயிலுக்கு உயிர் கொடுத்தார். இப்போது அந்த ஆசீர்வாதங்கள் ஜீவனுள்ள பிரமாணமாக நம் கைகளில்!

பரலோகத்தில் என்னவெல்லாம் உண்டு?

நம் நீதிகளுக்கேற்ற பலன் **(Gift**)— கிரீடம் — இரத்தினக்கற்கள் — சிங்காசனங்கள் —மாளிகைகள் — இன்னும் கண்கள் காணாத, காதுகளால் கேளாத பாக்கியங்கள் உண்டு. மத். 5:12

தேவனுடைய வாரிசாகிறோம், அவருடைய பிள்ளைகள் என்ற தகுதி வருகிறது. மத். 5:45

நமக்குக் கொடுக்கப்படுகிற மகிமையில் பிரதானமானது "நித்திய ஜீவன்" என்றென்றும் சாகாமல்... — யுகா யுகமாக — பசுமையாக — **evergreen** ஆக! ரோமர். 2:7

... பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும்; புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம். ரோமர். 6:4

இந்த உலகத்திலேயே நாம் புதிதான ஜீவனுள்ளவர்களாய் வாழ முடிகிறது. பரலோகத்தின் மகிமையான வாழ்க்கையை இந்த உலகத்திலேயே வாழ்ந்து காட்டக்கூடிய பாக்கியம் கிடைக்கிறது. பரலோகத்தின் "முன்ருசி" என்று கூடச் சொல்லலாம். பரலோகம் எப்படி இருக்கும் என்று ருசி பார்ப்பதற்காக ஒரு கரண்டியில் **(spoon)** எடுத்து சுவைத்துப் பார்ப்பதைப் போல. அதாவது இந்த உலகத்திற்கான ஆசீர்வாதங்கள். பரலோகத்திலுள்ள ஐசுவரியங்கள்,

சுகஜீவியம், சமாதானம், சந்தோஷம், சவுக்கியம் எல்லாவற்றையும் இங்கேயே அனுபவிக்க சந்தர்ப்பம் கிடைக்கிறது! இன்னும் வேதனை, வறுமை, கண்ணீர், வியாதியை அனுபவித்துக் கொண்டிருப்போமானால்; அது பரலோகத்தின் முன்ருசி அல்ல. பரலோகத்தில் அவையெல்லாம் கிடையாதே! அதனால் நம்முடைய கரண்டியில் இருப்பது பரலோகத்திலுள்ளவைகள் அல்லவென்று அறியலாம். அப்படியானால் நீங்கள் அதை எதிலிருந்து எடுத்தீர்கள்? சந்தேகமேயில்லாமல் பாதாளத்திலிருந்து தான் என்பதை அறியலாம். கவலை, கண்ணீர், துக்கம், சாபம் சாத்தானிடம்தான் உண்டு, அவன் இதையெல்லாம் தன்னுடைய பாதாளத்தின் அறைகளில்தான் வைத்திருக்கிறான். சட்டியில் இருப்பதுதான் அகப்பையில் வரும்! நம்முடைய கரண்டியைப் பரலோகத்திற்குள் நீட்டுவோம்!

தாம் மகிமைக்காக எத்தனமாக்கின கிருபாபாத்திரங்கள் மேல் தம்முடைய மகிமையின் ஐசுவரியத்தைத் தெரியப்படுத்தவும் சித்தமாய், ... ரோமர். 9:23

நம்மை மகிமைப்படுத்துவதற்காகவே, நம்மை பூமியெங்கும் புகழ்ச்சியாக வைப்பதற்காகவே, நம்மை முன்குறித்தார், தெரிந்து கொண்டார், அழைத்தார். நாம் அழகாக இருக்கிறோமென்றோ, பணக்காரர்கள் என்றோ, நிறைய படித்திருக்கிறோமென்றோ, புத்திசாலியென்றோ நம்மை அழைக்காமல், தன்னுடைய கிருபையால் அழைத்தார். அதாவது தகுதியில்லாமல் ஜீரோவாக **(zero - '0')** இருந்த நம்முடைய இடப்பக்கத்தில் வந்து நின்றார்! 10... 100... 1000... 10000.... 100000... இப்படியாக நம் **zero** அதிகமாக ஆக மதிப்பும் அதிகரிக்கிறது! நம்முடைய தகுதி எந்த அளவுக்கு குறைவாக இருக்கிறதோ, அந்த அளவிற்கு அவர் நிறைவாக வருகிறார். அவருடைய கிருபை நம்முடைய ஜீரோக்களின் மதிப்பை உயர்த்துகின்றன. "இல்லாதவைகளை" தெரிந்துகொண்டு — ***"0"*** க்களைத் தெரிந்துகொண்டு, அவற்றின் மேல் தன்னுடைய மகிமையான மாளிகையையே கட்டுகிறார்!

கிறிஸ்துவை எழுப்பி, அவரிடம் நடப்பித்த பலத்த சத்துவம் என்ன? நம்மிடம் காண்பிக்கும் தம்முடைய மகா மேன்மையான மகத்துவம் என்ன?

"தேவனுடைய பலத்த சத்துவத்தால் எனக்கு அளிக்கப்பட்ட வரமாகிய அவருடைய கிருபையினாலே இந்தச் சுவிசேஷத்திற்கு ஊழியக்காரனானேன். எபே. 3:7" ஒவ்வொன்றுக்கும் விலைக்கிரையம் கொடுக்க வேண்டியதாயிருந்த நியாயப்பிரமாணத்தின் கடினமானச் சூழ்நிலையை மாற்றி, நமக்கு எல்லாவற்றையும் இலவசமாகக் கொடுக்க வேண்டும் என்பதே தேவனுடைய விருப்பம். அதற்காகத் தன்னுடைய பிள்ளையாகிய இயேசுவை பாடுகட்குட்படுத்தி, அவருடைய தகுதியினால் நமக்கு வாக்குத்தத்தங்களை இலவசமாக்கினார். வாக்குத்தத்தங்களின் முற்பகுதியில் ஒட்டிக்கொண்டிருந்த கட்டளைகளை இயேசுவின் சிலுவை மரணத்தின் மூலம் அகற்றி, கிருபையாக, எளிய விசுவாச அறிக்கையின் மூலமாக அவை நமக்கு வரும்படிச் செய்தார். கரும்பு தின்பதற்கு கூலி! கரும்பு இருக்க... வேம்பைத் தின்றால்?

இயேசு கிறிஸ்து நமக்காகச் செய்து முடித்துவிட்ட எதையும் நாம் தொடர

வேண்டியதில்லை. அவர் சிலுவையில் "முடிந்தது" என்றார். "இன்னும் கொஞ்சம் பாடுகள் மீதி இருக்கிறது, அதை நீ அனுபவி" என்று சொல்லவில்லை.

"சிலுவையை இறக்கி விட்டு இயேசுவின் பின் சிரித்த முகமாய் சென்றிடுவேன்" என்று பாடுவோம். சத்தியம் தெரியாததினால் சிலுவையை சுமந்து கொண்டிருந்தவர்கள், இனிமேல் இறக்கி வைத்துவிடலாம். (மத். 11:28)

அண்டார்ட்டிக்காவில் எங்கே திரும்பினாலும் பனிமலைகள், பனிகட்டிகள், பனிப்பொடிகள்தான். ஆனால் அந்த பனிக்கட்டிகளுக்குக் கீழே பல ஆண்டுகளாக எரிமலை உறுமிக்கொண்டிருப்பது புதிய தகவல். தகவல்தான் புதுசு, எரிமலையென்னவோ பழசுதான். இந்தத் தகவலைக் கண்டுபிடித்த அமெரிக்கா, இங்கிலாந்து விஞ்ஞானிகள் பிறப்பதற்கு முன்னதாகவே இது உறுமிக்கொண்டுதான் இருக்கிறது, அந்தரங்கத்தில், இரகசியத்தில்! பனிக்கட்டிகளில் ஆழமான துளைகள் போட்டுப் பார்த்தபோது, எரிமலைக்குழம்புகளும், சாம்பல்களும் கிடைத்துள்ளன.

இயேசு கிறிஸ்துவின் சிலுவைப் பாடுகள், அதன்மூலமாக வரப்போகிற ஆசீர்வாத இரகசியங்கள் எல்லாம் உலகத்தோற்றத்திற்கு முன்னதாகவே இரகசியமாக இருந்த காரியங்கள்தான். இது என்னவோ புதிதாக முளைத்தெழும்பிய நூதன உபதேசம் அல்ல. சாத்தான் கொண்டுவந்திருக்கும் ஒப்பாரி, கண்ணீர், பாடுகள், அலங்கோலம், அல்லகோலம்தான் நூதன உபதேசம். (மத். 13:35)

நியாயப்பிரமாணவாதிகளால் இது மறைக்கப்பட்டது. இது வெளியரங்கமாகத்தான் இருந்தது, வேறொன்று வந்து இதை மறைத்தபோது இரகசியமாக்கப்பட்டது. இயேசு நமக்காக மரித்து உயிர்த்து எழுந்தபிறகும், புதிய உடன்படிக்கையைத் தந்தபிறகும், விசுவாசத்தின் மூலமாக அதை வேலைசெய்ய வைக்கும் எளிய முறையைத் தந்தபிறகும், விடியலைக் காணோம். **எங்காவது ஒரு சில சேவல் கோழிகள் எழும்பிக் கூவிய போதும், அதன் சத்தம் வெளியே கேட்டுவிடக்கூடாது என்பதற்காக சாத்தான் அவைகளின் வாய்களைக் கட்டினான். என்றாலும் கெட்டிக்காரச் சேவல்கள் கட்டுகளை அவிழ்த்து எறிந்துவிட்டு கூவிக்கொண்டுதான் இருக்கின்றன.**

இரகசியங்கள் கட்டவிழ்க்கப்படுகின்றன, எரிமலைகளைப் போல. ஏதோ ஒரு காலக்கட்டத்தில் புதிய ஏற்பாட்டின் சபை நியாயப்பிரமாண பிரசங்கியாராக மாறிப்போனது. எங்கே தவறு நடந்தது? யார் மூலமாக இது நடந்தது? என்று ஆராய்ச்சி செய்து கொண்டிருப்பதால் பிரயோஜனமில்லை. நமக்குத் தேவை புதிய திராட்சை ரசம், ருசி நிறைந்த திராட்சை ரசம்! இயேசு நமக்கு தந்திருக்கிறார். பழைய இரசத்தை அதில் ஊற்ற விட வேண்டாம், புளித்துப் போய்விடும். இயேசுவாகிய சரீரமாகிய சபைக்கு அது அலர்ஜியாகும்போது, அவர் வாந்தி பண்ணிப்போட வேண்டியதாயிருக்கும். (வெளி. 3:16)

பாரம்பரியம் கிருபையை கெடுத்தது, வசனம் வேலை செய்யாமல் போனது.

இனியும் அறியாமையைப் பின்தொடராமல் திரும்புவோம். சத்தியத்தை அறிவிக்கும் பிரசங்கியார் மேல் சந்தேகமா? நியாயமான சந்தேகம்தான், ஏனென்றால் காலம் கெட்டுக் கிடக்கிறது, யாரை நம்பறதுன்னே தெரியவில்லை... அங்கலாய்ப்புகள்! சத்தியத்தை அறிந்து கொண்டோமானால் யாரும் நம்மை வஞ்சிக்க முடியாது. ஒரு காலத்தில் பொய்யினால் வஞ்சிக்கப்பட்டுவிட்டோம் என்பதற்காக, சத்தியத்தைப் பார்த்து சந்தேகப்பட்டால் எப்படி? கொசுவுக்குப் பயந்து கோட்டையைக் கொளுத்தினால்? நஷ்டம் கோட்டைக்குச் சொந்தக்காரனுக்குத்தான்! கொசு சாகாது, தப்பித்துப் பறந்து வேறு கோட்டைக்குள் புகுந்துவிடும்.

பிதா குமாரன் பரிசுத்தாவியானவரைப் பற்றிய சரியான புரிந்து கொள்ளுதல்; சாத்தானின் வஞ்சக வியூகத்திற்கு நம்மை விலக்கித் தப்புவிக்கும். பரிசுத்தாவியானவரே உங்கள் திசைகாட்டி. நில்லுங்கள், கவனியுங்கள், செல்லுங்கள் ...

இந்த எரிமலையினால் இன்னொரு காரியமும் நடந்தேறுகிறது. பூமி வெப்பமடைவதினால் மாத்திரமல்ல, இந்த எரிமலைகளின் கொதிப்பினாலும் பனிமலைகள் அளவுக்கு அதிகமாக உருகிவருகிறது. தோல்வியில் முடிக்கப்பட்ட நியாயப்பிரமாண உபதேசங்கள் ரொம்பக்காலத்துக்கு நிற்காது, பனியாக உருகி விடும். தலைநசுக்கப்பட்ட சாத்தானுக்கு இனியொரு தலை உருவாகப்போவதில்லை. தோல்வி என்று நெற்றியில் முத்திரை வாங்கிய சாத்தான் இனி ஜெயிப்பதெப்படி?

## உள்ளான மனுஷனில் பலப்பட வேண்டும்:

மாம்சமும் ரத்தமுமான நம் சரீரம் மனுஷனல்ல, அது வெறும் கூடாரம் மாத்திரம்தான். நம் ஆத்துமாதான் உள்ளான மனுஷன். நம் ஆத்துமாதான் சகலத்தையும் தீர்மானிக்கிறது, முடிவெடுக்கிறது, சரீரத்தை ஆளுகை செய்து நடத்துகிறது. மனம் போன போக்கிலே கண் போனது, கால் போனது, மனிதனும் போனான், தன்னை உருவாக்கிய தேவனை மறந்தும் போனான்!

நம் ஆத்துமாவின் மையமாக ஆவி இருக்கிறது. இது மனசாட்சி என்று உலகத்தாரால் அழைக்கப்படுகிறது. இது தேவனை அறியாத ஜனங்களுக்கும் உண்டு. ஏனென்றால் எல்லோரையும் ஒரே தேவன் தான் உருவாக்கினார், அவர்தான் நம் பிதாவாகிய தேவன், நம் இரட்சகர் இயேசுவின் அப்பா! (நமக்கும் அவர்தான் அப்பா!) இந்த ஆவி ஒரு வெற்றிடமாக இருக்கிறது (எதுவுமில்லாமல் காலியாக — **Empty** ஆக.) தான் ஒருவர் மாத்திரமே அந்த வெற்றிடத்தை நிரப்ப வேண்டுமென்பது தேவனுடைய திட்டமாக இருந்தது. ஆனால் மனிதனோ அந்த இடத்தில் உலக காரியங்களால் நிரப்ப தொடர் முயற்சி செய்து கொண்டே இருக்கிறான். ஏதேன் தோட்டத்தில் இந்த மதியீனமான காரியம் ஏவாளால் துவக்கி வைக்கப்பட்டது. தேவனோடு சஞ்சரிக்கும் அளவுக்குப் பரிசுத்தமாகப் படைக்கப்பட்டிருந்த மனிதன் சாத்தானின் வார்த்தைகளால் பிடிக்கப்பட்டு அவனோடு சஞ்சரிக்கும்

பயங்கரமான, பரிதாபகரமான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுப் போனான்.

இப்படியாக மனிதனின் ஆவியைச் சாத்தான் தன்னுடைய இராஜ்ஜியத்தின் காரியங்களைக் கொண்டு நிரப்பிவிட்டான். இப்படிப்பட்ட மனிதன் என்றென்றும் மரிக்காமல் ஜீவனோடிருந்தால் அது அவனுக்கும் ஆபத்து, இந்த உலகத்துக்கும் ஆபத்து! அதனால் தேவன் ஜீவவிருட்சத்தின் கனியை அவன் பறித்து புசித்துவிடக் கூடாது என்பதற்காக வழியை அடைத்துவிடுகிறார், மனிதனுடைய ஆயுள் காலத்திற்கு ஒரு வரையறையை (எல்லையை — **restriction**) ஏற்படுத்திவிடுகிறார். 70 வயது வரை வாழும் ஒரு பாவியான சராசரி மனிதனால் இந்த உலகத்திற்கு ஏற்படும் தீமைகளை நாம் ஒப்பீடு செய்யும்போது; ஒரு நிரந்தர ஆயுசுள்ள மனிதனால் எவ்வளவாய் பயங்கரம் ஏற்படும் என்பதைச் சற்று சிந்தித்துப் பார்ப்போம்(?) மனுக்குலத்தின் நன்மைக்காகவே இதைச் செய்தார்.

தன்னைவிட்டு விலகி, தன்னைச் சாத்தானுக்கு ஒப்புக் கொடுத்த மனிதன் மீது தேவன் காட்டும் அன்பை பாருங்கள்! நம் ஒவ்வொருவருடைய இருதயத்திலும் வாசம் செய்வதே தேவனுடைய விருப்பமாயிருந்தது. ஆனால் மனிதன் தன் இருதயத்தில் சாத்தானுடைய காரியங்களுக்கு இடம் கொடுத்துவிட்டதால் தேவனால் அங்கே குடியிருக்க முடியாமல் போனது, ஏனென்றால் நம் தேவன் மகா பரிசுத்தர்.

இதனால் தேவனுக்கும் மனிதனுக்கும் நடுவாக பெரிய இடைவெளி ஏற்பட்டுவிட்டது. அவருடைய பரிசுத்தம் மனிதனிடம் நெருங்க முடியாதபடி செய்ததே தவிர, தேவன் மனிதனை வெறுத்துவிடவில்லை. அவர் அன்றும் இன்றும் என்றும் மாறாத அன்புள்ளவராகவே இருக்கிறார். அதனால்தான் பழைய ஏற்பாட்டின் காலத்தில் அவர் தன்னுடைய ஜனங்களுடன் தொடர்புகொள்வதில் நிறைய இடையூறுகள் இருந்தன. அவருடைய ஆவியானவர் தற்காலிகமாக தேவ மனிதர்கள் மேல் இறங்கி, செய்ய வேண்டிய காரியங்களைச் செய்து முடித்தபிறகு மீண்டும் போய்விடுவார். தேவனுடைய பிரசன்னம், வசனங்கள், நடத்துதல்கள், நெருக்கம் எல்லாம் அக்காலங்களில் மிக மிகக் குறைவானதாக மிக அபூர்வமானதாகவே இருந்தது.

"... அந்நாட்களில் கர்த்தருடைய வசனம் அபூர்வமாயிருந்தது; பிரத்தியட்சமான தரிசனம் இருந்ததில்லை. 1 சாமு. 3:1". மல்கியா வரை இந்த நிலைமை நீடித்தது. இந்த நிலையை மாற்றி மீண்டும் இந்த உலகத்தை ஆரம்பக்கட்ட நிலைமைக்குக் கொண்டு வரவேண்டும் என்பது தேவனின் விருப்பமாக, ஏக்கமாக இருந்தது. ஆதாமும் ஏவாளும் சாத்தானால் விழுந்து போனவுடனேயே இதற்கான நடவடிக்கைகளைத் தேவன் எடுத்தார். 4000 வருஷங்களாக பல்வேறு காலக்கட்டங்களில், பல்வேறு சூழ்நிலைகளில், தன்னுடைய தீர்க்கதரிசிகளைக் கொண்டு இயேசுவின் பிறப்பைக்குறித்துத் தீர்க்கதரிசனம் உரைக்க வைத்தார். அவர்கள் சொன்ன தீர்க்கதரிசன வார்த்தைகள் கொஞ்சம் கொஞ்சமாக உருவம் பெற்றது. **கி.மு. முடிவு பெற்றது... கி.பி. உருவானது.**

*பழைய ஏற்பாட்டின் சூழ்நிலை தலைகீழாக மாறினது* **(entirely different).** *யெகோவாவாகிய தேவன் நம் அப்பாவானார். தேவன் வாசம் செய்ய முடியாமல் இருந்த இருதயங்கள் இயேசுவின் இரத்தத்தால் கழுவி சுத்திகரிக்கப்பட்டதால் தேவன் வந்து வாசம் செய்தார்.*

*மரணம் தோல்வியை சந்தித்தது. அதாவது மரணத்தின் மூலமாக மனிதனின் வாழ்க்கைக்கு முடிவுகட்டிவிடலாம் என்ற சாத்தானின் திட்டம் சுக்கல் நூறானது! (1 கொரி. 15:54)*

*பாதாளத்தின் வாசல்கள் மூடப்பட்டன. பாதாளத்திற்குள் இருந்து வல்லமைகள் புறப்பட்டு சபைக்குள் நுழைய முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. (மத். 16:18)*

*அனுதின வேத வாசிப்பு, தியானம் நம் உள்ளான மனுஷனுக்குப் போஷாக்கை அளிக்கிறது. நாம் ஒரு நேரம் சாப்பிடாவிட்டால் நம் சரீரம் சோர்ந்து போகிறது. ஒரு நாள் முழுவதும் சாப்பிடாவிட்டால் மயக்கம் வருகிறது. ஒரு வாரம் முழுவதும் சாப்பிடாவிட்டால் மரணம் சம்பவிக்கிறது. இதே சூழ்நிலைதான் வேதத்தைத் தியானிக்காத உள்ளான மனிதனுக்கும் நேரிடுகிறது.*

*ஒரு பிச்சைக்காரனுக்கு தன்னுடைய முற்பிதாக்களின் சுதந்திரமான ஒரு மாளிகை திடீரென்று கிடைக்கிறது. சந்தோஷத்தில், ஆச்சரியத்தில், அதிர்ச்சியில் திக்குமுக்காடிப்போன அவன் சாப்பிடாமல், உடுத்தியிருந்த கந்தல் துணியுடன், காலில் செருப்பில்லாமல் அந்த மாளிகையை நோக்கி புறப்படுகிறான். வெயில் எரிக்கிறது, கொஞ்சம் தண்ணீர் தரத்தானும் ஆளில்லை. பசி மயக்கம், கண்களை பஞ்சடைய வைத்தது ... பாதி வழியிலேயே மயக்கமாகி சுருண்டு விழுகிறான். சில மணி நேரங்கள் கழிகிறது, கவனிப்பார் யாருமில்லை. முடிவில்? அந்தோ பரிதாபம் செத்துப் போகிறான்!*

*இந்த சம்பவம்தான் சத்தியத்தை அறியாத சபைக்குட்பட்ட தேவபிள்ளைகளிடம் நடக்கிறது. வேத வசனங்களைப் பற்றிய அறிவில்லாததினால் சங்காரமாகிறார்கள். "செழிப்பு பிரசங்கமா? ஐயோ வேண்டாமடா சாமி", என்று ஓடுகிறார்களே? அப்படி ஓடிப்போகிறவர்கள் என்ன செய்கிறார்கள்? வீட்டுக்குள் போய், அறைவீட்டின் கதவைப் பூட்டி, "ஆண்டவரே ஆசீர்வதியும்" என்று ஜெபிக்கின்றனர்!* **(Plunder!)** *"கர்த்தரை நம்புகிறவன்* ***செழிப்பான் என்றுதான் வசனம் இருக்கிறதே ஒழிய, நாசமாக போவான்"*** *என்றா இருக்கிறது?*

*தேவன் நம் அப்பா,* **(Daddy!)** *தைரியமாக, சிரித்துக்கொண்டு போய் கேட்போம், நிச்சயம் தருவார். கூட்டத்தைக் கூட்டி அழுது ஒப்பாரி வைக்கச் சொல்லவில்லை!*

*"... இனி நீ அழுதுகொண்டிராய், உன் கூப்பிடுதலின் சத்தத்துக்கு அவர் உருக்கமாய் இரங்கி, அதைக் கேட்டவுடனே உனக்கு மறுஉத்தரவு அருளுவார். ஏசா. 30:19." நமக்காக உரைக்கப்பட்டத் தீர்க்கதரிசன வசனத்தைப் பாருங்கள்!*

விசுவாசிப்போம், விசுவாச வார்த்தையைப் பேசுவோம். வெறுங்கையும் முழம்போடும்! அதெப்படி? விசுவாச வார்த்தைகள் இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல அழைக்கும் (ரோமர். 4:17) இல்லாத இடத்தில் ஒன்றை உருவாக்கும்!

ஆசீர்வாதத்தை பிரசங்கிப்போம், சாபம் மாறும். சாபத்தை பிரசங்கிக்காதீர்கள், ஆசீர்வாதம் வந்த வழியிலேயே திரும்பிவிடும். சத்தியத்தை அறிந்து கொள்ளாவிட்டால் என்ன? தெரிந்தவரையில் போதும் என்றிருக்க வேண்டாம், மோசம் போய்விடுவீர்கள். சத்தியத்தை அறியாததினால்தான் சாத்தான் ஏவாளை மோசம் போக்கினான், அவளைத் தன் பொய்யினால் கெடுத்தான்.

... என் நேசருக்கு மகா செழிப்பான மேட்டிலே ஒரு திராட்சத் தோட்டம் உண்டு. (!) ஏசா. 5:1

இயேசுவின் தோட்டம் பாலைவனத்தில் இல்லை, முள்ளுக்காட்டிலும் இல்லை. அங்கேயெல்லாம் விதைபோட்டாலும் முளைக்காது. உலகத்தின் துவக்க முதல் முடிவுவரை மனுக்குலம் செழித்திருக்க வேண்டும் என்பதே தேவனுடைய திட்டமாக, சித்தமாக இருந்தது. உருப்படாமல் போகவா பூமியையும் அதன் நிறைவையும் உண்டாக்கினார்?

மனிதன் வாழவே பிறந்திருக்கிறான். வாழ்க்கை வாழ்வதற்கே, சாவதற்காக அல்ல. (அப்படியிருக்குமானால் அது வாழ்க்கையல்ல சாழ்க்கை!) மனுஷன் வருத்தம் அனுபவிக்கவே பிறந்திருக்கிறான் என்று யோபு தப்புத்தப்பாகச் சொன்னான். ஏனென்றால் அவனுக்குச் சத்தியம் தெரிந்திருக்கவில்லை, ஏனென்றால் சத்தியமான இயேசு அப்போது வெளிப்படவில்லை. வழி தெரியவில்லை, ஏனென்றால் பழைய ஏற்பாட்டின் காலத்தில் வெளிப்படாதிருந்த இயேசுதான் ஒரே வழி. ஜீவன் ஊஞ்சலாடியது, வேறு வழியில்லை, ஜீவாதிபதி இயேசு மல்கியாவுக்குப்பிறகுதான் வெளிப்பட்டார். யோபுவுக்குத் தெரிந்தது அவ்வளவுதான்... பேசினார், அட, உங்களுக்கு தெரிந்ததும் அவ்வளவுதானா? அவன் கி.மு. நீங்கள் கி.பி. அல்லவா? அடுத்த தோட்டத்துக்குள் நிற்கிற கள்ளிச்செடியை பிடித்து, இழுத்து, வளைத்து, உங்க ரோஜா தோட்டத்திற்குள் பதியன் போடாதீர்கள், நற்கந்தம் மாறி துர்க்கந்தம் வீச ஆரம்பித்துவிடும்!

நம் அப்பா தங்கமயமான மாளிகையில் வாழ்கிறார், பிள்ளை ரோட்டோரம் திருவோட்டோடு திரிகிறான். இந்த கண்றாவியை எங்கேயாவது பார்த்திருக்கீங்களா? உலகத்தில் நடக்கவில்லை, ஆனால் தேவ சபைக்குள் நடக்கிறது! நம் தகப்பனார் குடியிருக்கிற அந்த தங்க பரலோகத்தின் மேலானவைகளையே நாடுங்கள், கீழானவைகள்(தரித்திரம்) தானாகவே தொலைந்து போய்விடும். (குழந்தையின் கையில் பிஸ்கெட்டைக்கொடுத்துப் பாருங்கள், கையிலிருக்கும் கடலையை தூர எறிந்துவிடும். கேக்கைக் கொடுங்கள், பிஸ்கெட்டை எறிந்துவிடும். மக்ரோனைக் கொடுங்கள்... கேக்கையே எறிந்துவிடும்.)

அப்பாவிடமிருந்து **best** ஆனதை வாங்குங்கள். இந்த விஷயத்தில் குழந்தையாக மாறிவிடுங்கள்.

## விசுவாசத்தால் கிறிஸ்து இருதயத்தில் வாசமாயிருக்க :

ஒழுங்கும் கிரமுமான வேத தியான & ஜெப வாழ்க்கை. திங்கட்கிழமை காலையில் சாப்பிட்ட நாலு இட்டிலி செவ்வாய்க்கிழமைக்கு உதவாது. புதன் கிழமை காலை செய்த வேத தியானம் வியாழக்கிழமையில் காரியத்துக்குதவாது. அனுதினமும் சத்தியத்தை மேய்ந்து கொள்ளுவோம், அனல் மூட்டிக்கொள்ளுவோம். ஒரே நாளில் ஒரு அண்டா பிரியாணியை முழுங்கிவிட்டு, அந்த மாதம் முழுவதும் உணவு உண்ணாமல் இருந்தால்... அஜீரணம் வந்து, வாந்தி வந்து, ஆஸ்பத்திரிக்கு போய்... அதைப்போலவே, ஒருநாள் பைபிள் வாசித்துவிட்டு ஒரு மாதம் பைபிள் வாசிக்காமல் இருந்தால்?

வேதத்தின் வசன வார்த்தைகள்தான் இயேசு! இயேசுதான் வார்த்தையாக மாறி வேதத்தின் மேல் எழுத்தாக மாறியிருக்கிறார். இயேசுவை நம் இருதயத்தில் தக்கவைத்துக் கொள்ள வேண்டுமானால் வேத தியானத்தைத் தவிர வேறு வழியில்லை, இதைச்செய்யாமல் முட்டிமுட்டி ஜெபிப்பதால் பலனில்லை, மண்டை உடைவதுதான் மிச்சம்.

சாத்தானுக்குக் கதவை மூடிவிட வேண்டும், இல்லாவிட்டால் இயேசுவின் பிரசனத்தை அவன் வந்து கெடுத்துவிடுவான். அவன் பேச்சைக் கேட்கவே கேட்க வேண்டாம். நீங்கள் சாகவே சாவதில்லையென்பான்! கோழிக்குஞ்சின்மேல் கழுகுக்கு அன்பா? நம்பாதீர்கள்!

வேதம் வாசித்து, அதன்படி ஜெபித்தால் ... நம் உள்ளத்தில் இருந்து அன்பு கசியும். இயேசு இருக்கும் இருதயத்தில் இருந்து அதைத்தவிர வேறு ஏதாவது கசிந்தால்தான் ஆச்சரியம்!

இயேசு இருதயத்தில் இருந்தால் தன்னிச்சையாக (**automatic** ஆக) கனிகள் பழுத்துத் தொங்கும். இயேசு செடி, நாம் கொடிகள், இணைந்திருந்தால் கனி!

இயேசு நம் இருதயத்தில் இருந்தால் நாம் அன்பாகவே இருப்போம், ஏனென்றால் தேவன் அன்பாகவே இருக்கிறார். ஒரு சாக்லேட்டை எந்தப்பக்கத்தில் கடித்தாலும் இனிக்கும்!

## பணஆசையை உருவாக்காத பணம்:

அது எப்படி? நீதிமான் தனக்குக் கிடைத்த பணத்தை வைத்துப் பாவம் செய்ய முடியாது, ஏனென்றால் அவன் அதை விசுவாசத்தால் பெற்றிருக்கிறான். வாக்குத்தத்த கதவோரங்களில் அவன் காத்திருந்த காலங்களில் நிறைய கற்றுக் கொள்கிறான். பாவத்தை ஜெயிக்க பழகிவிடுகிறான். அதனால் அந்த பணத்தால் தேவசித்தம் மாத்திரம்தான் நிறைவேறும். ஊழியத்திற்கென்று காணிக்கை வாங்கி, கார், பங்களா, நகை, நட்டு வாங்குகிறார்களே? என்றால்

... அதைத்தான் சொல்கிறோம். அதிலென்ன தவறு? நம் ஜீவனத்திற்குத் தேவையானதைத்தானே வாங்குகிறார்கள்? சத்தியத்தை அறிந்தவன் தேவையில்லாததை வாங்க மாட்டான்.

பணத்தைப் பற்றிய தவறான அபிப்பிராயங்கள் அழிக்கப்பட வேண்டும். பணம் எந்த மனிதனையும் தவறான வழிக்குக் கொண்டுப் போவதில்லை, மனிதன்தான் பணத்தை தவறான வழிக்குக் கொண்டுப் போகிறான்! பிரச்சனை பணத்திலல்ல, பாவ எண்ணத்தில்தான். பாவத்தால் வரும் பிரச்சனையை பணத்தின் மேல் கொட்டித் தாளிக்கிறான் மனிதன்! பணம் வந்ததினால்தான் பாவம் செய்தேன் என்கிறான். இல்லையில்லை, நீ செய்த பாவத்தில் மாட்டிக்கொண்டு முழிக்கிறது பணம்! தவறான ஒன்றை மனிதனுக்குத் தேவன் எப்படித் தருவார்?

உலகப்புகழ்பெற்ற அமெரிக்க தலைவரான ஆபிரகாம் லிங்கன், (இவர் ஒரு கிறிஸ்தவர் — கிறிஸ்துவை உடைய கிறிஸ்தவர்) வளமான வாழ்க்கையை அமைக்க சில பொன்மொழிகளைத் தருகிறார்.

* சேமிப்பை அலட்சியப்படுத்தி விட்டு நம் வாழ்க்கைக்குள் வளமையை கொண்டு வர முடியாது. (உபா. 28:8, நீதி. 3:10)

* கடன் வாங்கி, பாதுகாப்பை பெற முடியாது. (நீதி. 22:7)

* கூலி கொடுப்பவனை ஊனமாக்கி (சுரண்டி, திருடி, கள்ளக்கணக்கு எழுதி) கூலி வாங்குபவனுக்கு உதவ முடியாது. (தீத்து. 2:10)

## தேவனைப் பற்றிய அரைகுறையான அறிவு, ஞானம்:

கொஞ்சம் தெரிந்து வைத்துக்கொண்டால் போதும் என்றிருக்கக்கூடாது. அவரை அறிகிற அறிவில் அனுதினமும் வளர வேண்டும். புதிது புதிதாகத் தெரிந்து கொள்ள வேண்டும். அதன் மூலமாக கிருபை, சமாதானம், பரிசுத்தம், ஐசுவரியம் பெருகும். சரியாக அறிந்து கொள்ளப்படாத, புரிந்து கொள்ளப்படாத அப்பாவிடம் நமக்கு விசுவாசம் வராது, விசுவாசம் வராவிட்டால் ஜெபிக்க முடியாது. வாயளவில் ஜெபிக்கலாம், ஆனால் அந்த ஜெபத்தால் பிரயோஜனம் இல்லை.

"... எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசவாசத்தோடே கேட்கக்கடவன்; சந்தேகப்படுகிறவன் ... தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக. யாக். 1:6,7

தேவனைப் பற்றின அறிவுதான் அஸ்திபாரம். அஸ்திபாரம் இல்லாமல் வீடும் இல்லை, மேல்மாடியும் இல்லை.

## சிறப்பானதைக் கொடுப்போம்:

நல்ல விதைகளைத் தேர்வு செய்வோம், இது மிக முக்கியமானது, ஏனென்று பார்ப்போம்.

*ஒரு செல்வந்தர் தன்னிடம் நெடுங்காலமாக வேலை செய்த, தம் நம்பிக்கைக்குகந்த ஒரு வேலைக்காரனைக் கூப்பிட்டார். 5 கோடி ரூபாயைக் கையில் கொடுத்தார். "என்னுடைய முடிவின் நாட்களை ஒரு ஆடம்பரமான பங்களாவில் கழிக்க விரும்புகிறேன். அதைக் கட்டிமுடிக்க வேண்டிய முழுப்பொறுப்பும் உன்னுடையது" என்று சொல்லி விட்டார். அந்த வேலைக்காரனோ உத்தமனாக வேஷம் போட்ட கபடமுள்ள மனிதன். 3 கோடி ரூபாயில் பங்களாவைக் கட்டி முடித்துவிட்டு, அதற்கு 5 கோடி செலவானதாக கணக்குக் காட்டி, மீதி 2 கோடி ரூபாயை பையில் போட்டுக்கொண்டான்.*

*பணக்கார எஜமானன் அவன் கட்டியிருந்த பங்களாவை வந்து பார்வையிட்டார், பாராட்டினார், "என்மேல் அன்பு வைத்து எனக்காக இவ்வளவு அழகாக இந்த வீட்டைக் கட்டின உனக்கே அதைப் பரிசளிக்கிறேன்" என்று சொல்லி, வீட்டுச் சாவியை அவனிடம் நீட்டினார். நல்ல தரமில்லாத இரண்டாம் தர பொருட்களை* **(second rate products)** *ஐ உபயோகித்து, அவன் கள்ளக்கணக்கு எழுதி படாதபாடு பட்டு கட்டிய வீடு அவனைப்பார்த்து கிண்டலாக சிரித்தது!*

*தேவ இராஜ்ஜியம் நமக்காகத்தான், நமக்காகத்தான் விதைக்கிறோம்! விசுவாசிக்கிறவன் கொடுப்பான். விதைத்தால்தான் அறுவடை என்ற பழைய பிரமாணத்தை மாற்றி, முதலில் அறுவடையைத் தந்துவிட்டு, விதைப்பை நம் விருப்பத்திற்கு விட்டிருக்கும் நம் தேவன் இயேசுவின் இராஜ்ஜியத்திற்கு கொடுக்காமலிருக்கலாமா? நம் விதைப்பிற்கான பலன் நமக்குத்தான் வரப்போகிறது என்ற உண்மை விளங்கினால் சிறப்பானதைக் கொடுப்போம்.*

***(The best)!*** *திரும்ப நமக்கு கிடைப்பதெல்லாம்* **best** *ஆனதாக இருக்குமல்லவா?*

## ஒரு சில "ஏன்" ? கள்:

*எல்லா சபையினரும் ஒரே தேவனை, ஒரே இயேசுவை ஆராதித்தும், உபதேச வேறுபாடுகள்... அதனால் ஏற்படும் குழப்பங்கள், பிரிவினைகள், போட்டி, பொறாமைகள் இதற்கெல்லாம் என்ன காரணம்? இதற்கு முந்தைய புத்தகங்களில் இதுபற்றி நான் எழுதியிருந்தபோதிலும் முடிவான ஒரு காரணத்தை இப்போது தெரிந்து கொள்ள முடிகிறது. பழைய ஏற்பாட்டின் நிகழ்வுகளினடிப்படையில் செய்யப்படும் பிரசங்கங்கள், நியாயப்பிரமாணத்தின் கிரியை முயற்சிகள், இவைதான் உபதேச குழப்பங்களுக்கு காரணம்.*

*பழைய ஏற்பாட்டின் பிரசங்கங்களால் பாவத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க முடியவில்லை, கமாதான்* **(comma)** *தான் போட முடிந்தது! முற்றுப்புள்ளி* **(fullstop)** *வைக்கவே இயேசுகிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தார்... மரித்தார்! பாவங்களுக்குக் "கமா" போடவைக்கும் பிரசங்கங்களில் முரண்பாடுகள் இருக்கத்தான் செய்யும். தாங்களே பாவத்திலிருந்து விடுதலை பெறாமல் இருக்கும் போது அடுத்தவருக்கு எப்படி விடுதலையை வாக்குப்பண்ண*

*முடியும்? ஒருமனப்பாடு இல்லையே என்று எங்கும் ஏங்கும் அங்கலாய்ப்புகள். பாவத்திலிருந்து பரிபூரணமாக விடுதலையைக் கையளிக்கும் புதிய ஏற்பாட்டின், புதிய உடன்படிக்கையின் பிரசங்கங்களால்தான் ஒருமனப்பாடு சாத்தியமாகும்.*

*பழைய ஏற்பாட்டில் சாம்பலாக இருந்தவர்களுக்கு, புதிய ஏற்பாட்டில் சிங்காரம் கிடைத்தது! அங்கே அழுதார்கள்... இங்கே சிரித்தார்கள். கதறிக் கண்ணீர் விட வேண்டிய சூழ்நிலையில் நம் அப்பா நம்மை வைக்கவில்லை. சந்தோஷமாகக் கேட்டாலே தருகிறார், ஜெபிக்கும்போது, சிரித்துக்கொண்டே ஜெபிப்போம்!*

*"நான் பண்ணுகிற ஒவ்வொரு விண்ணப்பத்திலும் உங்கள் அனைவருக்காகவும் எப்போதும் சந்தோஷத்தோடே விண்ணப்பம் பண்ணி... பிலி. 1:4"*

*அழுமூஞ்சிப்பிள்ளையை கண்டால் எங்கப்பாவுக்குப் பிடிக்காது! நமக்கு இந்த உலகத்தில் என்னென்ன பிரச்சனையுண்டோ எல்லாவற்றையும் சிலுவையில் முடித்துவிட்டார். இந்த உலகத்தில் என்னென்ன ஆசீர்வாதங்கள் உண்டோ எல்லாவற்றையும் உண்டாக்கி, நமக்குத் தந்தும் விட்டார். இன்னும் அழுவதற்கு என்ன இருக்கிறது. அழுதுதான் ஆக வேண்டுமானால் தேவன் நமக்காகச் செய்திருக்கும் நம்ப முடியாத கிரியைகளை நினைத்து "ஆனந்த கண்ணீர்" வேண்டுமானால் வடிப்போம்!*

*"... இனி நீ அழுதுகொண்டிராய் ... ஏசா. 30:19"*

*பிதா நம்முடைய அப்பா, அவருடைய தகுதி நம்மில் வெளிப்பட வேண்டும். பண்டாரம் பரதேசி போல இருந்தால்?*

*ஆபிரகாமின் ஆசீர்வாதம் நியாயப்பிரமாணம் வருவதற்கு முற்பட்டது. நியாயப்பிரமாணம் வருவதற்கு 430 வருஷங்களுக்கு முன்னதாகவே அவருக்கு ஆசீர்வாதங்கள் கொடுக்கப்பட்டன.*

*"... கிறிஸ்துவை முன்னிட்டுத் தேவனால் முன் உறுதிபண்ணப்பட்ட உடன்படிக்கையை நானூற்று முப்பது வருஷத்திற்குப்பின்பு உண்டான நியாயப்பிரமாணமானது தள்ளி, வாக்குத்தத்தத்தை வியர்த்தமாக்கமாட்டாது. கலா. 3:17"*

*ஆபிரகாம் பழைய ஏற்பாட்டுக்காரர், அதனால் "... தேவன் விசுவாசத்தினாலே புறஜாதிகளை நீதிமான்களாக்குகிறாரென்று வேதம் முன்னாகக் கண்டு: உனக்குள் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்று ஆபிரகாமுக்குச் சுவிசேஷமாய் முன்னறிவித்தது. கலா. 3:8"*

*உனக்குள் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் — ஆசீர்வாதம்தான் சுவிசேஷம், தரித்திரம் அல்ல. புறஜாதியாருக்கு இயேசுவை அறிவிக்கும்போது; அவருக்குள் இருக்கிற ஆசீர்வாதங்களையும் சேர்த்து அறிவிப்போம். அவரிடமிருந்து நாம் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை அவர்களுக்கு மாதிரி* **(sample)** *ஆகக் காட்டுவோம். இயேசு கிறிஸ்து ஒரு ஆசீர்வாதப் பெட்டகம்.*

**(Gift Hamper)** அவருக்குள் சகல பரிபூரணமும் உண்டு. ஜீவனத்துக்கும் பக்திவிருத்திக்கேதுவான சகலமும் உண்டு. பண்டாரம் பரதேசிக் கோலம் போட்டுக் கொண்டு, சுவிசேஷத்தை பிரசங்கிக்க போவீர்களானால் "திருடனுக்கு தேள் கொட்டிய நிலை" ஏற்படும். ஜாக்கிரதை!

தேவனின் அன்பு, மனதுருக்கம், இரக்கங்களின் ஐசுவரியம் இவைகளையே சொல்லிக்கொண்டிருந்தால் மக்களுக்கு குளிர் விட்டுவிடும், ஐஸ் குளிர்ச்சியில் யாரும் மனம் திரும்ப மாட்டார்கள். அதனால் அவர் பயங்கரமானவர், பட்சிக்கிற அக்கினி, நரகம், தீ, என்று பிரசங்கம் பண்ணினால்தான் பயந்து நடுங்கி மனம் திரும்புவார்கள் என்று நினைக்கிறார்கள், சொல்லுகிறார்கள், அப்படி பிரசங்கங்கள் செய்யவும் செய்கிறார்கள்.

இப்படி நினைப்பது நூற்றுக்கு தொண்ணூற்றொன்பது சதவீதம் தவறு... இல்லையில்லை நூற்றுக்கு நூறு தவறு. ரோட்டோரமாக ஒரு ரௌடி பேசிக்கொண்டிருப்பதைக் கேட்க நேர்ந்தது. "டேய், நான் அன்புக்குத்தான் பணிஞ்சி போவேன், உன் அதிகாரத்துக்குப் பணிய மாட்டேன்" என்றான்! இந்த வார்த்தைகளை நீங்களும் அடிக்கடி கேள்விப்பட்டிருப்பீர்கள்.

மனுக்குலமே அன்புக்காகத்தான் ஏங்கி நிற்கிறது. அதற்காக எங்கெங்கோ அலைந்து திரிகிறது.

பிஞ்சுக்குழந்தை நெஞ்சில் எட்டி உதைக்கிறது, ஸ்கூலுக்குப் போகும் செல்லமகன் அவன் நன்மைக்காகத்தான் நாம் புத்தி சொல்லுகிறோம் என்று புரியாமல் மூஞ்சை தூக்கி வைத்துக் கொள்கிறான். பக்கம் பக்கமாக, பத்திபத்தியாக கவிதை எழுதி காதலித்த காதலி **wedding invitation**-ஐக் கொடுத்துவிட்டு டாட்டா சொல்லிவிட்டுப் போகிறாள். புரிந்து கொள்ளப்படாத மனைவி தினமும் தலைவலி. சரியாக கவனிக்கவில்லை என்று அம்மாவுக்கு கோபம், முகம் கொடுத்துப் பேசாத தாத்தா பொட்டுன்னு போய்விட்டார்.

அம்மிக்கு ஒரு பக்கம் இடி, உரலுக்கு இரண்டுபக்கம் இடி, மனுஷனுக்கோ நாலுபக்கமும் இடி. இந்தச் சூழ்நிலையில் இயேசுவிடம் ஓடி வருகிறான். அவரும் நெருப்பைக் கக்கினால்

மனுஷன் தூளாகிப் போயிரமாட்டானா என்ன? அன்பினால் திருந்தியவர்களைத்தான் பார்த்திருக்கிறேன். அதிகாரத்தாலும், மிரட்டலாலும் கொஞ்ச காலத்துக்கு வேண்டுமானால் அடக்கி வைக்கலாம். ஆனால் திருத்த முடியாது. அவனுடைய முரட்டாட்டம் இன்னும் அதிகமாகத்தான் செய்யும்.

அதனால்தான் நம் அருமை தேவன், நல்ல அப்பாவாக மாறி, அம்மாவாக தாலாட்டி, சீராட்டி, அபிஷேகித்து வளர்க்கிறார். அதிகாரத்தாலும், கட்டளைகளாலும் கட்டப்பட்டிருந்த நியாயப்பிரமாணத்தால் நிறைவேற்ற முடியாத காரியங்கள் எல்லாவற்றையும் புதிய ஏற்பாட்டின் அன்பின் பிரமாணம் செய்து முடித்தது!

அன்பே பிரதானம்! கிறிஸ்தவம் அன்பின் மார்க்கம். அரட்டல்,

உருட்டல் எல்லாம் கேட்க நன்றாக இருக்கும், அது பிரசங்க இரசிகர்களின் பகுதி, காரியத்துக்குதவாது. அன்போ சகல பாவங்களையும் மூடும் என்றுதான் வசனம் இருக்கிறது. அதற்கு எதிரிடையான காரியங்கள் பாவங்களுக்குத் தான் கதவைத் திறக்கும், திறக்கப்பட்ட கதவின் வழியே பாவங்கள் தப்பித்து ஓடப்பார்க்கும்.

எப்படி உங்கள் வசதி?

## எதற்காக ஜெபிக்கிறோம் ?

தேவனுடைய சித்தம் இந்த உலகத்தில் நிறைவேறுவதற்காக. இயேசு கிறிஸ்து சொல்லிக்கொடுத்த மாதிரி ஜெபத்தில் இதைப் பார்க்கலாம். நான் நியாயப்பிரமாண வாத்தியாருக்கு கீழ் மாணவியாக இருந்தபோது இந்த ஜெபத்தைக் கிளிப்பிள்ளை போல சொல்வதுண்டு. "பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் ..." என்ன சொல்கிறோம் என்றே தெரியாமல் "ஞமஞம" என்ற சொல்லி ஆமென் போடுவேன்!

அப்படி சொல்வதில் எந்த தவறும் இல்லையென்றாலும் நம்மால் அறியப்படாமல் இருக்கும் சத்தியம் நம்மை விடுதலையாக்குவதில்லை என்பதை இப்போது தான் புரிந்து கொண்டேன்.

தேவனுடைய சித்தம் இந்த உலகத்தில் நிறைவேற வேண்டுமானால் தேவ சித்தம் அறிந்து கொண்டு ஜெபிக்க வேண்டும்.

தேவனுடைய சித்தத்தை (மனதின் விருப்பத்தை) எப்படி அறிந்து கொள்வது? **very simple** வசனங்களின் மூலமாகத்தான்! பாருங்கள்:

"... பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல், ... மனப்பூர்வமாய்த் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள். எபே. 6:6"

"நீங்கள் நன்மைசெய்கிறதினாலே புத்தியீன மனுஷருடைய அறியாமையை அடக்குவது தேவனுடைய சித்தமாயிருக்கிறது. 1 பேதுரு. 2:15"

"எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ்செய்யுங்கள், அப்படிச் செய்வதே ... தேவனுடைய சித்தமாயிருக்கிறது. 1 தெச. 5:18"

"நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாகவேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. 1 தெச. 4:3"

"உலகமும் அதன் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான். 1 யோ. 2:17"

அதனால்தான் வேதத்தை வாசித்து ஜெபிக்கச் சொல்லி வேதம் ஆலோசனை தருகிறது. வேதத்தை வாசிக்காமல் ஜெபிப்பது வீண் வார்த்தைகளை அலப்புவதைப் போலிருக்கும். புறஜாதியாரின் ஜெபத்திற்கும் அதற்கும் எந்தவித வித்தியாசமும் இல்லை. வேதத்தைத் தியானிக்காமல் ஜெபிக்கும் போது தேவசித்தத்தை அறிந்து கொள்ளாமல் ஜெபிக்கிறோம். அதனால் தேவனுடைய சித்தம் இந்த உலகத்தில் நிறைவேறாமல் போகிறது.

அதனால்தான் தேவனுடைய சித்தத்திற்கு விரோதமான காரியங்கள் இந்த உலகத்தில் தலைவிரித்தாடுகிறது.

பார்வைக்கு ஊழியம் செய்கிறார்கள், எந்த பிரயோஜனமும் இருப்பதில்லை. நன்மை செய்யாமல் தீமை செய்து புத்தியீன மனுஷருடைய அறியாமையை அதிகமாக்கிவிடுகிறார்கள். ஸ்தோத்திரம் செய்வதற்குப் பதிலாகக் கெட்ட, தூஷண வார்த்தைகள்! பரிசுத்தத்திற்குப் பதிலாக அசுத்தம், முடிவில் இவர்களுக்கு வருவதோ அழிவு.

தேவ சித்தம் தெரியாமல் ஜெபித்த தேவஜனங்களின் விளைச்சல்தான் உலகமுழுவதும்! பாவம், அறியாமையினால் ஜனங்கள் அதை அறுவடை செய்து அதையே, திரும்பத் திரும்ப விதைக்கிறார்கள். நிலம் பாவம் என்ன செய்யும்? தன்னில் விழும் விதை எதுவோ அதையே அது முளைப்பிக்கிறது.

தேவ சித்தத்திற்கு மாறான ஜெபங்களுக்குத் தேவனால் பதில் கொடுக்க முடியாது. ஏனென்றால் தேவனால் பதிலை கொடுக்க முடியாது, தேவன் நல்லவர்! அதனால் அமைதியாகிவிடுகிறார். இந்த இடைவெளியில் பிசாசு பதில் கொடுத்துவிடுகிறான், இதில் தான் பிரச்சனையே!

தேவ சித்தம் தெரிந்து ஜெபிக்க முடியாதவர்களுக்கு "அந்நிய பாஷை" ஒரு வரப்பிரசாதம் என்று கூடச் சொல்லலாம்! எப்படி?

"... ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார். ரோமர். 8:26"

தேவன் தன்னுடைய வார்த்தைகளைத் தவிர வேறு விதங்களில் பெரும்பான்மையாகப் பேசுவதில்லை. சொப்பனங்கள், தரிசனங்கள், சத்தங்கள் மூலம் தேவன் பேசியது இயேசு கிறிஸ்து வெளிப்படாமலிருந்த பழைய ஏற்பாட்டின் நாட்களில் நடந்தேறியவை. இக்காலங்களில் அபூர்வமாக இப்படிப்பட்ட வெளிப்பாடுகள் கிடைக்கலாம் — கிடைப்பதாக சிலர் கூறினாலும் — அது பாதுகாப்பானதல்ல, சாத்தான் வஞ்சிக்க ஏதுவுண்டாக்கும். வசனத்தின் மூலமாக தேவ சித்தத்தை அறிந்து கொள்வதுதான் முற்றிலும் பாதுகாப்பானதாகும்.

## எது ஆசீர்வாதம் ? :

ஆசீர்வாதம்தான் ஐசுவரியம் என்று பெரும்பான்மையானோர் நினைக்கிறார்கள். இது ஒரு தவறான அணுகுமுறை **(wrong approach)** நானும் அப்படித்தான் நினைத்திருந்தேன் சத்தியம் விளங்கும்வரை. இதில் யாரையும் குற்றப்படுத்துவதற்கு நியாயமில்லை. உண்மை தெரியும் வரை உண்மையில்லாத வேறொன்றைத்தான் உண்மையானதென்று நினைப்பார்கள். தங்களுக்குத் தெரிந்த உண்மை காட்டும் பாதையில் போய்க்கொண்டிருப்பார்கள். பணத்தை ஆசீர்வாதம் என்று தவறாகப்புரிந்து கொண்ட வெகுஜனம் இப்படித்தான் பணத்தின் பின்னாகப் போய்விட்டார்கள். அவர்களை நிறுத்தி

*ஆசீர்வாதமென்றால் என்னவென்று சொல்லுவோம்.*

*“கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும்; அதனோடே அவர் வேதனையைக் கூட்டார். நீதி. 10:22”*

*வசனத்தை உற்றுக் கவனித்தால் புரியும். ஆசீர்வாதம் ஐசுவரியமல்ல, ஆசீர்வாதம் ஐசுவரியத்தைத் தரும் என்று பார்க்கிறோம். அதாவது ஐசுவரியம் பணமென்றால் கர்த்தரின் ஆசீர்வாதம் பணத்தைத் தரும் என்று அறியலாம். பணம் ஐசுவரியம் என்று அர்த்தம் அல்ல. ஐசுவரியம் என்ற வார்த்தை பணத்தை மட்டும் குறிப்பதல்ல, அது சகல நன்மைகளையும் குறிக்கிறது. “உடல் நலத்தோடு இருக்கும் ஒரு ஏழை பணக்காரனுக்கு சமானமானவன்” என்கிறார் “பென்* **(Benn)**’ *என்ற அறிஞர். அதாவது பணம் என்ற ஐசுவரியத்தை விட உடல் நலம் (சுகம்) என்ற ஐசுவரியம் அதிக மதிப்பு வாய்ந்தது என்று அறியுங்கள். நம் தேவன் இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராயிருக்கிறார்! இரக்கம் சுகத்தைவிட பெரிய ஐசுவரியம் ...*

*இன்னும் சற்று விளக்கமாக: கர்த்தருடைய ஆசீர்வாதம் பணத்தை, சுகத்தை, சந்தோஷத்தை, காரை, வீட்டை, ஞானத்தை, ... தரும். அதனோடு அவர் வேதனையைக் கூட்டமாட்டார்.*

*காற்று அடிப்பதை உணர்கிறோம், அந்த உணர்ச்சி காற்றல்ல, கண்ணுக்குத் தெரியாமல் அடிக்கிறதே அதுதான் காற்று! மரத்தின் இலைகள் அசைவதை வைத்து காற்று அடிப்பதை கணிக்கிறோம். அதற்காக இலைகளை காற்றென்று சொன்னால் ஒத்துக்கொள்ள முடியுமா? அதை அசையச் செய்வதுதான் காற்று!*

*ஐசுவரியத்தையல்ல, கர்த்தருடைய ஆசீர்வதிக்கும் கரத்தைப் பிடித்துக்கொள்பவனே புத்திசாலி! ஒரு தட்டில் பொறித்த மீன்கள், பக்கத்தில் மீன்பிடிக்கும் படகும், உள்ளே வலையும். எதை எடுத்துக் கொள்வது? பொறித்த மீனையல்ல, படகை எடுத்துக் கொள்பவனே பிழைக்கத் தெரிந்தவன்! பொறித்த மீனைப் பார்த்தால் நாக்கில் எச்சில் ஊறுகிறது! மணம் மூக்கைப் பிய்த்துக் கொண்டு போகிறது, தின்றால் பசி அடங்கும், உண்மைதான் இல்லையென்று யார் சொன்னது? ஆனால் அடுத்த வேளை உணவுக்கு?*

*இதற்காகத்தான் தேவனுடைய கரத்தை (ஆசீர்வாதத்தை) பற்றிக் கொள்ளுங்கள் என்று ஆலோசனை தருகிறோம். இந்த நற்காரியத்தைச் சுவிசேஷமாகப் பிரசங்கிக்கிறோம். சத்தியத்தைப் புரிந்து கொள்வதிலும் நாளுக்கு நாள் வளர்ச்சி தேவைப்படுகிறது* **(clarity).**

*ஆசீர்வாதம் என்றால் என்ன? நாம் ஐசுவரியத்தை — சகல நன்மைகளை — செழிப்பைப் பெற்றுக்கொள்ள தேவன் தரும் “வல்லமை” என்று கூடச் சொல்லலாம். தேவனுடைய ஆசீர்வாதம் என்ற அந்த தெய்வீக வல்லமை நமக்கு அருளப்படும்போது; அது சகல செழிப்பையும் அள்ளி கொட்டுகிறது. பணம் என்ற செழிப்பை மட்டுமல்ல, சுகம் என்ற செழிப்பு, சாபம் நீக்கப்பட்ட சந்தோஷமான வாழ்க்கை, பாவம் நீக்கப்பட்ட பரிசுத்தமான வாழ்க்கை,*

ஊழியங்கள், மற்றும் தேவசித்தத்திற்கிசைவான உலகளவில் உள்ள சகல நன்மையான காரியங்களும் கிடைக்கிறது.

அதற்குத் தேவன் தரும் ஆசீர்வாதம் என்ற வல்லமையினால் நாம் தரிப்பிக்கப்பட வேண்டும்.

அந்த வல்லமையை அபிஷேகம் என்றும் சொல்லலாம். அதற்கு நாம் காத்திருக்க வேண்டும், காத்திருக்கும்போது பெற்றுக் கொள்கிறோம். மேலறையில் காத்திருந்த யாரும் ஏமாற்றப்படவில்லை, அபிஷேகம் இறங்கியது. (அப். 2ம் அதிகாரம்)

நற்காரியங்களை — சமாதானத்தை — ஆசீர்வாதத்தைச் சுவிசேஷமாகப் பிரசங்கிக்க புறப்பட்டிருக்கும் நாம் வியாதியோடு, சாபத்தோடு, தரித்திரத்தோடு இருப்பது சாட்சிக்குறைவை ஏற்படுத்துகிறது. உதாரணத்திற்கு வேறு எங்கும் போகவேண்டியதில்லை, செழிப்பில்லாதபடி, செழிப்பைப் பிரசங்கிக்க ஆரம்பித்த நான் நிறைய தடைகளையும், எதிர்ப்புகளையும் சந்திக்க வேண்டியது வந்தது. நான் ஆவியானவரிடமிருந்து பல ஆழமான காரியங்களை பெற்றுக் கொண்டு அறிவித்தாலும், என்னுடைய சாட்சியில்லாத (செழுமையில்லாத) வாழ்க்கை என்னுடைய ஊழியங்களை மதிப்பிழக்க செய்தது, **response** இல்லாமல் போனது, மறுக்க முடியாத உண்மை.

இப்படிப்பட்டச் சூழ்நிலை இருப்பதால் தேவனுடைய ஆசீர்வாதம் என்ற வல்லமையால் **(anointing)** தரிப்பிக்கப்படுவோம், ஐசுவரியங்களைச் சம்பாதிப்போம், செழிப்போம், விதைப்போம். பணமில்லாமல் ஆத்தும ஆதாயம் செய்ய முடியாது. இந்த புத்தகத்தை மிக மிக ஒரு சிலரேயல்லாமல் மற்றவர்கள் எல்லோரும் வாசிக்க முடியாமல் போனதற்கு காரணம் "பணப்பிரச்சனை!" பணமில்லாததினால் இதை அச்சிட்டு அநேகருக்கு கொடுக்க முடியவில்லை. பணமில்லாததினால் சுவிசேஷத்தைச் சொல்லமுடியாமல் சுவிசேஷகர்கள் பின்வாங்கிப் போனார்கள். இரட்சிக்கப்படாத கோடான கோடி ஜனங்கள், நீங்கள் இதை வாசித்துக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில், சினிமா, சீரியல் பார்த்துக் கொண்டும், வேறு பல பாவங்களில் மூழ்கிக்கொண்டும் இருக்கிறார்கள்.

செழிப்பைப் பிரசங்கிக்கிறார்கள் என்று முகத்தைச் சுழித்துக்கொண்டு சண்டைக்கு வருகிறார்களே! வேதத்தில் செழிப்பைத் தவிர பிரசங்கிக்க வேறே என்ன இருக்கிறது? இயேசு கிறிஸ்து உலகத்தின் சாபத்தை மாற்றி, சாத்தானால் தரித்திரம் பிடித்துப் போன உலகத்தை மீட்டு, செழிப்பைத் தரத்தானே வந்தார்? அதுதானே சுவிசேஷம்! நற்செய்தி!

... சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் என்று எழுதியிருக்கிறதே. ரோ. 10:15 நாகூம் தீர்க்கதரிசியின் மூலமாக பழைய ஏற்பாட்டின் காலத்திலேயே இக்கால சுவிசேஷம் முன்னறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த சுவிசேஷத்தின் நோக்கம் "சமாதானம்". பரிபூரணம் இல்லாத இடத்தில் சமாதானம் இருக்க முடியாது. தரித்திரம், வியாதி, சாபம், பாவம்

தாண்டவமாடும் இடத்தில் சமாதானம் ஏது? எங்கே நிம்மதி? என்று அலைமோதும் மானிடர்க்கு இதோ ஒரு நற்செய்தி, தரித்திரர்களே! இதோ உங்களுக்கும் நற்செய்தி, உங்களுக்குச் சமாதானம்! உங்கள் வேதனைகளுக்கு முடிவு கட்டவே இயேசு வந்தார், அவரை ஏற்றுக்கொள்ளாமலிருப்பவர்களுக்கு இதோ வந்துகொண்டிருக்கிறார்... இனிமேலும் வருவார்!

**Prosperity**—ஐ பிரசங்கம் பண்ணுகிறார்கள் என்று குற்றம் சுமத்துபவர்களுக்கு: வேறென்னத்தை பிரசங்கிப்பதாம்? **Prosperity** என்றால் செழிப்பு மட்டுமல்ல, மனிதனுடைய நல்வாழ்க்கைக்குத் தேவையான எல்லாம் என்று அர்த்தம், வெற்றியுள்ள வாழ்க்கை, நன்றாக இருப்பது — என்று பலவாறு அர்த்தம் கொள்ளலாம். இதற்காகத்தானே இயேசு உலகத்திற்கு வந்தார்? மரித்தார்? உயிர்த்தார்? இதைத் தவிர, இயேசுவின் சிலுவையைப் பற்றி பிரசங்கிக்க வேதத்தில் வேறு என்ன இருக்கிறது?

சாபத்தைப் பற்றி பிரசங்கிப்பதா? அதற்குத்தான் பிரசங்கமே தேவையில்லையே, மக்கள் ஏற்கனவே சாபத்தில்தானே இருக்கிறார்கள்? கெட்டுப்போகச் சொல்லிக்கொடுக்க வேண்டிய அவசியமேயில்லையே, தானாக அது வந்துவிடுகிறது, பாவமா அது தண்ணீர்பட்ட பாடு! எல்லோரும் நன்றாக இருக்கவேண்டும் என்பதற்காகத்தானே இயேசு இவ்வளவு பாடுகள் பட்டார்? நன்றாக இருக்க வேண்டும், சுகத்தோடு இருக்கவேண்டும், பலத்தோடு இருக்க வேண்டும், ஞானத்தோடு வாழ வேண்டும், நல்ல வேலை வேண்டும், எந்த குறைவுமில்லாத பரிபூரணப்பட்ட வாழ்க்கை வேண்டும் என்பதற்காகத்தான் பிரசங்கமே தவிர, கெட்டுப் போவதற்காக அல்ல. கெட்டுப் போக பிரசங்கமே தேவையில்லையே, ஏற்கனவே எல்லோரும் தங்கள் தங்கள் வழிகளில் கெட்டழிந்து போய்க்கொண்டுதானே இருக்கிறார்கள்? அதற்கு யாரும் அவர்களுக்கு கற்றுக் கொடுக்கவில்லை, அவர்களாகவே கற்றுக் கொண்டார்கள்! அவர்களைத் தடுத்து நிறுத்தி, நன்றாக வாழ வைக்கவே பிரசங்கம். நன்றாக இருக்கத்தான் கற்றுக் கொடுக்க வேண்டியதாயிருக்கிறது.

அசுத்தம், காமவிகாரம், இச்சை, பெருமை, கோபம், பொய் ஆகியவற்றை தானாகக் கற்றுக் கொண்டிருக்கும் ஜனங்கள்; பரிசுத்தம், அன்பு, மனதுருக்கம், நல்வாழ்வு பற்றித் தானாக தெரிந்து கொள்ளத் திராணி இல்லாதவர்களாயிருக்கிறார்கள். காரணம் யார் என்று சொல்ல வேண்டியதில்லை.

இக்காலத்தில் — புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்களுக்கு — அப்போஸ்தல உபதேசத்தின்படி பிரசங்கிக்க, செழிப்பைத் தவிர வேறு எதுவும் இல்லையென்பதைத் திட்டவட்டமாக அறியலாம். திரும்பவும் சொல்லுகிறோம்... செழிப்பு என்பது பணம் அல்ல, நன்றாக இருப்பது என்று அர்த்தம். செழிப்பைப் பிரசங்கிக்ககூடாது என்று எதிர்வாதம் செய்பவர்கள், அதை விடப் பெரிதாக எதையும் பிரசங்கித்து விடவில்லை என்பதையும் அறியலாம். அதைவிட பெரியதாக எதையும் பிரசங்கித்து விடவும் முடியாது, அதைத் தவிர பிரசங்கிப்பதற்கு வேற எதுவும் கிடையாது.

நம் பிள்ளைகள் நன்றாக இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறோம், நியாயமான ஆசைதான். ஆனால் பிள்ளை கீழ்ப்படியாமல் தவறான பாதையில் போய் பாவத்தில் விழுந்து, சீரழிந்து, அழிவுக்கு நேராக ஓடினாலும் … மீண்டும் அவன் நன்றாக இருக்க வேண்டும் என்ற நம் மனதின் ஆசையை மாற்றாமல் அவனைத் தூக்கிவிட முழுமூச்சுடன் முயற்சிக்கிறோம். அந்த முயற்சியில் நம் உயிர் போகும் சூழ்நிலை வந்தாலும் யோசிப்பதில்லை!

மானிடர்களான நமக்கு இந்த மனசு இருக்குமானால், நம் பரலோக தேவனின் — அப்பாவின் — மனசு அது எவ்வளவாய் துடிக்கும்? யோசித்துப் பார்ப்போம். அந்த துடிப்புதான் இயேசுவை உலகத்துக்குத் தந்தது. தீர்க்கதரிசன வார்த்தைகளின் நிறைவேறுதலாக இயேசு வந்தார். “நான் (இயேசு) இதோ, வருகிறேன், புஸ்தகச்சுருளில் என்னைக்குறித்து எழுதியிருக்கிறது; சங். 40:7” நாமும் விசுவாசத்துடன் வார்த்தைகளை அறிக்கை செய்யும்போது, வார்த்தையின் நிறைவேறுதலாக மாறுகிறோம்! வேத வசனங்களால் இருதயத்தை நிரப்புவோம், வாயின் வழியாக அது வழிந்தோடும் **(overflow)** ஆகும்! வாயைத் திறந்தால் வசனம்தான் வரவேண்டும், பிரச்சனையல்ல.

பிரச்சனையைப் பேசினால் பிரச்சனை பூதாகரமாகும். பிரச்சனை இன்னொரு பிரச்சனையை பெற்றெடுக்கும், தோல்வியை எழுதிவிட்டுப் போகும். பிரச்சனை கண்முன் நின்றாலும், கண்ணை மூடி, **High Jump** செய்து பிரச்சனையைத் தாண்டி கண்களால் காணமுடியாத விசுவாச உலகத்திற்குள் குதித்து வசனத்தை வார்த்தைகளால் உச்சரிப்பவன் ஞானவான்! வசனங்கள் வெற்றியை எழுதிவிட்டுப் போகும். நாம் வாசித்து, தியானித்து, கற்றுக்கொண்ட வசனங்கள் நம்மை மேற்கொண்டு பட்சிக்க இடம் கொடுக்க வேண்டும்!

செழிப்பின் உபதேசம்தான் ஆரோக்கியமானது, ஆரோக்கியமற்ற உபதேசங்களைக் கேட்டுக் கேட்டு விசுவாசிகள் வியாதியஸ்தர்களாக மாறி (உள்ளான மனிதனில்) படுத்த படுக்கையாக இருக்கிறார்கள். (தீத்து. 2:1) ஒரு வீட்டில் படுத்த படுக்கையாக இருக்கும் ஒரு மனிதனால் எந்த பிரயோஜனமும் இருப்பதில்லை, மாறாக உபத்திரவம்தான். சுகமில்லாமல் படுத்திருப்பவரைக் கவனிக்கவே நாலு ஆள் வேண்டும்.

இயேசு தன் மகிமையைத் துறந்ததால்; நாம் அவரின் மகிமையை அடைந்தோம். அவருடையே மகிமையையே நமக்குக் கொடுத்தார். கையில் கிடைத்த வைரக்கல்லை வெறும் கல் என்று நினைத்து, தூர எறிந்துவிட்டோம்.

விவரம் தெரிந்த பிறகு பதறிப்போய் தேடினோம், அதற்குள் இன்னொருவன் அதை எடுத்துக் கொண்டு போய் விற்று, தன்னுடையவர்களுக்குத் தாரை வார்த்து விட்டான்! நம் பிதாவாகிய தேவன் ஆதாமை உருவாக்கும் போதே தன்னுடைய சொந்தப் பிள்ளையாகத்தான் உருவாக்கினார். அதனால்தான் தனது ரூபத்தின்படி, சாயலின்படி உருவாக்கினார். ஆனால் தேவனுடைய நோக்கம் சாத்தானால் தடுமாறிப் போனது. ஏவாள் மட்டும் சாத்தானின் பேச்சை நம்பாமல் இருந்திருப்பாளானால்; உலக ஆரம்பம் முதற்கொண்டே

புதிய உடன்படிக்கையின் புத்திரர்களாய் இருந்திருப்போம். தேவனுடனான உறவு கெடுக்கப்பட்ட நிலையில் மனுக்குலம் சஞ்சலம் நிறைந்த 4000 வருடங்களை கடந்துவர வேண்டியதிருந்திருக்காது. வரலாற்றை கி.மு. கி.பி என்று பிரிக்க வேண்டியதிருந்திருக்காது.

என்றாலும் நடந்து போனதை நினைத்து வருத்தப்பட வேண்டாம் என்கிறார் நம் அன்பு அப்பா.

"முந்தினவைகளை நினைக்கவேண்டாம்; பூர்வமானவைகளைச் சிந்திக்கவேண்டாம். ... நான் புதிய காரியத்தைச் செய்கிறேன் ... வனாந்தரத்திலே வழியையும், அவாந்தர வெளியிலே ஆறுகளையும் உண்டாக்குவேன். ஏசா. 43:18,19"

சிலுவையில் உலகத்தின் சாபம் நீக்கப்பட்டது. ஆனால் சத்தியத்தை அறியாத தேவ ஜனங்களால் சாபம் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கிறது. ஆனால் சூழ்நிலை இப்படியே இருக்கப்போவதில்லை. ஜனங்கள் சத்தியத்தை அறிந்து கொள்ளுவார்கள், உலகம் மீண்டும் ஏதேன் தோட்டத்திற்குள் உருண்டு போய்விடும், இது தீர்க்கதரிசனம்!

"ஓனாயும் ஆட்டுக்குட்டியும் ஒருமித்து மேயும்; சிங்கம் மாட்டைப்போல வைக்கோலைத் தின்னும்; புழுதி சர்ப்பத்துக்கு இரையாகும்; என் பரிசுத்த பர்வதமெங்கும் அவைகள் தீங்குசெய்வதுமில்லை, கேடு உண்டாக்குவதுமில்லையென்று கர்த்தர் சொல்லுகிறார். ஏசா. 65:25"

## பழைய இரசமே போதும்: *(Old is Gold)*

... ஒருவனும் பழைய ரசத்தைக் குடித்தவுடனே புது ரசத்தை விரும்பமாட்டான், பழைய ரசமே நல்லதென்று சொல்லுவான் என்றார். லூக். 5:39

ஏன் அப்படி நடக்கிறது? எதனால் பழைய இரசம் பிடிக்கிறது? வேறொன்றுமில்லை அதுவே பழகிப்போனதுதான் காரணம், அதிலே மனதை வைத்து ஆணி அடித்தாகிவிட்டது.

பாரம்பரியம் பசுமரத்தாணிபோல மனதில் பதிந்து போனது. பழையதை அழித்துக்குளித்து ஆட மனசு வரமாட்டேனென்கிறது.)

இங்கிலாந்து — தெற்கு வேல்ஸ் **(England - South Vales)** பகுதியில் வாழும் ஜென்னி என்ற 44 வயது பெண், விவாகரத்து ஆனவர். இவருக்கு 3 பிள்ளைகள். வருமானம் இல்லாததினால் அடகு வைக்கப்பட்டிருந்த தன் வீட்டை மீட்க பணமில்லாமல் வீட்டை இழந்தார். பிள்ளைகளோடு ஒரு விடுதியில் குடியேறினார். இவரது பரிதாப நிலையைக் கேள்விப்பட்ட நகராட்சி நிர்வாகம் ஒரு பழைய வீட்டை வாடகைக்கு கொடுத்தது. ஒரு தியேட்டரில் குறைந்த சம்பளத்திற்கு பகுதிநேர வேலை செய்து, ஒன்றரை வருடங்களாக மிகச் சிரமத்துடன் குடும்பத்தை நடத்தினார்.

இந்நிலையில் திடீர் திருப்புமுனை இவரது வாழ்க்கையில் நடந்தது.

ஜென்னிக்கு லாட்டரியில் 83 லட்சம் பவுண்ட் (ரூ. 63 கோடி) பரிசு விழுந்தது. ஆசைஆசையாக 5 படுக்கையறைகள் கொண்ட ஒரு பெரிய பங்களாவை 8 கோடியே 62 லட்சத்திற்கு வாங்கினார். ஆனால் திருப்புமுனையில் ஒரு அதிர்ச்சியும் காத்திருந்தது. அவரது 15 வயது மகன், தன்னுடைய நண்பர்கள் பழைய வாடகைவீட்டின் பக்கத்திலேயே வசிப்பதால், தனக்கு வாடகை வீட்டைவிட்டு வர மனதில்லை என்று சொல்லி, வர மறுத்து விட்டான்!

பரிதாபம்! கோடி கோடியாய் கொட்டிக்கொடுத்த வீட்டில் வாழ முடியாமல், இந்த குடும்பம் பழைய வீட்டிலேயே வசித்து வருகிறது. நகராட்சியும் இந்த கோடீஸ்வர குடும்பம் தங்களுடைய பழைய வீட்டில் வசிப்பதற்கு அனுமதி வழங்கிவிட்டது! நிலவரம் புரிகிறதா?

கஷ்டம்தான், என் அனுபவத்தில் பார்த்த உண்மையிது.

சத்தியத்தைப் போதிக்கிற ஊழியர்களுக்கெதிராக எழும்பும் கூட்டம்...

"... சத்தியத்தைச் சொன்னதினாலே உங்களுக்குச் சத்துருவானேனோ? கலா. 4:16"

ஏன்? நிம்மதியாக ஒரு பாதையில் போய்க்கொண்டிருந்தோம். அது பழைய இரசமோ, நியாயப்பிரமாணமோ, பழைய உடன்படிக்கையோ எதுவாக இருந்தால் நமக்கென்ன? நிம்மதியாக இருந்தோம், கெடுக்க வந்துவிட்டார்கள். இந்த புதிய உபதேசம் நமக்கு வேண்டாம்பா, ஆளைவிடுங்கள் என்று ஓடப்பார்க்கிறார்கள்.

உண்மையில் இது புதிய உபதேசமல்ல, 1978 வருடங்களுக்கு முந்தையது! சிலுவையில் தயாரிக்கப்பட்ட திராட்சைரசம் தான்... ருசிதான் புதியது! எல்லோரும் பழைய திராட்சை ரசத்தையே ருசித்துக் கொண்டிருந்ததால், புதிய ரசத்திற்குச் சந்தர்ப்பம் இல்லாமல் போனது. என்றாலும் நிலைமை அப்படியே இருந்துவிடவில்லை.

இயேசு வந்தார், கானாவூர் கல்யாண வீட்டில்... ஜாடிகளைத் தண்ணீரால் நிரப்பச் சொன்னார். நடந்தது என்ன?

"எந்த மனுஷனும் முன்பு நல்ல திராட்சரசத்தைக் கொடுத்து, ஜனங்கள் திருப்தியடைந்த பின்பு ருசி குறைந்ததைக் கொடுப்பான், நீரோ நல்ல ரசத்தை இதுவரைக்கும் வைத்திருந்தீரே என்றான். யோ. 2:10"

ருசித்துப் பார்த்தபிறகு யாரும் பழைய இரசமே நல்லது என்று சொல்லமாட்டார்கள். கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்; சங். 34:8

கர்த்தர் "நல்லவர்" என்பதை மாத்திரம்தான் ருசித்துப்பார்க்க வேண்டும், இனிப்பாக இனிப்பார்! ஆனால் அவர் பயங்கரமானவர், பயப்படத்தக்கவர், பட்சிக்கிற அக்கினி என்பவற்றை ருசித்துப் பார்க்கிறார்கள். அந்த ருசி கசப்பாக இருந்தாலும் வேறு வழியில்லாமல், தேவனைப் பற்றிய பயங்கர நினைவுகளுடனேயே வாழ்கிறார்கள். உண்மையில் தங்களுடைய நாக்கில் இருப்பது சாத்தானின் ருசி என்பது அவர்களுக்கேத் தெரிவதில்லை.

*புதிய ஏற்பாட்டின் காலத்தில் என்றல்ல, பழைய ஏற்பாட்டின் காலத்திலேயே, உலகத் தோற்றமுதலே தேவன் நல்லவர்தான்.*

*"இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். எபி. 13:8"*

## சுக்கான்:

*"கப்பல்களையும் பாருங்கள், அவைகள் மகா பெரியவைகளாயிருந்தாலும், கடுங்காற்றுகளால் அடிபட்டாலும், அவைகளை நடத்துகிறவன் போகும்படி யோசிக்கும் இடம் எதுவோ அவ்விடத்திற்கு நேராக மிகவும் சிறிதான சுக்கானாலே திருப்பப்படும். யாக். 3:4"*

*ஒரு பிரச்சனை வந்துவிட்டது, உதாரணமாக பொருளாதார நெருக்கடி என்று வைத்துக்கொள்வோம். அந்த பிரச்சனையை மனவருத்தத்துடன் முகத்தை தொங்கலாக வைத்துக் கொண்டு பக்கத்து வீட்டு அக்காவிடம் சொன்னால் ... அந்த பிரச்சனையை உறுதி* **(confirm)** *பண்ணுகிறோம்! அந்தப் பிரச்சனைக்கு ஆம்* **(yes)** *சொல்லி, அதை வரவேற்று, அதனுடன் ஒத்துப் போக ஆரம்பித்துவிடுகிறோம். முடிவில் பணப்பிரச்சனை தீராமல், கடன் என்ற இன்னொரு பிரச்சனையையும் உருவாக்கிவிடுகிறது! உண்மைதானே? ஆமாம் என்று சொல்லுகிறவர்கள் கைகளை தூக்குங்கள் பார்க்கலாம்! (95% கை உயர்ந்திருக்கிறது, மீதி 5 பேர் பிரசங்கத்தைக் கவனிக்கவேயில்லை, தூங்கிவிட்டார்கள், அதனால் கையை உயர்த்தவில்லை) நாக்குதான் வாழ்க்கையை தீர்மானிக்கிறது,* **direct** *பண்ணுகிறது என்று அறிகிறோம்.*

*வார்த்தைக்கு உருவாக்கும் வல்லமை உண்டு. தேவன் வானம், பூமி, அதிலுள்ளவைகள் யாவற்றையும் தன்னுடைய வார்தையினாலே உருவாக்கினார். தேவன் வார்த்தையை உச்சரித்தார், அந்த வார்த்தைகள் ஒவ்வொன்றாய் ஒவ்வொன்றையும் உருவாக்குவதைப் பார்க்கிறோம்.*

*தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார், வெளிச்சம் உண்டாயிற்று. ஆதி. 1:3*

*உண்டாகக்கடவது என்று சொல்லச்சொல்ல, அந்த வார்த்தையின் வல்லமை ஒவ்வொன்றையும் உருவாக்குவதைப் பார்க்கிறோம். (ஆதி. 1:7,9,11,15,24,)*

*தேவனுடைய வாயின் வார்த்தைகள் உருவாக்கும், ஆனால் நாம் மனிதர்களாச்சே, நம் வார்த்தைக்கு அத்தனை வல்லமையுண்டா? ஏன் இல்லை? நாம் தேவனுடைய பிள்ளைகள், அவருடைய சாயலின்படியேயும், அவருடைய ரூபத்தின்படியும் சிருஷ்டிக்கப்பட்டோம். (ஆதி. 1:26) அவருடைய ஜீவ சுவாசம் நம்மில், இயேசுவின் ஜீவன் நம்மில், அவருடைய எலும்புக்கும், மாமிசத்திற்கும் பங்காளிகள் நாம் ... சரீரத்தின் அவயவங்கள். (எபே. 5:30) அதனால் அவருடைய தேவத்துவ வல்லமைகள் நமக்கும் இருக்கிறது, அவ்வாறு அவருடைய வல்லமைகள் நமக்குள் கடந்து வரும்படியாகத்தான் நம்மை சிருஷ்டித்திருக்கிறார். அதனால் நாம் சொன்னாலும் உருவாகும்... நடக்கும்!*

*ஆனால் நாம் சொல்லும் வார்த்தைகளின்படி அதன் உருவாக்கம் இருக்கிறபடியால், நம் நாவைக் குறித்து மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டியதாயிருக்கிறது. நாவைக் குறித்து வேதம் சொல்லும் சில விஷயங்களை வாசிக்கும்போது எனக்கு குலை நடுக்கமாயிருக்கும்!*

*நம் வார்த்தையின்படிதான் வாழ்க்கையும் இருக்கும். நான் செழிப்பேன், எனக்கு ஒரு கேடும் வராது, ஒரு நன்மையும் குறைவுபடாது, கொடுமைக்குத் தூரமாவேன்.*

*"... அவர்கள் தொண்டை திறக்கப்பட்ட பிரேதக்குழி; ... சங். 5:9"*

*எனக்கு இத்தனை பாடுகள் ... எனக்கு சாவு வராதா என்று அடிக்கடி அங்கலாய்க்காதிருப்போம், வார்த்தையின்படியே சம்பவிக்கும். அநேகர் வாழ்க்கையை எதிர்நோக்கப் பயந்து சாவை எதிர்பார்க்கிறார்கள். பிரச்சனைகளுக்கெல்லாம் சாவு ஒரு எளிதான முடிவைத் தருவதாக சாத்தான் அவர்களை நம்ப வைக்கிறான். ஆனால் வேதமோ*

*"... சாகிறவனுடைய சாவை நான் விரும்புகிறதில்லை என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். எசே. 18:32" என்று சொல்கிறது.*

*அப்படியானால் சாவு தேவனுடைய மனதுக்ககந்ததல்ல என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. சாவை எதிர்பார்ப்பவனுடைய மனநிலை என்ன?*

*"... என்னை (பிதாவாகிய தேவனை) வெறுக்கிறவர்கள் யாவரும் மரணத்தை விரும்புகிறவர்கள் ... நீதி. 8:36"*

*அதாவது சாவை விரும்பி எதிர்நோக்கியிருப்பவர்கள் தேவனை வெறுக்கிறார்கள் என்று அறியலாம். நம் தேவன் நல்லவர், நமக்கு நன்மை செய்கிறவர், நம்மை வாழ வைக்கவே தன் மகனை அனுப்பினார், மரணம் அவருக்குப் பிரியமானதல்ல என்ற உண்மைகள் தெரிந்திருந்தால் அவரை வெறுக்க மாட்டார்களே? ஆக தேவனைக் குறித்த போதிய அறிவில்லாததினால், அறியாமையினால், சத்தியம் தெரியாதினால் தேவனை வெறுக்கிறார்கள் என்று அறியலாம். நம்மால் வெறுக்கப்படுகிற ஒருவரை நம்மால் நேசிக்க முடியவே முடியாது!*

*அன்பிலே பயமில்லை, பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்; ... பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல. 1 யோ. 4:18*

*சத்தியத்திற்குப் புறம்பாக அவர்கள் தேவனை பயங்கரமானவர் என்றும் அவரால் நன்மை எதுவும் செய்ய முடியாது என்றும் முடிவுக்கு வந்துவிடுகிறார்கள். அதனால் அவர்களுக்குத் தேவனை விசுவாசிக்க திராணியில்லாமல் போய்விடுகிறது. அவருடைய சர்வவல்லமையின் மேல் சந்தேகம் வருகிறது. அல்லது அவர் சர்வவல்லமையுள்ளவர் என்று தெரிந்தாலும், அந்த வல்லமையினால் அவர் தீமையைச் செய்கிறார் என்று தவறாகப் புரிந்து கொள்கிறார்கள்.*

*தவறாகப் புரிந்து வைத்திருக்கும் தேவனைப் பற்றி அவர்களால் சரியான விதத்தில் பேச முடியுமா? நிச்சயமாக முடியாது, அதனால் தவறான அறிக்கை*

செய்கிறார்கள், கடவுளுக்குக் கண்ணில்லையென்கிறார்கள்!

உண்மையிலேயே கண்ணில்லாத கடவுள் ஒருவர் இருந்தால்; அவரால் இந்த உலகத்திற்கு என்ன நடக்குமோ, அது அவர்களுக்கு நடந்துவிடுகிறது. காரிருள் வந்து மூடிவிடுகிறது, தடவித்திரிகிறார்கள், அல்லது மூலையில் முடங்கிக் கிடக்கிறார்கள், பாதாளமும் ஆ என்று வாயைப் பிளக்கிறது. நாக்கு என்ற சுக்கான் நம் வாழ்க்கைப் பயணத்தில் எவ்வளவு முக்கியமானது என்பதைக் கண்டிப்பாக புரிந்து கொள்ள வேண்டும். "நானும் என் பெரிய வாயும்" என்ற ஜாய்ஸ் மேயரின் புத்தகத்தை படித்திருக்கிறேன். பெரிய வாயென்றால் அப்படியிப்படி பெரிய வாயில்லை மெகா சைஸ், பெரிய அண்டா குண்டா அளவுக்கு, பாதாளத்தின் வாய் அளவில்!

சங்கீதக்காரனுக்கு இந்த பயங்கர நாவைப் பற்றித் தெரிந்திருக்கிறது ...!

"என் நாவினால் பாவஞ்செய்யாதபடிக்கு ... என் வாயைக் கடிவாளத்தால் அடக்கிவைப்பேன்... சங். 39:1"

... கபடுசெய்யும் உன் நாவு தீட்டப்பட்ட சவரகன் கத்தியைப்போல் இருக்கிறது. சங். 52:2.

... அவர்கள் நாவுகளே அவர்களைக் கெடுக்கும்; ... சங். 64:8

தீ என்று சொல்லி விட்டால் சுட்டுவிடாது என்ற பழமொழி உண்டு சாத்தானுக்கு அனுகூலமாக! அப்பா தன்னை தண்டச்சோறு என்று திட்டினார் என்று மனசு உடைந்து போன வாலிபர்களின் தற்கொலை நிகழ்வுகள் எத்தனையோ! முட்டாளே, நீ மாடு மேய்க்கத்தான் லாயக்கு என்று கோபத்தில் வாத்தியார் திட்டினார். சும்மாத்தானே திட்டுகிறார் என்று நினைத்தான் ... வருடங்கள் ஓடினது, வேப்பம்பட்டி துவக்கப்பள்ளியில் அஞ்சாஞ்கிளாஸ் வரை படித்து பெயில் ஆன சுடலையப்பனின் மகன் மாயாண்டி நிஜமாகவே அதோ எருமை மாடுகளின் பின்னால் வந்துகொண்டிருக்கிறான். அட வாத்தியார் சொன்னது எப்படி கரெட்டாக நடந்துருச்சி பார்த்தீங்களா? வாயில் வருவதையெல்லாம் பேசாதிருங்கள்... பேச வேண்டியதை மாத்திரம் வாயிலிருந்து வரவழையுங்கள்! தேவையில்லாத வார்த்தைகளையெல்லாம் தொண்டையோடு நிறுத்தி, தண்ணீர் ஊற்றி விழுங்கிவிடுங்கள். பழைய ஏற்பாட்டு ஞானி கூட நாவின் அதிகாரத்தைப் பற்றி தெரிந்து வைத்திருந்தார்.

... நாவின் மாறுபாடோ ஆவியை நொறுக்கும். நீதி. 15:4.

புரட்டு நாவுள்ளவன் தீமையில் விழுவான். நீதி. 17:20

மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும்; அதில் பிரியப்படுகிறவர்கள் அதன் கனியை புசிப்பார்கள். நீதி. 18:21

தேவனை அறியாத உலக மக்கள் கூட எதிர்மறையான வார்த்தைகளைப் பேசக்கூடாது என்ற எச்சரிக்கப்படுகிறார்கள். நல்ல வார்த்தைகளையே பேச வேண்டும் என்று போதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்குக்கூடத் தெரிகிறது, வார்த்தைகளில் வல்லமை இருக்கிறது என்று! ஆனால் தேவனுடைய

*பிள்ளைகளோ ... அறியாமையினால் அவிசுவாசமாகப் பேசிப்பேசியே செத்துப் போனார்கள். விசுவாச வார்த்தைகளைப் பேசுவதற்குத் திராணியில்லை, அதற்கேற்ற விசுவாசத்தை இருதயம் உற்பத்தி செய்யவில்லையென்பதால் மோசமான முடிவுகளை சந்திக்கிறார்கள். அதுமட்டுமா "ஆண்டவர் சித்தம் அப்படியிருந்தால் நாம் என்ன செய்ய முடியும்" என்று ஆண்டவர் மேல் எல்லாவற்றையும் போட்டுவிட்டு தப்பித்து விடுகிறார்கள். இது பழகிப் போன ஒன்று.*

*"... ஆண்டவருடைய வழி செம்மையானதல்ல என்கிறார்கள்; அவர்களுடைய வழியே செம்மையானதல்ல. எசே. 33:17" தேவன் அப்பழுக்கற்றவர், மாசுமறு இல்லாதவர்!* **Perfect! without blemish!**

*சத்தியத்தை அறியாததினால் ஏற்படும் தோல்விகளோடு நம்மை* **compromise** *(சமாதானம்) ஆகி விட்டோமானால், அதில் ஒரு தற்காலிக ஆறுதல் கிடைக்கலாம், ஆனால் சாத்தானுக்கோ அது மிகவும் வசதியாகப்போய்விடுகிறது. தொடர்ச்சியாக இவ்விதமான சமாதான ஒப்பந்தங்களுக்காக அவன் காத்திருக்க ஆரம்பிக்கிறான். நம்முடைய இருதயம், விசுவாசம், அதன் அறிக்கைகள் மீது தொடர்ச்சியாக தாக்குதல் நடத்தியபடியே நம்மைப் பின்தொடருகிறான், முற்றுகை போடுகிறான்.*

*தெளிதேனிலும் இன்பமான மதுரமான ஆசீர்வாதங்களைத் தேவன் தன் குமாரன் மூலமாக நமக்கு வாக்குப்பண்ணியிருக்க, அதன் சத்தியங்களை இக்கடைசி நாட்களில் எந்நாட்களிலுமில்லாத அளவுக்கு பரிசுத்தாவியானவர் நமக்கு வெளிப்படுத்திக்கொண்டிருக்க ... அதை அறியாத தேவபிள்ளைகளோ... வேப்பெண்ணையைக் குடித்துக் கொண்டிருக்கிறார்கள்.*

*நானும் அறியாமையின் நாட்களில் நியாயப்பிரமாணத்தை பிரசங்கிக்கிறவளாகத்தான் இருந்தேன். ஆனால் சத்தியத்தை அறிந்து கொள்ள வேண்டும் என்ற என்னுடைய வாஞ்சை, பரிசுத்தாவியானவர் என் கரத்தைப் பிடிக்கும்படிச் செய்தது. சத்தியத்தை அறிந்து கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுங்கள்.*

*"...நீதிமான் விரும்புகிற காரியம் அவனுக்குக் கொடுக்கப்படும். நீதி. 10:24"*

*நம்முடைய நாவை (சுக்கானை) சரியான திசையில் திருப்பிக் கப்பலைச் செலுத்துவோம். வாழ்க்கை பயணம் முழுவதும் இனிமையான பாடல்களின் எதிரொலிகள் நிறைந்திருக்கும்!*

*"ஆரோக்கியமுள்ள நாவு ஜீவவிருட்சம்; ... நீதி. 15:4"*

*"இனிய நாவு எலும்பையும் நொறுக்கும். நீதி. 25:15"*

*கிராமப்புறங்களில் பீடி குடித்துவிட்டு, கவனக்குறைவால் வீசியெறியப்படும் தீக்குச்சியில் இருக்கும் நெருப்பால் வைக்கோல் போர் தீப்பிடித்து எரிந்து போனதை கேள்விப்பட்டிருக்கிறேன். இரண்டே இரண்டு எழுத்துள்ள ஒரு சின்ன வார்த்தை, என் வயிற்றெரிச்சலினால் பேசித்தொலைத்துவிட்டேன், அதனால் ஒன்றுமில்லை என்று தயவுசெய்து யாரும்*

சமாதானப்படுத்திக்கொள்ள முயற்சிக்க வேண்டாம்.

சாத்தான் தள்ளப்பட்டான், ஆண்டவரால் அல்ல. அவனுடைய பெருமையின் வார்த்தைகள் அவனைத் தள்ளிவிட்டது, விழுந்த வேகத்தில் அக்கினி பற்றிக் கொண்டது! இன்னும் எரிந்து கொண்டிருக்கிறது ... பேசுவதற்கேற்ற நல்ல வார்த்தைகளே வாயில் வருவதில்லை, கண்டதும் வந்துவிடுகிறது என்று அங்கலாய்க்கிறீர்கள். வாஸ்தவம்தான், உங்கள் கஷ்டம் புரிகிறது. நல்ல விதைகள் இல்லாவிட்டாலும் பரவாயில்லை, அதற்காகக் கெட்ட விதைகளை விதைக்க வேண்டாம். சும்மா இருந்தாலே போதும், புண்ணியமாய் போகும்!

... நாவானது சிறிய அவயவமாயிருந்தும் பெருமையானவைகளைப் பேசும். பாருங்கள், சிறிய நெருப்பு எவ்வளவு பெரிய காட்டைக் கொளுத்தி விடுகிறது! யாக். 3:5

நாவில் உற்பத்தி செய்யப்படும் ஒரு சிறிய தீக்குச்சியின் அளவான வசனத்திற்குப் புறம்பான வார்த்தை முதலாவது நம் சரீரத்தையும், அடுத்ததாக நம் வாழ்க்கையையும், அதற்கடுத்ததாக நம் நித்தியத்தையும் நோக்கித் தன் தாக்குதலைத் தொடர்ந்து நடத்துகிறது. தெரியாத்தனமாக சிகரெட் பற்ற வைத்துவிட்டு வீசியெறியப்பட்ட தீக்குச்சி குப்பையில் கிடந்த கிழிந்த பேப்பரின் மேல் பற்றியது, தொடர்ந்து புகைந்தது. காற்று அடிக்க ஆரம்பித்தது, தணலை அசைத்து அசைத்து அதை கொஞ்சம் பெரிய அளவிலான நெருப்பாக மாற்றியது. குப்பை மேட்டின் மேல் நெருப்பு பரவியது, அருகில் இருந்த ஓலைக்குடிசையின் அடித்தளத்தை மெதுவாகத் தன் கையை நீட்டி தொட்டுப் பார்த்தது. ஒரு நிமிடம்தான், குடிசையின் மேலாக உயர்ந்த அக்கினி நன் நாக்குகளை நீட்டி “பத்திரம்” காட்டியது!

குடிசை வீட்டை ஒட்டி கட்டப்பட்டிருந்த அடுத்த வீட்டுக்காரர்கள் தங்கள் வீடுகளின் கூரைகளின் மீது தண்ணீரை பீய்ச்சி நெருப்பு பரவாதபடி தடுக்கப் பார்த்தனர். நெருப்பின் வேகத்தைத் தாக்குப்பிடிக்க முடியாத தண்ணீர் பின்வாங்கியது. நெருப்பை விட வேகமாக செய்தி பரவியது, தீயணைப்பு வாகனத்தில் மீட்புப்படையினர் வந்து இறங்கினார்கள். சிலமணி நேரங்களில் ... புகைமண்டலம் ... உள்ளே என்ன நடக்கிறதென்றே தெரியவில்லை. எல்லாம் முடிந்தபிறகு சாவகாசமாகப் போய் பார்க்கப் போனால் ... ! அந்தோ ... கருகிய கரிக்கட்டைகள்! இத்தினியூண்டு நாக்கை, தாடைகள், ஊன்கள், பற்கள், உதடுகள் போட்டு அடக்கி பூட்டி வைத்தபோதிலும் அது பண்ணுகிற சேட்டை! ... அப்பப்பா ... சொல்ல நாக்கு வரவில்லை!

நாவும் நெருப்புதான், அது அநீதி நிறைந்த உலகம்; நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச்சரீரத்தையும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொளுத்திவிடுகிறதாயும், நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது! யாக். 3:6

ஒரு கதையில் படித்த வரிகள் ஞாபகத்துக்கு வருகிறது. “துக்கத்தினால் தொண்டை அடைத்தது, பேச வார்த்தைகளே வரவில்லை, வார்த்தைகள்

தொண்டையிலேயே சிக்கிக்கொண்டன!" ரொம்ப நல்லது, வார்த்தைகள் அப்படியே அங்கேயே சிக்கிக்கொண்டு இருக்கட்டும். பேச முடியாத ஊமைகளைப் பார்க்கும் போது பரிதாபப்படுகிறோம். என்றாலும் பேசுபவர்களைப் பார்க்கிலும் அவர்கள் பாக்கியவான்கள் என்று நினைக்கத் தோன்றுகிறது! தங்களுக்கு வரவேண்டிய ஆசீர்வாதங்களைத் தங்கள் வார்த்தைகளால் கெடுக்காமல் இதுவரை பாதுகாத்தார்களே. சரீரத்தில் உள்ள குறையை ஊக்குவிக்கும்படி இதை எழுதவில்லை. ஒரு ஒப்புவமைக்காக எழுதினேன். அவர்கள் பேச வேண்டும் என்பதே தேவனுடைய சித்தம்.

... ஊமையன் நாவும் கெம்பீரிக்கும்; ... ஏசா. 35:6

பிசாசு துரத்தப்பட்ட பின்பு ஊமையன் பேசினான்... மத். 9:33

இனிமேல் அவர்களுக்கு சம்பூரணம் உண்டாயிருக்கும்! இயேசுவின் தழும்புகளால் சுகமானார்கள்!

... உதடுகளின் கீழே பாம்பின் விஷம் இருக்கிறது; ரோம. 3:13

குழம்பு தாளிக்க "கடுகு இல்லை" என்று கூடச் சொல்லக்கூடாதாம், கடுகு டப்பா காலியாக "இருக்கு" என்று சொல்ல வேண்டுமாம்! வேடிக்கையாக இருந்தாலும் அதில் நிஜம் இருக்கிறது இல்லையா? இப்படி சின்ன விஷயம் முதல் மலையைப் பெயர்க்கத்தக்க விஷயம் வரை வார்த்தைகளைச் சரியான விதத்தில், ஆவியானவரின் ஆலோசனையின்படி, வசனத்தில் இருந்து எடுத்து, உபயோகித்துப் பாருங்கள் ... என்ன நடக்கிறது என்று எங்களுக்கு கடிதம் எழுதித் தெரிவியுங்கள்!

## பாம்புகளும் ஏணிகளும் (பாம்புக்கட்டம்):

பாம்புக்கட்டம் என்ற ஒரு விளையாட்டு தமிழ்நாட்டில் பரவலாக உண்டு. உங்களில் அநேகர் கூட விளையாடி இருக்கலாம். நூறாகப் பிரிக்கப்பட்ட ஒரு பெரிய கட்டத்தில் கீழேயிருந்து இடது சாரியாக வரிசையாக ஒன்றிலிருந்து 100 வரை எண்கள் போடப்பட்டிருக்கும் **(10 nos. in each ten rows).** விளையாடுபவர்கள் மாற்றி மாற்றி 1, 2, 3, 4, 5, 6 என்று இலக்கமிட்டிருக்கும் ஒரு சிறிய கனசதுரத்தை **(cubical square)** குலுக்கி போடுவார்கள். விழும் எண்களின் அளவிலான சதுரங்களை அவர்கள் தங்களுடைய அடையாளக் குறிகளுடன் கடக்க வேண்டும்.

படத்தின் மேல் பல வித அளவிலான ஏணிகளும், சிறியதும் பெரியதுமான பாம்புகளும் காணப்படும். ஏணிகள் கீழே இருந்து மேல் நோக்கியும், பாம்புகளின் வாய்ப்பகுதி மேல்புறத்திலுமாக வரையப்பட்டிருக்கும். குலுக்கி போடும் கனசதுரம் 3 என்று காட்டினால், 3 சதுரங்களை கடக்க வேண்டும். அடுத்தவருக்கு 5 என்று வந்தால் அவர் 5 சதுரங்களைக் கடப்பார்.

நிறுத்தும் இடத்தில் ஏணி வந்தால் அதன் வழியாக ஏறி அது முடியும் இடத்திலுள்ள எண்ணிற்குப் போய்விடலாம். (உ.ம்.) எண் 7—ல் ஏணி இருந்தால், ஏறி அது முடிவு பெறும் இடமான 68 க்கு வந்துவிடலாம். இப்படி

*ஏறிப் போய்க்கொண்டேயிருக்கும்போது பாம்பின் வாய் இருக்கும் கட்டத்திற்குள் வந்து விட்டால்? சரசர வென்று இறங்கி அதன் வால் பகுதியிருக்கும் கட்டத்திற்கு வந்துவிட வேண்டியதுதான்! (உ.ம்.) 68 —லிருந்து இறங்கி எண் 4—க்கு வந்துவிட வேண்டியதுதான்.*

*பரபரப்பான இந்த விளையாட்டில் 100ஐ எட்டுபவர் வெகுச் சிலரே. நம் விசுவாச, மற்றும் அவிசுவாச வார்த்தை விளையாட்டிலும் இதுபோன்ற காரியங்கள்தான் நடக்கிறது. நம்முடைய ஒரே ஒரு அவிசுவாச வார்த்தை, அதற்கு முன்னதாக நாம் பேசியிருந்த 72 விசுவாச வார்த்தைகளையும் ரத்து* **(cancel)** *செய்து விடும்! அதே நேரத்தில் நாம் தவறுதலாகப் பேசிய வார்த்தைகள் நிமித்தம் வருந்தி, அவற்றை இயேசுவின் நாமத்தில் பிடுங்கி சுட்டெரித்துவிட்டு, ஒரு விசுவாச வார்த்தை பேசினோமானால் … மேலே போய்விடலாம்! விசுவாச வார்த்தை கண்களால் காணமுடியாத விசுவாச உலகத்திலிருந்து ஐசுவரியங்களை இறக்கிக் கொண்டு வருகிறது.*

*… விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது (கிறிஸ்துவின் சுவிசேஷம்) தேவபெலனாயிருக்கிறது. ரோமர். 1:16*

*… அவர்கள் அவிசுவாசத்திலே நிலைத்திராதிருந்தால் அவர்களும் ஒட்டவைக்கப்படுவார்கள்.*

*அவர்களை மறுபடியும் ஒட்டவைக்கிறதற்குத் தேவன் வல்லவராயிருக்கிறாரே. ரோமர். 11:23*

*அவிசுவாசத்தால் தோற்ற விசுவாசிகளே சோர்ந்து போகவேண்டாம், இறுதிவரை போராடுவோம்! அதாவது தோல்வியின் இறுதிகட்டம் வரை! அந்த இறுதி கட்டம் இன்றைக்கே கூட இருக்கலாம்.*

## விசுவாசத்தைப் பற்றி இன்னும் கொஞ்சம்:

*விசுவாசம் பிரச்சனையை பார்த்து சிரிக்கும். சாதாரணமாகக் கிண்டலாகச் சிரிக்கும். ஏனென்றால் விசுவாசத்திற்குத் தெரியும், இந்த பிரச்சனை தனக்கு ஒரு பிரச்சனையே இல்லையென்று! அதுமட்டுமல்ல, அந்த பிரச்சனை தனக்கு ஒரு பிரச்சனையே அல்ல என்ற உண்மை அந்த பிரச்சனைக்குத் தெரியலையே என்று நினைத்தும் சிரிக்கும்! (தேவன் எதிர்பார்க்கும் விசுவாசம் உள்ளவருக்கு இதைப் புரிந்துக் கொள்வது ஒரு பிரச்சனையே அல்ல!)*

*விசுவாசம் பிரச்சனைகளை ஒன்றுமில்லாததாக்கிவிடும். அவிசுவாசம் ஒன்றுமில்லாததையெல்லாம் பிரச்சனையாக்கிவிடும்!*

*விசுவாசம் — அது கடைக்குச் செல்லும்போது கூடவே கூடையை எடுத்துக்கொண்டு போகும்.*

*அவிசுவாசம் — “பணமில்லையே” என்ற யோசிக்கும்.*

*விசுவாசம் ஆகாயத்தில் காலைத் தூக்கி வைக்கும் போதும் அங்கே படிகள் இருப்பதைப் பார்க்கும். அவிசுவாசம் நிஜமாகவே படிகள் இருந்தாலும் யோசிக்கும், அது மாயையோ என்று!*

*விசுவாசம் வாக்குத்தத்தங்களுக்குள் தேவனைச் சிக்க வைக்கும்!*

*அவிசுவாசம் சாத்தானுடைய வார்த்தைகளுக்குள் சிக்கிக்கொள்ளும்.*

*விசுவாசம் தன்னையுடையவனின் வாழ்க்கையில் வாக்குத்தத்தங்களை நிறைவேற வைக்கும். அதுமட்டுமல்ல, அவனைச் சாட்சியாக நிறுத்தும். எப்படி? தேவன் வாக்குப்பண்ணின ஒரு காரியம் அவனுடைய வாழ்க்கையில் நிறைவேறும்போது, அந்த வாக்கு நிஜம், உண்மை, சத்தியம் என்பதற்கு அவன் சாட்சியாக மாறுகிறான்.* **Halls tablets** *இருமலுக்கு நல்லது. அதை மென்றால் தொண்டை கரகரப்பு சரியாகிவிடும் என்று விளம்பரம் பண்ணி, வாக்கு பண்ணுகிறார்கள். அதன்படியே ஒருவன் அதை மெல்கிறான், அவன் இருமல் நின்று விடுகிறது. விளம்பரம் (வாக்கு) உண்மையானது என்பதற்கு இப்போது அவன் சாட்சியாயிருக்கிறான்.*

*விசுவாசம்,* **practice** *பண்ணுவதால் வருகிறது. கேள்வி(பிரசங்கம்) படுவதன் மூலம், திரும்பத் திரும்ப விசுவாசத்தை தூண்டும் பிரசங்கங்களைக் கேட்டுக் கொண்டே இருப்பதன் மூலம் நம் ஆவி விசுவாசிக்கும் ஆற்றலைப் பெற்றுக் கொள்ளுகிறது.*

*விசுவாசம்* **not possible** *(சாத்தியமில்லை) என்று சொல்லாது,* **sure** *(நிச்சயம்) என்று சொல்லும்.*

## நாம் யார்?

*நம்மைத் தேவன் ஏன் சிருஷ்டித்தார். நம்மைக் குறித்ததான அவருடைய எண்ணங்கள், திட்டங்கள், நோக்கங்கள் என்னென்ன என்பதை தியானித்தோமானால், நாம் ஆசீர்வாதமாக இருக்கவே படைக்கப்பட்டவர்கள் என்பது புரியும்.*

*“வானங்கள் கர்த்தருடையவைகள்; பூமியையோ மனுபுத்திரருக்குக் கொடுத்தார். சங். 115:16”*

*அதாவது இந்த பூமி நமக்குத்தான் சொந்தம். எனக்கென்று எதுவுமில்லை, இப்பூமி சொந்தமில்லை என்று அறியாமல் நானும் பாடியதுண்டு. இப்போதோ எனக்கு எல்லாம் உண்டு, இப்பூமி எனக்கே சொந்தம் என்று மாற்றிப்பாடுகிறேன். பாட்டு எழுத ஒரு கவிஞரோ, இசையமைப்பாளரோ தேவையில்லை, எல்லாம் நம் கையில்தான், அசத்துவோம்.*

*மனிதர்கள் எதையெல்லாம் பேசினார்களோ அவைகள்தான் இந்த பூமியில் நடந்து கொண்டிருக்கிறது! தேவன் என்ன பேசுகிறாரோ அவைகளெல்லாம் பரலோகத்தில் நடந்து கொண்டிருக்கிறது. ஆதியிலே பிதா, குமாரன், பரிசுத்தாவியானவர் மூவரும் பேசிக்கொண்டிருந்தபோது எல்லாம் நன்றாகத்தான் இருந்தது, பூமி பரலோகமாக இருந்தது. என்றைக்கு மனிதன் பேச ஆரம்பித்தானோ அன்றே எல்லாம் அலங்கோலமாகிப் போனது.*

*மனிதன் எப்போது பேச ஆரம்பித்தான்? ஆதியாகமம் 3—ஆம் அதிகாரத்தில்தான் பேச ஆரம்பிக்கிறான், (பேச்சைத் துவக்கி வைத்தது ஏவாள்*

தான்) ஆதாமும் ஏவாளும் தங்களுக்குள்ளாகப் பேசிக்கொண்டிருந்தவரை பிரச்சனை தலைதூக்காமல்தான் இருந்தது. ஏனென்றால் இரண்டுபேருமே அப்போது தேவனுடைய சாயலில் படைக்கப்பட்டு, தேவனைப் போல பாவமில்லாதவர்களாக, பரிசுத்தமாக இருந்தார்கள். ஆனால் சாத்தானுடைய வார்த்தைகள் உள்ளே நுழைந்தபோது?

தேவன் பொய் சொன்னார் என்று துணிச்சலாகப் பொய் சொன்ன சாத்தானின் வார்த்தைகள்... அந்த வார்த்தைகளின் கவர்ச்சி ... தேவனைவிட அதிகமாக ஏதோ ஒன்று சாத்தானிடம் இருப்பதாக அவர்களை நினைக்க வைத்தது. அந்த வார்த்தைகள் அவளுடைய, அவனுடைய இருதயத்தில் அரணாக மாறியது. பிறகு அதிலிருந்து பிறப்பிக்கப்பட்ட வார்த்தைகள் ... சாத்தானுடைய வார்த்தைகளின் கலப்படமாகவே இருந்தது. பிறகென்ன தொடர்ச்சியாக 6000 வருடங்களுக்கு மேலாக இப்படிப்பட்ட வார்த்தைகளே விதைகளாகிப் போனது, அதுவே விளைச்சலாகிப் போனது.



இப்படியாக உலகத்திற்குள் சாபம் பிரவேசித்த கதையை ஒரு உதாரணத்துடன் பார்ப்போம். **Greak Wender** என்ற அமெரிக்க விஞ்ஞானி செயற்கையான குரோமசோம்களை உருவாக்கி, அதன் மூலம் புதிய உயிரினத்தை **(DNA)** உருவாக்கி இருக்கிறார். ஒரு பாக்டீரியாவை எடுத்து, அதின் பெரும்பான்மையான ஜீன்களை நீக்கி, பிறகு அதற்குள் செயற்கையான டி.என்.ஏவை செலுத்தி இயங்கச் செய்து, புதிய வகை பாக்டீரியா உயிரியை உருவாக்கியுள்ளார். இயற்கை படைக்காத முதல் உயிரியை உருவாக்கிய பெருமையையும் பெற்றிருக்கிறார். (ஆனால் இதை உபயோகிக்கத் தேவையான மூலப் பொருட்களை அவர் இயற்கையில் இருந்துதான் எடுத்தார் — இயற்கை தேவனால் உருவானது — ஆனால் விஞ்ஞானம் இயற்கையை பரிணாமம் என்கிறது.)

இந்த பாக்டீரியாவினால் என்ன பிரயோஜனம்? இந்த பாக்டீரியாவினால் கார்பன்—டை—ஆக்சைடு வாயுவை குறைக்கலாம். இப்படி குறைப்பதன் மூலம் சுற்றப்புறசூழல் மாசுபடுவதை தடுக்க முடியுமாம். புதிதான எரிபொருட்களையும் உருவாக்க முடியுமாம். நல்லதுதான், ஆனால் இதன் மறுபக்கத்தில் என்ன நடக்கப் போகிறது? மனுக்குலத்தை அழிக்கும் சக்தி வாய்ந்த உயிரி ஆயுதங்களை உற்பத்தி செய்ய இது வழி செய்யும் என்று சில விஞ்ஞானிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்கள்.

**Greak** நல்லவரா? கெட்டவரா? அது இப்போது முக்கியமல்ல, சாத்தான் கண்டிப்பாக நல்லவனில்லை, கெட்டவன்தான்! தன்னுடைய விஞ்ஞானக்

கண்டுபிடிப்பால் (ஜீன்கள் மாற்றப்பட்ட வார்த்தைகளால்!) உலகத்தையே கெடுத்து நாசமாக்கி விட்டானே, அவனை சும்மா விடலாமா?

ஏறக்குறைய இந்த நிகழ்வுதான் ஏதேன் தோட்டத்தில் சாத்தானின் வார்த்தைகள் மூலம் நடந்தது. "நன்மை தீமை அறியத்தக்க மரத்தின் கனியை புசித்தால் சாகவே சாவீர்கள்" என்ற தேவனுடைய வார்த்தையை சாத்தான் மாற்றினான். "நீங்கள் சாகவே சாவதில்லை" என்ற பொய்யான வார்த்தையால் தேவனுடைய உண்மையான வார்த்தையை மாற்றி அதன் உருவத்தை ஏவாளுக்கு விருப்பமாக தோன்றும் அளவுக்கு மாற்றியமைத்தான். அதுமட்டுமல்லாமல் நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப் போல இருப்பீர்கள் என்ற வார்த்தைகளையும் சேர்த்து, தேவனுடைய வார்த்தையின் தன்மையை மாற்றினான். ஆனால் அவன் தன்னுடைய நஞ்சை கலக்குவதற்கு தேவனுடைய வார்த்தையைத்தான் உபயோகிக்கிறான் கவனியுங்கள்!

இப்படியாக சாத்தானால் புதிதாக தயாரிக்கப்பட்ட சாப விதை நிலத்தில் விழுந்தது, முளைத்தது. அந்த விளைச்சலினால் கிடைத்த விதையிலும் அதே நச்சு மறைந்திருந்தது, இன்னும் அதிகமாக.... இப்படியாக சாபம் நீடித்தது, தொடர்ந்தது.

சத்தியத்தை அறிந்துக் கொள்ளுவோம், அதுதான் நம்முடைய போராயுதம். சத்தியம் நமக்கு தெரிந்து விடக்கூடாது என்பதில் அவன் மிகவும் கவனத்துடன், ஜாக்கிரதையாக இருக்கிறான். அது என்ன சிதம்பர இரகசியம்? இயேசு சிலுவையில் அந்த சாபத்தை மாற்றி, சாபத்திற்குக் காரணமான ஜீன்கள் மாற்றப்பட்ட பாக்டீரியாக்களை அழித்துவிட்டார் என்பதுதான் அந்த சத்தியம். இது எத்தனை பேருக்குத் தெரியும்? காவேரி நதி வெள்ளப்பெருக்கெடுத்து பாய்ந்தோடினாலும் நாய் நக்கித்தான் குடிக்குமா!

இப்படிப்பட்ட அவல நிலமையில்தான் சபை விசுவாசிகள் காணப்படுகிறார்கள். தேவனுடைய சிலுவை ஆசீர்வாதங்களை ஊறுகாய் போலத் தொட்டுக் கொள்கிறார்கள். கூட்டுபோல **(Side dish)** உபயோகப்படுத்தவா இவ்வளவு அபரிமிதமான ஆசீர்வாதங்கள்? தட்டையே நிரப்பும் பெரிய சைசில் சிக்கன் பீஸ் இருக்க... பிளேட்டு நிறைய சாதத்தை குவித்துக் கொண்டு, ஓரமாக ஒரு சிறிய துண்டு சிக்கனை வைத்துக் கொண்டு, அதன் வாசனையிலேயே சாப்பிட்டுக் கொண்டிருக்கிறோமே! அந்தோ பரிதாபம்!

பிசாசு நுழைவதற்கு முன்பாக மனிதனுக்கும் தேவனுக்கும் உள்ள உறவு மிகவும் நெருக்கமானதாக இருந்தது. அவர் ஏதேன் தோட்டத்தில் மனிதனுடன் உலாவிக்கொண்டிருந்தார். ஆனால் சாத்தானின் வார்த்தைகள் மூலம் அசுத்தம் மனிதனுக்குள் வந்ததால், பிறகு தேவனால் அவர்களுடன் வாசம் (வசிக்க) செய்ய முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. தேவனுடைய அன்புக் குறைச்சலால் இது நடக்கவில்லையென்பதைக் கவனியுங்கள். மனிதனுக்கும் தேவனுக்கும் இடையே இடைவெளி விழுந்துவிட்டதால், தேவனுடன் தொடர்பு வைக்க ஜெபம் என்ற ஒரு முறைமை பரிசுத்தாவியானவரால் கொண்டுவரப்பட்டது.

என்றாலும் தேவனிடமிருந்து விலக்கப்பட்டு, சாத்தானால் துண்டாடப்பட்ட உலகத்தில் மனிதன் தேவனுடன் உறவு கொள்வதென்பது முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்ட கதையாகத்தான் இருந்தது. பல காலகட்டங்களில் தேவனுடைய வார்த்தைகள் அபூர்வமாயிருந்தது என்று வாசிக்கிறோம். மனிதர்கள் அவனவன் தன்தன் மனம் போன போக்கில் நடக்க ஆரம்பித்தார்கள். என்றாலும் தேவனுக்குப் பிரியமான தேவமனிதர்கள் அவருடைய சித்தத்தின்படி வாழத்தான் செய்தார்கள். (உம். ஆபிரகாம், மோசே, தாவீது) ஜெப வீரர்களாக இருக்கத்தான் செய்தார்கள் (உம். தானியேல், எசேக்கியா, யோசுவா). நாம் சத்தியத்தை அறிந்து கொண்டு, தேவனுடனான உறவைச் சரிசெய்துக் கொள்வோமானால்; மீண்டும் அவரோடு உலாவும் ஒரு ஏதேனின் ஜெப அனுபவத்தைப் பெற்றுக் கொள்ளலாம். ஏனோக்கு, நோவா போல தேவனோடு சஞ்சரிக்கும் **(walking with Jesus)** அனுபவத்தையும் பெற முடியும். வானத்தையும், பூமியையும், அதன் நிறைவையும் உண்டாக்கிய தேவனுடன் கைகோர்த்துக் கொண்டு நடக்கும் அனுபவம்தான் ஜெபம்! அது உல்லாசமாக பறக்கும் அனுபவம், கனவுலகில் மிதக்கும் அனுபவம்! இந்த சத்தியம் தெரியாத காரணத்தினால்தான் ஜெபம் என்பது அநேகருக்கு ஒரு பாரமான அனுபவமாகிப்போனது.

இடைவெளி விழுந்து விட்டது, ஆனாலும் மனிதனுக்கென்று தான் ஆசைஆசையாக உருவாக்கிய உலகத்தை, போனால் போகட்டும் என்று சாத்தானிடம் விட்டுவிடத் தேவன் தயாராக இல்லை. இந்த உலகத்தைச் சாத்தானிடமிருந்து மீட்டு, அதன் நச்சுத்தன்மையை அதை விட்டு அகற்றி, ஆதியில் இருந்த மாசுமருவில்லாத உலகத்தை உருவாக்கத் தேவன் உடனுக்குடனேயே திட்டமிட்டுவிட்டார்.

அதற்கான **concept** அப்போதே அவருடைய இருதயத்தில் இருந்ததை இந்த வசனத்தில் பார்க்கிறோம்.

உனக்கும் (சாத்தான் என்ற பாம்புக்கும்) உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் (இயேசு) உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார். ஆதி. 3:15

தன்னுடையத் திட்டத்தை நிறைவேற்றவே தன் ஒரே பேறான குமாரன் இயேசுவை அனுப்பினார். அப்போது அவருக்கு ஒரே ஒரு குமாரன்தான் இருந்தார். இன்றோ மணலத்தனையான குமாரர்களும், குமாரத்திகளும் அவருக்குண்டு. (அது நாம்தான்...)

“அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார். யோவான் 1:12”

அந்த ஒரே பேறான குமாரன் இயேசு இந்த உலகத்தை மீட்க இந்த உலகத்திற்கு வரத் தேவையான ஏற்பாடுகள் செய்ய பிதாவுக்கு 4000 வருஷங்கள் தேவையாயிருந்தது? ஏன் அவ்வளவு நீண்ட காலங்கள்? அதை உடனே செய்திருக்கலாமே, என்று யோசனையாகத்தான் இருக்கிறது. பிதாவாகிய

*தேவன் தன்னுடைய வார்த்தையை — அதாவது தன் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை உலகத்திற்கு மனிதனாக அனுப்புவதற்கு முன்னதாக ஒரு காரியம் செய்ய வேண்டியதாயிருந்தது. இயேசுவின் வருகையை குறித்து அநேக தீர்க்கதரிசிகளின் மூலமாகத் தீர்க்கதரிசனம் சொல்ல வைக்க வேண்டியதிருந்தது. தேவனுடைய வார்த்தையின் வல்லமை, அதை அறிக்கை செய்யும்போது காணும் பொருளாக மாறுகிறது! அதனால்தான் அவருடைய சாயலில் படைக்கப்பட்ட நாம் சொல்லுகிறபடியும் நடக்கிறதென்பதை முன்னதாகவே பார்த்தோம். அப்படியாக 4000 வருஷங்களாக பல்வேறு தீர்க்கதரிசிகளின் மூலமாக உரைக்கப்பட்ட வார்த்தை இயேசுவாக உருமாறியது, தேவன் மனிதனானார்!*

*“இயேசுகிறிஸ்துவைக்குறித்துத் தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலமாக பரிசுத்த வேதாகமங்களில் முன்னே தம்முடைய சுவிசேஷத்தைப்பற்றி வாக்குத்தத்தம்பண்ணினபடி கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவானவர்... ரோமர் 1:4”*

*வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் பிறந்துவிடக்கூடாது என்பதற்காக சாத்தான் பழைய ஏற்பாட்டின் பரிசுத்தவான்களுடன் (இயேசுவின் பிறப்பின் வம்சாவழியினர்) தொடர்ச்சியாக போராட்டம் நடத்துவதைப் பார்க்கிறோம். ஏனென்றால் இயேசு வந்தால் தன்னுடைய இராஜ்ஜியத்திற்கு முடிவு கட்டிவிடுவார் என்று சாத்தானுக்குத் தெரியும். அவனுடைய முயற்சிகள் தொடர்ச்சியாக தோற்கடிக்கப்பட்டு வார்த்தைகள் நிறைவேறுகிறது. 4000 வருஷகாலங்களாக உரைக்கப்பட்டத் தீர்க்கதரிசன வார்த்தைகளின் வல்லமையை சாத்தானால் எதிர்கொள்ள முடியாமல் போனது.*

*இயேசு கிறிஸ்து பிறந்த பிறகும் அவரைக் கொல்லுவதற்கான முயற்சிகள் எடுக்கிறான், தோல்வியடைகிறான். அவர் சிலுவை மரணத்தைச் சந்திக்கக்கூடாது என்பதற்கான முயற்சிகளை எடுக்கிறான், அதிலும் தோல்வி! இயேசு சிலுவையில் வெற்றி சிறந்தார்! சாத்தானைத் தோற்கடித்தார், அவனிடமிருந்து உலகத்தை மீட்டார், பாதாளத்தின் திறவுகோலைப் பிடுங்கினார். பழைய உடன்படிக்கையை முறித்தார், மனிதனின் வேலைகளை, பொறுப்புகளையெல்லாம் தன் தோள்மீது போட்டுக் கொண்டார். கிரியை செய்து, செய்து, களைப்படைந்து தோற்றுப்போன மனுக்குலத்திற்குக் கிருபையென்கிற இளைப்பாறுதலைக் கொடுத்தார். சகலத்தையும் புதிதாக்கினார் — தலைகீழாக — நினைத்துப்பார்க்க முடியாத அளவுக்கு — பிரமித்து, கண்ணைத் தட்டி முழிக்காமல் பார்க்கும் அளவுக்கு!*

*இதற்கப்புறமாவது சாத்தான் சும்மா இருக்கிறானாவென்றால் அதுதான் இல்லை. தலைநசுக்கப்பட்டாயிற்று, குற்றுயிரும் குலைஉயிருமாக போராடிக்கொண்டிருக்கிறான். இருக்கப்போவது இன்னும் கொஞ்சம்காலம், அதற்குள் முடிந்தவரை மனிதர்களை ஒரு வழி பண்ணுவோம், அவர்களின் கதையை முடிப்போம் என்று போராடுகிறான். அக்காலத்தில் பார்த்த ஒரு திரைப்படத்தின் ஒரு காட்சி. வில்லன் கதாநாயகனால் சுடப்படுகிறான்.*

குண்டு நெஞ்சில் பாய்ந்துவிடுகிறது, உயிர் ஊஞ்சலாடுகிறது. உயிர் போகுமுன்னதாக தரையில் இரத்தத்துடன் நகர்ந்து நகர்ந்து கைக்கெட்டிய தூரத்தில் கிடந்த ஒரு கைத்துப்பாக்கியை எடுக்கிறான். அந்த நிலைமையிலும் கண்ணில் படுகிற ஒரு சில எதிரிகளை சுட்டுத் தள்ளுகிறான், கை தளர்கிறது, அப்படியே செத்துப் போகிறான். சாத்தானின் பரிதாப நிலை இதுதான்.

ஆனால் இனிமேல் யாரையும் அவன் இப்படிக்கூட சுட்டுக் கொல்லக்கூடாது. இந்த உலகத்திலுள்ள எந்த மனிதனின் மீதும் அவனுக்கு அதிகாரம் கிடையாது... சொந்தம் கொண்டாட முடியாது. எந்தவொரு மனிதனும் தேவனுடைய சிருஷ்டிப்பு, எல்லோருமே தேவனுக்குச் சொந்தமானவர்கள். இந்த உணர்வுடன் போராடுவோம். **O.K.** தேவன் சிலுவையில் தன்னுடைய குமாரன் மூலம் செய்ய வேண்டியதையெல்லாம் செய்து முடித்துவிட்டார். ஆனால் அவருடைய நோக்கம் நிறைவேறியதா? அவருடைய சித்தம் நடந்ததா? உலகம் சாத்தானிடமிருந்து பிடுங்கப்பட்டாயிற்று. ஆனால் உலகத்தில் தாண்டவமாடும் பயங்கரங்கள், உச்சக்கட்டப்பாவங்கள், பாழ்க்கடிப்புகள் — பார்க்கும்போது இயேசு ஜெயித்த மாதிரியே தெரியவில்லையே, அது ஏன்? என்னதான் நடக்கிறது? எங்கேயோ தவறு நடந்துகொண்டேயிருக்கிறதே? அது என்ன?

ஒரு அதிர்ச்சி தரும் உண்மையென்னவென்றால், தேவனுடைய நோக்கம் நிறைவேறவில்லை என்பதே அந்த உண்மை!

“தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர்: நீர் செய்ய நினைத்தது தடைபடாது ... யோபு. 42:2”

என்றுதானே வசனம் இருக்கிறது. ஆனால் அவர் செய்ய நினைத்தது தடைபட்டதேன்?

நம்முடைய **Co-operation** இல்லாததுதான் காரணம். சாத்தானோடு சேர்ந்து கொண்டு ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்த மனுக்குலத்தின் அறிவுகெட்டத்தனத்தால் தேவன் செய்ய நினைத்தது தடைபட்டது.

ஏதேன் தோட்டத்தில் தன்னுடைய ரூபத்தின்படி ஆதாமை தன்னுடைய பிள்ளையாகத்தான் உருவாக்கினார். பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள் என்றார், ஏன்? கணக்கிலடங்காத தன்னுடைய குமாரர்களோடும், குமாரத்திகளோடும் உலாவ வேண்டும் என்பதற்காகத்தான். ஆனால் அவர் செய்ய நினைத்தது தடைபட்டுப்போனதே? — மனிதன் சாத்தானின் வார்த்தைகளை நம்பியதால், இது நடந்தது.

நியாதிபதிகளையும், தீர்க்கதரிசிகளையும், ராஜாக்களையும், பத்து கட்டளைகளையும், நியாயப்பிரமாணத்தையும், பரிசுத்தாவியானவரின் தற்காலிக அபிஷேகத்தையும் ஏற்படுத்தி வைத்தார். தரிசனங்கள், சொப்பனங்கள் மூலமாக மனுக்குலத்தோடு தொடர்பு கொண்டார். என்றாலும் மனிதன் மாறவில்லை. தேவன் மனம் வருந்தினார், அங்கலாய்த்தார், புலம்பினார் (ஓசி. 11:8). அவர் செய்ய நினைத்தது பழைய ஏற்பாட்டின் முடிவுபரியந்தம் தடைபட்டுப்

போனது.

தன்னுடைய ஒரே பேறான குமாரனை (இயேசுவை) அனுப்பி, பாவத்தையும், மரணத்தையும் ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார். நமக்கு எதிரிடையாக இருந்த நியாயப்பிரமாணத்தை மாற்றி, சாத்தியமாகக்கூடிய, எளிதான நுகமான புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தினார். பாவம், அதனால் வந்த சாபம், அதனால் வந்த நோய்கள், தரித்திரம் எல்லாவற்றிற்கும் முடிவு கட்டினார். இப்போதாவது அவர் செய்ய நினைத்தது நடந்ததா என்றால், அதுதான் இல்லை. ! ஏன்? மனிதனின் அறியாமைதான். தேவனுடைய வார்த்தைகளின் வல்லமையை அறியாமல் அவற்றை புறக்கணித்ததால். தன்னுடைய வார்த்தைக்கும் வல்லமையுண்டு என்பதை உணராமல், அதைத் தாறுமாறாக உபயோகித்ததால். தோல்வியைத் தழுவிய நியாயப்பிரமாணத்தால் வெற்றிக்கான முயற்சிகளை எடுத்ததால். பரிபூரண வெற்றியை அடையத்தகுந்த விதத்தில் இயேசு ஏற்படுத்திய புதிய உடன்படிக்கையை அறிந்து கொள்ளாமல் போனதால். சத்தியம் விளங்காததால், தேவன் செய்ய நினைத்தது தடைபட்டுப் போனது.

போனது போகட்டும், தேவன் செய்ய நினைத்தது இந்த உலகத்தில் நடக்க ஆவியானவர் இக்கடைசிக்காலங்களில் புதிய உடன்படிக்கையைப் பற்றிய வெளிச்சத்தை தந்துகொண்டிருக்கிறார். அநேகர் எழும்பி இந்த சத்தியத்தைப் பிரசங்கிக்கிறார்கள். ஏற்றுக்கொண்டோமானால் தேவன் செய்ய நினைத்தது தடைபடாமல் நடக்கும். **Co-operate** பண்ணுவோம், நம் அப்பாவுக்குத் தோள் கொடுப்போம், இணைந்து நடப்போம்.

அரசியலில் கட்சித் தொண்டர்கள் தங்கள் கட்சித் தலைவர் என்ன சொன்னாலும் "ஆமாஞ்சாமி" என்பார்கள். தலைவர் என்ன சொன்னாலும் பூம்பூம் மாடுபோல தலையை ஆட்டிய தொண்டர்களெல்லாம் இன்றைக்கு பெரிய ஆளாகிவிட்டார்கள். கார் என்ன, பங்களா என்ன! சாதாரண மனிதனின் வார்த்தைக்கு தலையாட்டியவர்களுக்கு வந்த வாழ்வைப் பாருங்கள். இதை ஒரு உதாரணத்திற்கு கொண்டு வருகிறோம், அதற்காக அப்படி சம்பாதிக்கலாம் என்று நினைத்து விடாதீர்கள். அந்த பணத்திற்கும் தேவனுக்கும் சம்பந்தமில்லை.

வானத்தையும் பூமியையும் படைத்த நம் தேவாதி தேவனுடைய வார்த்தைக்கு நாம் ஜால்ரா போட்டிருந்தால், இந்நேரம் பெரிய ஆளாகி இருப்போம். ஆபிரகாமைப் போல பொன்னும் வெள்ளியும் உடைய சீமானாக இருந்திருப்போம். தேவன் என்ன சொன்னாலும் "ஆமா" போடுங்கள் (வில்லுப் பாட்டு போல!) "நீ பனையைப் போல செழிப்பாய் என்கிறார்." "அதெப்படி? நான் 5 அடி உயரம்தானே இருக்கேன்?" என்று யோசித்துக் கொண்டிருந்தால்...? அவ்வளவுதான் ஓலைக் குடிசைக்குள் இருந்து ஒரு நாளும் வெளியே வர முடியாது. யோசிக்காமல் உடனே வசனத்தை அறிக்கை செய்ய வேண்டும். "ஆமா அப்பா, நீங்க சொல்லிட்டீங்க, அது கண்டிப்பாக சத்தியமாகத்தான் இருக்கும், அதனால் நான் பனையைப் போல செழிப்பேன்" என்று

சொல்லுவோம்!

இப்படியாக வேத வசனங்களை, வார்த்தைகளை அறிக்கை செய்வோம். வார்த்தை நிஜமானதாக உருவாகும், உருவாக்கும். நாம் ஒவ்வொருவரும் தீர்க்கதரிசிதான், நாம் சொல்வதெல்லாம் நடக்கிறதென்றால் நாம் தீர்க்கதரிசிதானே? ஆனால் ஒரு நிபந்தனை **(condition!)** வேதத்தில் உள்ள ஆசீர்வாதமான வாக்குத்தத்த வார்த்தையை மாத்திரம்தான் உச்சரிக்க வேண்டும். இப்படியாக நீங்கள் மாத்திரமல்ல, நான் மாத்திரமல்ல, உலகளாவிய சபையில் உள்ள அனைத்து தேவ பிள்ளைகளும் இந்த ஆலோசனையின்படி வார்த்தைகளை அறிக்கையிட்டோமானால், அந்த வார்த்தைகள் உருவம் பெற்று உலகத்தை நிரப்பும். தேவன் உலகத்தையும், அதன் நிறைவையும், மனுக்குலத்தையும் உருவாக்கிய நோக்கம் நிறைவேறும், உலகமே பரலோகமாக மாறும்.

புதிய பிரமாண சத்தியம் துர்ப்பாக்கியமான விதமாக மிகச் சிறிய அளவில்தான், சில துளிகள் அளவில்தான் இக்காலங்களில் பிரசங்கிக்கப்படுகின்றன. என்றாலும் நாம் சோர்ந்து போக வேண்டிய அவசியமில்லை. நாம் எல்லோருமே தீர்க்கதரிசிகள்தானே? நாம் சொல்வது நடக்கும். அதனால் பல துளி பெரு வெள்ளம் என்று சொல்லுவோம்! தேவன் செய்ய நினைத்தது தடைபடாது, நிச்சயம் நடக்கும். உலகம் ஏதேனாக மாறும், உலகத்தின் சாபம், முள், குறுக்கு மறையும். பாவத்தின் பிரசன்னம் மறையும். தரித்திரர்கள் இருப்பதில்லை. உலகத்தின் பொன், தேவபிள்ளைகளுடைய ஆளுகைக்குள் வரும். வியாதியுள்ளவர்கள் இனி இருப்பதில்லை. இப்படியாக நம் அறிக்கையைத் தொடர்வோம்...

## ஜெபம் *(a view):*

நம் முற்பிதாக்கள் வனாந்தரத்தில் பேசிப்பேசியே அழிந்தார்கள். நாங்கள் அங்கேயே செத்துப் போனால் நலமாயிருந்திருக்குமே என்றார்கள், அப்படியே செத்தும் போனார்கள். முறுமுறுத்தார்கள், மோசேக்கு விரோதமாக எழுந்தார்கள், அழுது அவனை மனமடிவாக்கினார்கள். அவர்கள் வாயிலிருந்து எதையெல்லாம் உச்சரித்தார்களோ அதுவெல்லாம் அவர்களுக்கு நடந்தது. ஒருவர் கூட கானான் தேசத்தை எட்டிப்பார்க்கவில்லை. இந்த கடைசிக் காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நமக்கு இவை எச்சரிப்புண்டாக எழுதப்பட்டு இருக்கிறது. நம் நல்வாழ்க்கைக்குத் தேவையான நல்வார்த்தைகளுக்கு வாயைத் திறந்து, கேட்டுக்குத் தள்ளும் வார்த்தைகளுக்கு வாயை மூடிவிடவேண்டும்.

அதையும் மீறி, பீறிக்கொண்டு வார்த்தைகள் வந்துவிட்டதானால், உடனுக்குடன் வேர்விடுமுன்னதாகவே அவற்றை இயேசுவின் நாமத்தில் பிடுங்கி எறிந்துவிட வேண்டும்.

பாடுகள் வழியாகத்தான் பரலோகம் என்ற பாட்டை மாற்றி, பாலும் தேனும் ஓடும் பாதை வழியாகப் பரலோகம் என்று பாடுவோம்.

*நம்முடைய வாயின் வார்த்தைகளால் பிடிக்கப்படுகிறோம். ஏடாகூடாமாக எதையாவது பேசித் தொலைக்கும்போது; சாத்தானின் பூட்டு விழுந்துவிடுகிறது. நம் ஜெபவேளையில் சரியானவிதத்தில் அறிக்கை செய்யப்படும் வார்த்தைகள் அந்த பூட்டை உடைக்கும்.*

*அநேக பாடுகள் வழியாகத்தான் இயேசு இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தார், நாம் மட்டும் ரோஜா மலர்களை எதிர்பார்க்கலாமா? இப்படிப்பட்ட வாசகங்கள் வாசித்து, இரசிப்பதற்கு வேண்டுமானால் ஏற்றதாக இருக்கலாம், ஆனால் சத்தியம்? நமக்கு பாடுகள் இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் அவர் பாடுகளைச் சுமந்தார். இப்போதும் நாம் பாடுகளைத்தான் சுமக்க வேண்டும் என்றால் அவர் சுமந்ததற்கு அர்த்தம் இல்லையே?*

*ஜெபத்தில் நாம் என்ன செய்கிறோம்? தேவனை நோக்கி வார்த்தைகளை உச்சரிக்கிறோம். நாம் தேவனை அறிந்து கொள்ளாமல், தவறாகப் புரிந்துக் கொண்டு, வசனத்தை விளங்கிக்கொள்ளாமல், சத்தியம் தெரியாமல் நம் இஷ்டத்திற்கு வார்த்தைகளை அள்ளி வீசினால் நாம் நினைத்ததற்கு மாறான காரியம் நடந்து விடுகிறது. ஏனென்றால் வார்த்தை உருவாக்குகிறது... அதனால் பல நேரங்களில் நம் ஜெபம் ஆபத்தில் முடிந்து விடுகிறது. அதனால்தான் வேதத்தை வாசித்து ஜெபிக்கும்படி பரிசுத்தாவியானவர் அறிவுறுத்துகிறார்.*

*"வேதத்தைக் கேளாதபடி தன் செவியை விலக்குகிறவனுடைய ஜெபமும் அருவருப்பானது. நீதி. 28:9"*

*ஜெபத்தைப் பற்றி இன்னும் சில காரியங்களைப் பார்ப்போம். ஜெபம் என்பது தேவனுடனான அன்பின் பரிமாற்றம்... உறவாடுதல்... இணைதல்... ஒன்றாகிவிடுதல்...* **conference ...** *இப்படியாக இன்னும் அழுத்தமாக சொல்லிக் கொண்டுப் போகலாம். தேவன் தன்னுடைய விருப்பத்தையெல்லாம் (அவர் சித்தத்தை) இந்த உலகத்தில் செய்ய விரும்புகிறார். அதற்கு நம்மைத்தான் பிரயோஜனப்படுத்த விரும்புகிறார், அதற்காகத்தான் நமக்கு ஆளுகையையும், அதிகாரத்தையும் தந்திருக்கிறார்.*

*"... தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார். ஆதி. 1:28"*

*தேவன் மனிதனுடன் தொடர்பு கொள்வதற்கு வசதியாக, அவனைத் தன்னுடைய சாயலாகவும், ரூபத்தின்படியும் உருவாக்குகிறார். தன்னுடைய சித்தம் இந்த உலகத்தில் செய்யப்பட, மனிதன் என்னவெல்லாம் செய்ய வேண்டும் என்பதை அவனுக்குச் சொல்லிக் கொடுக்கத் திட்டமிட்டார். அதற்காகவே ஏதேன் தோட்டத்தை நிருணயம் பண்ணி, அவனை அங்கே வைத்தார். பல வகையான பழ மரங்களையும், ஆறுகளையும் உண்டாக்கினார். தங்கத்தை விளைய வைக்கிறார், விசுவாசம் கற்றுக் கொடுத்தார், சகல ஜீவ*

ஜந்துக்களையும் பராமரிக்கும் பொறுப்பையும் கொடுக்கிறார். கடைசியாக, துணையாக ஒரு பெண்ணையும் உருவாக்கி கொடுக்கிறார். தேவன் ஏதேன் தோட்டத்தில் கொடுத்த இந்தக் காரியங்களை மையமாக வைத்து தன்னுடைய எல்லைகளை வகுத்துக் கொண்டு அதற்குள்ளாக மனிதன் வாழ்க்கையை நடத்தியிருப்பானானால் ...

மனிதன் பழத்தை மட்டும் சாப்பிட்டிருப்பானானால் வியாதியே வந்திருக்காது. (இன்றும் ஆஸ்பத்திரியில் வியாதியில் படுத்துக் கிடப்பவனுக்கு பழங்கள் வாங்கிக் கொண்டு போகும் பழக்கம் இந்த காரணத்தினால்தான். பழவர்க்கங்கள் வியாதிகளின் எதிரி, காரணம் அது தேவனே சிபாரிசு செய்த உணவு!). குடி தண்ணீர் பராமரிப்பு மிக முக்கியமானது. சுத்தமான குடிநீர் கிடைக்காததினால் வரும் வியாதிகளும், சாவு எண்ணிக்கைகளும் இக்கால உலகத்தில் அதிகம்.

தங்கத்தைத் தன் பிள்ளைகளுக்காக விளைய வைக்கிறார். ஆதி. 2—ம் அதிகாரத்திலேயே இதைப் பார்க்கிறோம். சாத்தான் ஏமாற்றி பறித்துக் கொண்டான், அது போகட்டும். இயேசு சிலுவையில் மீட்டுக் கொடுத்த பிறகாவது அதைப் பாதுகாத்துக் கொண்டானா என்றால் அதுவும் இல்லை. “கழற்றி” வேறு கொடுக்கிறார்கள். இப்படியாக உலகத்திற்குள் தரித்திரம் நுழைந்தது. தங்கத்தைத் தேவ பிள்ளைகள் தங்கள் ஆளுகைக்குள் வைத்திருந்தார்களானால் உலகத்திற்கு தரித்திரம் வந்திருக்காது.

சகல ஜீவ ஜந்துக்களையும், மரம் செடி கொடிகளையும் தேவன் உருவாக்கிய நோக்கமே வேறு. அவற்றைப் பராமரிக்கச் சொல்கிறார். ஆரம்பத்தில் தேவன் அவற்றை உணவுக்காக உபயோகிக்கச் சொல்லவில்லை.

ஜீவ ஜந்துக்களின் மூலமாக, மரம் செடி கொடிகள் மூலமாக உலகத்திற்குப் பல நன்மைகளைச் செய்ய நினைத்தார். காற்று மண்டலத்தின் கார்பன் — டை — ஆக்சைடை சரியான அளவில் வைக்கவே அவற்றை உருவாக்கினார். மேலும் பல நன்மைகளுக்காகவும் ... ஒட்டகம் வாகனமாக பயன்படுகிறது, சேவல் கோழி விடியலை அறிவிக்கிறது, மீன் நீரை சுத்தப்படுத்துகிறது, வண்ணத்துப்பூச்சி மகரந்த சேர்க்கைக்குப் பயன்படுகிறது, பல்லி கொசுவைக் கொல்லுகிறது. முக்கியமான விஷயம் இவையெல்லாம் தேவனைத் துதிப்பதால் கிருபை பெருகுகிறது. (சங். 148)

ஆனால் மனிதன் அவைகளை வேட்டையாடி, துன்புறுத்தி, மிருகவதை தடுப்புச் சட்டம் கொண்டுவரும் அளவுக்கு போய்விட்டான். மனிதன் தன் விருப்பப்படி தன் மனம் போன போக்கில் வாழ ஆரம்பித்த பிறகுதான் மாமிச உணவு வந்தது. ஆதாமின் மீறுதலினால் பாவம் பெருகி, உலகம் நோவா காலத்தில் அழிந்தபோது, பூமியை சுற்றி பாதுகாப்புக்காக போடப்பட்டிருந்த **water canopy** உடைந்ததால் சூரியனின் தீங்கிழைக்கும் கதிர்கள் உலகத்தை நேரடியாகத் தாக்க ஆரம்பித்தன. அதனால் மனிதனுக்கு ஏற்படும் தீங்கை ஓரளவுக்கு கட்டுப்படுத்துவதற்காகத்தான் மாமிச உணவைத் தேவன் அனுமதித்தாரே தவிர ஆதியில் அவருடைய சித்தம், திட்டம் அதுவாக

இருக்கவில்லை. கடைசியாக திருமண பந்தத்தையும் கொடுக்கிறார். ஆனால் மனிதனோ அசுத்தம், காமவிகாரம், துர்இச்சை, விபச்சாரம், வேசித்தனம் ஆகிய பாவங்களால் தேவன் உருவாக்கிய "திருமணம்" என்ற ஒரு நல்ல பரிசுத்தத் திட்டத்தைக் கெடுத்தான். இதனால் இக்காலத்தில் உலகெங்கும் பாலியல் பலாத்காரங்கள், ஓரினச் சேர்க்கை — திருமணங்கள் — சர்ச்சிலேயே இதை நடத்தி வைக்கும் அலங்கோலங்கள், விபச்சாரம் — பல நாடுகளில் இது சட்டப்பூர்வமாக்கப்பட்டிருக்கிறது — சில நாடுகளில் அந்நிய செலாவணியே இந்தப் பணத்தில்தான்! இதனால் உயிர்க்கொல்லி நோய்கள் — எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவனின் நிழலைத் தொட்டால் கூட நோய் தொற்றிக் கொள்ளுமோ என்ற பயம்! அப்படியல்ல...

தேவனுடைய நோக்கத்தைப் புரிந்து கொண்டு, அதை மட்டும் மனிதன் இந்த உலகத்தில் நிறைவேற்றியிருந்தால் இந்த அந்தோ பரிதாபம், அதோ கதி, உலகத்திற்கு வந்திருக்குமா?

மாசு கட்டுப்பாடு நிறுவனங்கள் தொடர்ந்து போராட வேண்டிய அவசியம் இருந்திருக்காதே! **Global Warming** பற்றிய பரபரப்பான பேச்சு உலகத்தைச் சுற்றி சுற்றி வந்து அடி வயிற்றில் புளியைக் கரைக்க வைத்துக் கொண்டிருக்காது.

தேவன் நமக்கு ஆளுகையைத் தந்தார், அவருடைய திட்டங்களை இந்த உலகத்தில் ஸ்தாபிக்க. ஆனால் நம்மைத் தனியே விட்டு வேடிக்கை பார்க்கவில்லை அவர், நம்மோடு இணைந்து செயலாற்ற விரும்புகிறார், அதற்கு பிரயோஜனப்படும் ஒரு வழிமுறைதான் ஜெபம். ஜெபம் நம்மை அவருடைய சித்தத்தை செய்யும் ஆற்றலுள்ளவர்களாக மாற்றுகிறது!

ஜெபித்துத்தான் ஆக வேண்டுமா? ஆம். ஜெபத்தின் பதில்களால்தான் இந்த பூமி நிறைந்து கொண்டு வருகிறது. உலகத்தோற்ற முதலே அறியாமையினால் பிரச்சனையை ஜெபித்தார்கள் (சொன்னார்கள்) அந்த பிரச்சனையில் உள்ளவைகளால் உலகம் நிறைந்தது, நரகமாகிப்போனது. ஜெபத்தில் பிரச்சனையை அல்ல, வசனத்தை — வார்த்தைகளைச் சொல்லுவோம், அந்த வார்த்தையில் உள்ளவைகளால் உலகம் நிரம்பும், பரலோகமாக மாறும்!

ஜெபம் இருவழித் தொடர்புடையது. தேவன் பேச நாம் கேட்க வேண்டும், பதில் சொல்ல வேண்டும். நாம் பேச அவர் கேட்டுப் பதில் சொல்லுவார். நாம் தேவனோடு சேர்ந்து செயலாற்றும் கூட்டுப் பங்காளர்கள். **(working partners!)** அறிவில்லாததினால், தேவன் நம் அப்பா என்று தெரியாதினால் பயத்தில் நாவடைத்து செயல்படா பங்குதாரர் **(silent partners)** ஆகிப்போய்விட்டோம்.

ஜெபத்தில் நாம் அவருடன் சேர்ந்து செயலாற்றுவது எப்படி? வசனத்தின் மூலமாக அவருடைய பரிபூரண சித்தத்தை, ஞானத்தை, அன்பைத் தெரிந்துக் கொண்டு அதற்கேற்றபடி ஜெபிக்க வேண்டும். இப்படிப்பட்ட ஜெபம் அவரைச் செயல்பட வைக்கும், அவருடன் சேர்ந்து நம்மையும் செயல்பட வைக்கும். தேவனுக்கு நிறைய வேலைகள் இருக்கிறது. அதைச் செய்து முடிக்க தன்னைப்

*போலவே எல்லா ஆற்றலும் உள்ள மகன்கள் தேவை. அதற்காகவே நம்மை உண்டாக்கினார் (பெற்றெடுத்தார்). ஆனால் ஏதேன் தோட்டத்தில் சாத்தான் வெற்றியைத் தன் கையில் எடுத்த போது தேவ நோக்கம் தலைகீழானது; நோவா வெள்ளத் தாக்குதல் வேகத்தால் பூமியின் நிலை 23 $^{1}/_{2}$° (23.5°) சாய்ந்தது போல!*

*அன்று முதல் தேவனுடனான உறவு நிலை பாதிக்கப்பட்டதால், அறியாமையின் இருள் சூழ்ந்தது. ஜெபிக்கத் தெரியாமல் மனிதன் பிரச்சனையை ஜெபிக்க ஆரம்பித்தான். சாத்தான் அந்த ஜெபத்திற்கு "பிரச்சனையோ பிரச்சனை" யைப் பதிலாகக் கொடுக்க ஆரம்பித்தான். சாத்தானின் திட்டத்திற்கு மனிதன் பிரமாதமாக ஒத்துழைப்பு* **(co-operate)** *பண்ணினான். சாத்தானும் வேக வேகமாக தன் இராஜ்ஜியத்தைக் கட்டினான். இயேசு கிறிஸ்து சிலுவையில் அந்த கோட்டையை இடித்துத் தள்ளினார். இந்த சத்தியம் தெரியாதவர்கள் சாத்தானின் கோட்டை இன்னும் இருப்பதாக நினைத்து வருகின்றனர். அவர்களின் அறியாமையைப் பயன்படுத்தி சாத்தான், அவர்களின் கற்பனைக் கோட்டைக்கு உயிர்கொடுத்து ஜெயித்து வருகிறான்.*

## சத்தியத்தை விளக்கிச் சொல்ல ஆட்கள் தேவை:

*குறிஞ்சி மலர் போல ஒரு சிலர் பூத்தார்கள், பூத்திருக்கிறார்கள். அவர்களின் பாதுகாவலுக்காக ஜெபிப்போம். அவர்களுக்காக எப்படி ஜெபிப்பது? வசனத்தை உச்சரித்துதான். அந்த ஊழியக்காரரின் பெயரைச் சொல்லி, "அவருக்கு ஒரு கேடும் வராது, கொடுமைக்குத் தூரமாவார், சாகாமல் பிழைத்திருந்து உம் செய்கைகளை அறிவிப்பார்கள், பாதாளத்தின் வாசல்கள் அவரை மேற்கொள்ளாது" இப்படி இன்னும் அநேக வசனங்களை சொல்லிச் சொல்லி ஜெபியுங்கள். இந்த சத்தியத்தை அறிந்துகொண்ட ஒவ்வொருவரும், இதைப் போதிப்பவராக மாறுங்கள். இதற்கென்று விசேஷித்த அபிஷேகம், அழைப்பு, வரம், அர்ப்பணிப்பு, பிரதிஷ்டை எதுவும் தேவையில்லை. தேவனுடைய பிள்ளை என்ற ஒரே ஒரு தகுதி மட்டும் போதும். "ஒருவன் போதித்தால்" என்றுதான் வசனம் சொல்லுகிறது.*

*"ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்; ... 1 பேதுரு 4:11"*

*யார் வேண்டுமானாலும் சத்தியத்தை — அதிலுள்ள ஞானத்தை — அறிவைப் போதிக்கலாம்.*

*ஆண்டவருக்கு மகன், மகள் என்றெல்லாம் வித்தியாசம் கிடையாது, இரண்டும் ஒன்றுதான். நான் மகளாக இருந்தாலும் அவருக்கு மகன்! சகோ. டேவிட் மகனாக இருந்தாலும் அவருக்கு மகள்! ஆதியில் தேவன் மனிதனை ஆணும் பெண்ணுமாக — பிரித்து உருவாக்கியதற்கு காரணம், தன்னுடைய பிள்ளைகளைப் பூமியில் பெருக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காகத்தான். அந்த நோக்கத்தை மாற்றி, மக்களுக்குத் தவறாக புரிய வைத்தது சாத்தான்.*

*ஆபிரகாம், தாவீது ஆகியோர் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகளை*

கொண்டிருந்தது, நூற்றுக்கணக்கான மறுமனையாட்டிகளை கொண்டிருந்ததெல்லாம் தேவனுடைய சித்தமல்ல. அவர்கள் தேவனுக்கு பிரியமானவர்கள் என்பதால் அவர்கள் செய்ததெல்லாம் சரி என்றாகிவிடாது. அக்காலத்தில் சாத்தான் தோற்கடிக்கப்படவில்லை, இயேசு வெளிப்படவில்லை, பாவத்தை ஜெயிக்க நியாயப்பிரமாணத்தால் முடியவில்லை... அதனால் இதெல்லாம் நடந்தது. தேவனும் மனிதனுடைய துர்ப்பாக்கிய நிலைமையை மனதில் எண்ணி நீதியுள்ளவராய் எல்லாவற்றையும் காணாதவர் போலிருந்தார்.

"அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார். அப். 17:30"

கவனியுங்கள்.... **(Listen!)** தேவன் ஏதேனில் ஆதாமுக்காக ஒரே ஒரு ஏவாளைத்தான் உருவாக்கினார். சீக்கிரமாகப் பலுகி பெருகி பூமியை நிரப்ப வேண்டும் என்பதற்காக 10 ஏவாள்களையோ 100 ஏவாள்களையோ உருவாக்கவில்லை! ஆனால் தேவனுடைய திட்டத்திற்கு மாறாக மனிதர்கள் உருவாக்கிக் கொண்டார்கள். தேவனுக்கு விரோதமாக ஒத்துழையாமை இயக்கம் நடக்க ஆரம்பித்தது. பழைய ஏற்பாட்டின் காலத்திலும் தேவ ஜனங்கள் எழும்பி தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்ற முயற்சித்தார்கள். ஆனால் சரிவர இயங்க முடியாதபடி நியாயப்பிரமாணம் அவர்களுக்கு முட்டுக்கட்டை போட்டது. அவர்களால் பூரணத்துவத்தை அடைய முடியாமல் போனது.

"அவர்கள் நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையானதொன்றைத் தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார். எபி. 11:40"

அந்த விசேஷித்த நன்மையானதொன்றுதான் இயேசு கிறிஸ்துவினால் பூரணமாக்கப்பட்ட நியாயப்பிரமாணத்தின் மறுபதிப்பு! அதுதான் புதியபிரமாணமான சுயாதீனப்பிரமாணம்! யாராலும் முடியாதிருந்த நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றி முடித்த இயேசு கிறிஸ்துவுடன் நாம் இணைக்கப்பட்டிருக்கிறபடியால், அவருடைய தகுதியின் அடிப்படையில் நமக்கும் அது சாத்தியமாகிறது. இன்னொரு முக்கிய இரகசியம் என்னவென்றால், நாம் பரலோகம் போவதற்கான தகுதி உண்மையிலேயே நம்மில் காணப்பட்டால் கூட, நாம் பரலோகம் போவதென்னவோ இயேசுவினுடைய தகுதியின் அடிப்படையில்தான்! ஆக நம்முடைய பங்கு **(part)** எதுவுமேயில்லை.

அப்படியானால் நாம் எதுவுமே செய்ய வேண்டாமா? யார் சொன்னது, சும்மா இருக்க வேண்டியதுதான் அந்த வேலை!

"... எருசலேம் ஜனங்களே, நீங்கள் தரித்து நின்று கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்; பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள்; ... 2 நாளா. 20:17" "நீங்கள் அமர்ந்திருந்து, நானே தேவனென்று அறிந்துகொள்ளுங்கள்; ... சங். 46:10"

கிரிக்கெட் மாட்ச் **(Cricket Match)** நடந்து கொண்டிருக்கிறது. டெண்டுல்கர் **(Tendulker)** சிக்ஸர் **(sixer)** அடிக்க, நீங்கள் பார்த்துக் கொண்டிருக்க மட்டுமே செய்ய வேண்டும், அவ்வளவுதான். அவருக்கு உதவி செய்கிறேன் என்று பாய்ந்து உள்ளே குதித்தால் ... போலீஸ் வரும்! நீங்கள் உள்ளே பாய்வதால் எந்த பிரயோஜனமும் இல்லை... டென்டுல்கர் சிக்சர் அடித்ததால் மட்டுமே இந்தியாவுக்கு வெற்றி கிடைத்தது... நீங்கள் பார்த்துக் கொண்டு மாத்திரம் இருந்தீர்கள். அவ்வளவுதான்!

## நேரம் வரட்டும்!:

"இப்போது அவனுக்கு நேரம் சரியில்லை, நேரம் வரும்போது எல்லாம் சரியாகிவிடும்" என்று தேவனை அறியாத புறவினத்தாரின் இந்தப் பேச்சு வழக்குச் சொற்களை அடிக்கடி கேட்டிருப்போம். அவர்கள் சொல்லும் அந்த நேரம் எது என்பது இப்போது இங்கே முக்கியமல்ல, நாம் ஆசீர்வதிக்கப்பட நேரம் எப்போது வரப்போகிறது என்பதே இப்போது பேச்சு.

அது நாம் சத்தியத்தை அறிந்து கொண்ட அந்த வினாடிப்பொழுதிலிருந்து தொடங்குகிறது!

சத்தியம் என்றால் எது என்பதைத்தான் தொடர்ச்சியாகப் பார்த்து வருகிறோம். ஆசீர்வாதங்கள் நிரம்பிய பரலோகத்தின் தேவன் அங்கேயிருந்த ஆசீர்வாதங்களைக் கையாண்டு உலகத்தையும் அதன் நிறைவையும் உண்டாக்குகிறார். மனிதனை உருவாக்கி, எல்லாவற்றையும் அவனுக்குக் கீழ்ப்படுத்தி அவனை ஆசீர்வதிக்கிறார். அதனால் நாம் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்று அறிகிறோம். ஆசீர்வாதம் என்பது ஒரு அபிஷேகம், அதற்குள் இருந்து ஐசுவரியங்கள் புறப்பட்டு வருகின்றன. ஐசுவரியம் என்றால் பணம் மட்டுமல்ல, சுகம், பலன், சமாதானம், சந்தோஷம், விடுதலை, இரக்கம் என்றெல்லாம் பார்த்தோம்.

அந்த நேரம் தொடங்கும் வரை நம் எல்லைகளுக்கு வெளியே ஐசுவரியங்கள் காத்துக் கிடந்தன! அந்த நேரம் தொடங்கிய வினாடி முதற்கொண்டு அவை உள்ளே வர எத்தனிக்கின்றன. ஆனால் வாசலை நாம் தான் திறந்து விட வேண்டும்.

உனக்கு கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும், இப்பொழுதோ அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக்கிறது. உன்னை சந்திக்குங்காலத்தை நீ அறியாமற்போனபடியால், உன் சத்துருக்கள் உன்னைச் சூழ மதில்போட்டு, உன்னை வளைந்துகொண்டு, எப்பக்கத்திலும் உன்னை நெருக்கி, உன்னையும் உன்னிலுள்ள உன் பிள்ளைகளையும் தரையாக்கிப்போட்டு,

உன்னிடத்தில் ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்குச் செய்யும் நாட்கள் உனக்கு வரும் என்றார். (லூக். 19:42,43,44)

இயேசுவைப் பற்றியும், அவரின் சிலுவை பாடுகளின் இரகசியங்களைப்

பற்றியும் அறியாதிருக்கிற ஜனங்களைப் பற்றிய தீர்க்கதரிசனம் இது. "இந்த நாளிலாகிலும்" அறிந்து கொண்டால் நலமாயிருக்கும். பழைய இரசத்தை குடித்துவிட்டு, ஒவ்வாமல் வாந்தியெடுப்பதை விட முதலிலேயே புதிய இரசத்தை தயாரித்து பருகுங்கள். சாத்தானிடம் மாட்டிக்கொண்டு ஒரு வழியாகி, கடைசியில் இயேசுவிடம் வந்து விழுவதைவிட, முதலிலேயே அவரிடம் வந்து விடுவது பாதுகாப்பல்லவா?

## ஆபிரகாமின் ஆசீர்வாதங்கள் என்னென்ன ?

"நான் உன்னை (ஆபிரகாமை) பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்.

உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன்.

பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார்" (ஆதி. 12:2,3)

ஆபிரகாமின் ஆசீர்வாதங்கள் என்னவெல்லாம் என்பதைக் கண்டுபிடித்து, அதை **(demand)** பண்ண வேண்டும், உரிமை பாராட்டிக் கேட்க வேண்டும் **(authoritative request).** நமக்குச் சொந்தமனதைத்தானே கேட்கிறோம்? எங்கப்பனுக்கு (ஆபிரகாமுக்கு) தந்ததை எனக்கும் தாங்க என்றுதானே கேட்கிறோம், அவர் தருவதாக சொல்லியிருப்பதால்தானே கேட்கிறோம்?

ஆபிராம் மிருகஜீவன்களும் வெள்ளியும் பொன்னுமான ஆஸ்திகளை உடைய சீமானாயிருந்தான். ஆதி. 13:2. இவையெல்லாம் அவனுக்கு செழிப்புள்ள நாட்களில் வரவில்லை, தேசத்தில் பஞ்சம் ஏற்பட்டபோது கிடைக்கிறது. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆசீர்வாதமானது பஞ்ச காலத்தில் ஆஸ்தியை கொடுக்கிறது.

வேத தியானம் நிறைய பண்ணியாச்சு, விசுவாசப் போதனைகள் நிறையக் கேட்டாச்சு, என்றாலும் இன்னும் ஐசுவரியம் வரலையே? ஏன்? கர்த்தருடைய ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும்... ஐசுவரியத்தைத் தருகிற ஆசீர்வாதம் என்ற அபிஷேகம் இன்னும் உங்களிடம்தானே இருக்கிறது, பிறகு ஏன் இந்த பயம்?

ஆபிரகாமிடம் ஆசீர்வாதம் இருந்தது, அதனால் அவன் **worst** (தரம் குறைந்த) ஆனதை எடுத்து **best** ஆக்கினான்! லோத்தோ ... **best** ஆனதை எடுத்தான், கடைசியில் **worst** (மிகவும் தரம் கெட்டதாய்) ஆகிப்போனான்! உலக கோடீஸ்வரர்களின் பட்டியலில் இடம் பெற்றிருக்கும் முதல் 1000 பேர்களைவிட நாம்தாம் ஐசுவரியவான்கள்! ஏனென்றால் அந்த ஐசுவரியத்தை தரும் ஆசீர்வாதம் என்ற அபிஷேகம் **(anointing)** நம்மிடம்தான் இருக்கிறது. பணத்தை விட அதைக் கொட்டும் அலாவுதீனின் அற்புத விளக்குதான் பெரியது! பொன் முட்டைகளைப் பார்க்கிலும் அந்த முட்டைகளை இடும் வாத்து தான் முக்கியமானது! நாம் மிக முக்கியமானவர்கள், புரிந்ததா?

*“துக்கப்படுகிறவர்கள் எனப்பட்டாலும் எப்பொழுதும் சந்தோஷப்படுகிறவர்களாகவும், தரித்திரர் எனப்பட்டாலும் அநேகரை ஐசுவரியவான்களாக்குகிறவர்களாகவும், ஒன்றுமில்லாதவர்களெனப்பட்டாலும், சகலத்தையுமுடையவர்களாகவும் எங்களை விளங்கப்பண்ணுகிறோம். 2 கொரி. 6:10”*

*இப்போது பஞ்சப்பரதேசியாக இருந்தாலும் யோசிக்க வேண்டாம். இந்த வெளிச்சம் உங்களுக்கு கிடைத்திருக்கிறதே, அதுவே போதும். ஒரு ஆரோக்கியமான, ஆசீர்வாத உபதேசத்தை “செழிப்பின் உபதேசம்” தேவனுக்கு விரோதமானது, வேத வசனங்களுக்கு முரண்பாடானது, பரலோகம் போக தடை உண்டாக்கக்கூடியது, என்றெல்லாம் ரீல் விட்டுக்கொண்டுத் திரியும் சாத்தானிடமிருந்து காமிராவைப்* **(Camera)** *பிடுங்கி, ஃபிலிமை* (**film)** *உருவி பெட்டிக்குள் வைப்போம்.*

*எனக்கு வெளிப்படுத்தப்பட்டவைகளை நான் வெளிச்சம் போட்டு காட்டிக் கொண்டே இருக்கிறேன். ஐசுவரியமே பரலோகத்தில் இருந்துதான் வருகிறது, பிறகு அது எப்படி பரலோகம் போவதைத் தடை செய்யும்? சொல்லப்போனால் தரித்திரம்தான் பரலோகத்தில் இருந்து வரவில்லை, அதனால் ஒருவேளை அது வேண்டுமானால் பரலோக பயணத்தைத் தடை பண்ணலாம். நம் தேவனே ஐசுவரிய சம்பன்னர்தான், அது அவருடைய நாமங்களில் ஒன்று.*

*ஆசீர்வாதமான தேவன், பரலோகத்தின் ஆசீர்வாதங்களை உபயோகித்து, பூமியையும், அதன் நிறைவையும் உண்டு பண்ணி அதை ஆசீர்வாதிக்கிறார். மட்டுமா மனிதனையும், சகல ஜீவ ஜந்துக்களையும், பூமியில் உள்ள அனைத்தையுமே அவர் ஆசீர்வதிக்கத்தான் செய்கிறாரே தவிர தரித்திரப்படுத்தவில்லை. ஆசீர்வாதமாக இருப்பாய், ஆசீர்வதிப்பதே எனக்குப் பிரியம், ஆசீர்வதிப்பேன், ஆசீர்வதிக்கப்படுவார்கள் ... என்றெல்லாம்தான் அடுக்கடுக்காக வார்த்தைகள் தேவனுடைய வாயிலிருந்து. அவரால் தரித்திரத்தை உச்சரிக்க முடியாது, ஏனென்றால் பரலோகத்தில் அது கிடையாது என்பதை மீண்டும், மீண்டும் சலிப்பு தட்டும் அளவுக்கு எழுதி நினைவூட்டுகிறோம்!*

*நம் ஆவிக்குரிய உள்ளான மனிதனின் ஜீவிய ஓட்டத்திற்கு ஒரு இலக்கு வேண்டும். அந்த இலக்கு ஐசுவரியங்களை சுதந்தரிப்பதாக இருக்கட்டும். நம்முடைய குறி எப்படியும் நாம் ஆசீர்வதிக்கப்பட வேண்டும் என்பதிலேயே இருக்க வேண்டும். இந்த நினைவே நம் சிந்தனைகளைப் பரிசுத்தமாக வைத்திருக்கும். வேறு எந்த விதமான பாவச் சிந்தனையும் நுழையவே வாய்ப்பிருக்காது.*

*ஒலிம்பிக் ... ஓட்டப் பந்தயத்தில் ஓடுகிறவர்களின் கவனமெல்லாமல், கண்களெல்லாம் முடிவு கோட்டையே நோக்கிக் கொண்டிருக்கும். அதைவிட்டு ஒரு நொடிப்பொழுது கூட அங்கேயும், இங்கேயும் நகராது. ஒரு அழகான பெண் ஓடுபாதையில் குறுக்கிட்டால் கூட அவனுக்கு அதனால் கவனம்*

சிதறுவதில்லை, ஒரு மரவட்டையைப் பார்ப்பதைப் போலப் பார்த்துவிட்டு ஓடிக்கொண்டேயிருப்பான்! இச்சையடக்கம்!! ஒரு உலக மனிதன், அழிந்து போகிற ஒரு கிரீடத்திற்காக இந்த அளவுக்குத் தன்னை ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பானானால் ... ?

கண்ணுக்குத் தெரியாக ஆவிக்குரிய உலகத்தில் வாழும் நம் உள்ளான மனிதனுடைய காரியங்கள் இன்னும் அதிகமல்லவா? தேவனுடைய பிள்ளைகள் செழிப்பாக, சகல ஐசுவரியங்களும் பெற்று ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்பதே தேவனுடைய சித்தம் என்ற சத்தியத்தை அறிந்து கொண்டு, அதையே இலக்காக வைத்து ஓடுவது நம்மை பாவம் செய்யாதபடி பாதுகாக்கிறது, பரிசுத்தமாக வாழ வைக்கிறது, பாவம் செய்ய நேரமும் இருக்காது, கவனமெல்லாம் இலக்கை நோக்கியே இருக்கும்.

## நாம் ரொம்ப முக்கியமானவர்கள்:

சத்தியத்தை அறிந்த தேவப்பிள்ளைகள் மிக முக்கியமானவர்கள். நாம்தான் இந்த உலகத்திற்கு உப்பு, புளி, பருப்பு, வெல்லம் எல்லாம்! நாம் இல்லாமல் சமையல் இல்லை, **Kitchen** இல்லை, சாம்பார் இல்லை, சாப்பாடு இல்லை! நாம்தான் வெளிச்சம், பகல் பொழுதே நாம்தான், நாம் இல்லாவிட்டால் சேவலே கூவாது! பனியாக இருக்கிறோம், நாமின்றி விளைச்சல் இல்லை, அறுவடை இல்லை, அம்பாரம் இல்லை, சந்தோஷப் பாட்டு இல்லை!

நம் மூலமாகத்தான் தேவன் ஆளுகை செய்கிறார், அவர் நேரிடையாக செய்வதில்லை. நாம் அவருடைய கரத்தின் கிரியைகளாக இருக்கிறோம், நம்மை இயக்கி, நம்மில் இயங்குகிறார்! நம் கரத்தை இயக்கி தன்னுடைய சித்தத்த்தை இந்த உலகத்தில் செய்ய வைக்கிறார், அவருடைய செய்கைகள் நாம்!

நம் மூலமாகத்தான் தன்னை இந்த உலகத்திற்கு வெளிப்படுத்துகிறார், சுவிசேஷம் அறிவிக்கும்போது. நம்மை ஒரு வாசலாக, வழியாக பயன்படுத்துகிறார்! நம்மூலமாக பூமியில் இறங்கி உலாவுகிறார் (நம்மில் இருக்கும் பரிசுத்தாவியானவரின் அபிஷேகத்தின் மூலமாக). பூமியை நம் பொறுப்பில் ஒப்படைத்து அதை கையாளச் சொன்னார் **(handle).**

அதை எப்படி கையாண்டுக் கொண்டிருக்கிறோம் என்பது வேறு விஷயம், ஆனால் நம்முடைய பொறுப்பு பெரியது!

பூமியைச் சீரமைக்கும் பொறுப்பைத் தந்தார். பூமியை நிரப்பி, சகல மக்களுக்கும் தேவையான ஜீவனாதாரத்தை **(livilihood)** கொடுக்கும் பொறுப்பையும் தந்தார். அவர்களை இயேசுவுக்குள் வசப்படுத்தி, சத்திய மேய்ச்சலை அளித்து, ஐசுவரியவான்களாக மாற்றும் வேலையையும் கொடுத்திருக்கிறார்! எல்லோரையும் பரலோகத்திற்குள் இழுத்துக்கொண்டு

*வரவேண்டுமென்பதற்காக பரலோகத்தின் திறவுகோலையும் நம் கையில் கொடுத்திருக்கிறார்.*

*அதுமட்டுமா? நம்மைத் தனியே விடாமல், எல்லா வேளையிலும் நம்மோடிருந்து, நமக்கு உதவி செய்து, ஆலோசனை கொடுத்து நடத்துகிறார். ஆயிரம் பதினாயிரம்* **(1,000 X10,000 = 10,00,00,000)** *தேவதூதர்களையும் ஆயத்தம் செய்திருக்கிறார்.*

## நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால் ...

*நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால், பக்தியில்லாதவனும் பாவியும் எங்கே நிற்பான்? 1 பேது.ரு 4:18*

*நீதிமான் என்றாலே இரட்சிக்கப்பட்டவன் என்றுதானே அர்த்தம்? பிறகு ஏன் அவன் இரட்சிக்கப்பட வேண்டும்? அதாவது இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட நீதிமானே சத்தியத்தை அறிந்து கொள்ளாமலிருக்கும்போது ... அதாவது இன்னும் பாவத்திலிருந்தும், சாபத்திலிருந்தும், தரித்திரத்திலிருந்தும், வியாதியிலிருந்தும் விடுதலை பெறாமலிருக்கும்போது, பாவியின் நிலைமை என்ன? மிக மோசமானதல்லவா? இதைத்தான் சொல்லுகிறார்.*

*இயேசுவை ஏற்றுக் கொண்டதுடன் இரட்சிப்பு முடிந்துவிடுவதில்லை, அது தொடர்கிறது. இந்த இரட்சிப்பை பயன்படுத்தி, சத்தியத்தை அறிந்து கொள்ள வேண்டும். சிவப்பு கண்ணாடியை கழட்டிவிட்டு (பழைய ஏற்பாட்டின் பிரமாணங்கள்), பச்சைக் கண்ணாடியை அணிந்து கொள்ள வேண்டும் (புதிய பிரமாணம்) (விதைகள் பகுதி—6 ஐ பார்க்கவும்). இரட்சிக்கப்பட்டதோடு திருப்தியடைந்துவிடாமல் இயேசுவின் மூலமாக பிதாவாகிய நம் தேவன் சிலுவையில் ஆயத்தம்பண்ணிய சகல ஐசுவரியங்களையும் பெற்றுக் கொள்ள வேண்டும். சாபத்திலிருந்து இரட்சிக்கப்படுவதன் மூலம் (விடுதலையடைவதன் மூலம்) அந்தச் சாபத்தால் உலகத்தில் தோன்றிய தரித்திரம், வியாதிகள், சகல விதப் பாடுகள், சாத்தானின் துர்க்கிரியைகள் ... எல்லாவற்றிலிருந்தும் இரட்சிக்கப்படுகிறோம். இவ்விதமாக நம் இரட்சிப்பு நிறைவேறுகிறது.*

*... உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள். (பிலி. 2:12)*

*எப்படி பிரயாசப்பட வேண்டும்? நெற்றி வியர்வை நிலத்தில் விழ வேலைசெய்து சம்பாதித்து, கிடைக்கும் கூலியை வாயைக் கட்டி, வயிற்றைக் கட்டி சேமித்து வைக்க வேண்டாம்!*

*பிரகாசமுள்ள மனக்கண்களுக்காக ஜெபிக்க வேண்டும், கிடைக்கும். பிரகாசமடைந்த ஆவிக்குரிய கண்களால் வசனங்களைத் தியானித்து, அதை இருதயத்தில் வைத்து, விசுவாசித்து, அதை வாயில் வைத்து உச்சரிக்க வேண்டும். இதைத்தான் பிரயாசம் என்று வேதம் சொல்லுகிறது. உபவாசமிருந்து, இராவெல்லாம் விழித்திருந்து, அழுது, பொருத்தனைபண்ணி, பிரதிஷ்டை பண்ணி, ஜெபித்தவர்களெல்லாம் தங்கள் அறியாமையினால் எதையுமே பெற்றுக் கொள்ளாமல் போனார்கள். உதட்டுக்கு மேலிருக்கும் மூக்கைத் தொட*

*கையை தலையைச் சுற்றி கொண்டு வருகிறார்கள்! அட, அப்படியாவது தொட்டால் பரவாயில்லையே? மூக்கு எங்கே இருக்கிறது என்று தெரியாமல் தடவுகிறார்கள், கடைசியில் கண்டு பிடிக்காமலேயே போனார்கள்! அறியாமையின் இருள் இயேசுவின் நாமத்தில் விலகிச் செல்லுவதாக.*

**Human wantings are unlimited.** *மனிதனின் திருப்தியடையாத மனது! இதைப் பற்றியும் ஒரு* **wrong approach** *இருக்கிறது. இது ஒரு தவறான குணாதிசயம் அல்ல! இது நம் அப்பாவிடமிருந்து நமக்கு கடந்து வந்த குணாதிசயம்தான்! மனம் ஒரு குரங்கு என்பார்கள், எல்லைகளைத் தாண்டுகிறது, புதிய வாசல்களைத் தேடுகிறது. வானமே எல்லை என்கிறது! மனிதனின் இந்த குணாதிசயம்தான் அவனை முன்னேற்ற பாதையில் நடக்க வைக்கிறது. நாகரீகத்தில் முன்னேற்றமடையச் செய்தது, விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளுக்கு வித்திட்டது. சந்திரனுக்குப் போய்விட்டு வரும்படிச் செய்தது, விண்வெளிக்கலங்களில் சுற்ற வைக்கிறது, செவ்வாய் கிரகத்தில் தண்ணீர் இருக்கிறதா? என்று ஆய்வு செய்ய வைக்கிறது. வான வெளி ஆராய்ச்சிகளைச் செய்ய வைத்து, தேவனின் சர்வவல்லமையை நாம் அறிந்துக் கொள்ளும்படிச் செய்கிறது. இதையெல்லாம் தவறு என்று சொல்ல முடியாதே!*

*மனிதனுடைய எல்லா குணாதிசயங்களுமே தேவனிடமிருந்து வந்ததுதான். எப்படியென்றால்*

*"ஏனென்றால், "தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள்(இயேசுவுக்குள்) வாசமாயிருக்கிறது. கொலோ. 2:9" அந்த இயேசு நமக்குள் வாசமாயிருப்பதால் அந்த தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் நமக்குள்ளும் வாசமாயிருக்கிறது. ஆனால் மனிதன் தன்னிடமிருந்த தேவனுடைய குணாதிசயங்களை தேவனுடைய சித்தத்திற்கு மாறான காரியங்களில் திருப்பி விட்டதால் பாவம் வந்தது, பாவத்தில் பிரச்சனைகள் வந்தன. இதைப் பார்த்து மனிதனுடைய அந்த குணாதிசயமே தவறு என்ற முடிவு கட்டிவிட்டோம்.*

*உண்மையில் மனிதனின் குணாதிசயத்தில் தவறு எதுவுமில்லை, அதை அவன் தவறாக உபயோகித்ததினால் வந்த முடிவில்* **(result-ல்)** *தான் தவறு இருக்கிறது என்று பார்க்கிறோம். இதே போல தான் "மனிதனின் ஐசுவரியம்" என்ற குணாதிசயமும் ஆகிப்போனது. நம் தேவன் ஐசுவரிய சம்பன்னர், அதனால் அவருடைய சாயலில் படைக்கப்பட்டிருக்கும் நமக்குள்ளும் அந்த குணாதிசயம் இருக்கும் என்பதில் எந்த சந்தேகமுமில்லை. அப்பாவைப் போலத்தான் பிள்ளையும் இருப்பான்.*

*இதனால் தரித்திரம் மனிதனுக்கு* **set** *ஆவதில்லை. ஏனென்றால் அது அவனுடைய குணாதிசயமே இல்லை! ஏனென்றால் மனிதனுடைய சிருஷ்டிகரான தேவன் தன்னிடமிருந்த ஐசுவரியத்தின் சாயலாகத்தான் மனிதனைச் சிருஷ்டித்தார். அதனால் தன்னுடைய குணாதிசயமல்லாத வேறு எதுவோ ஒன்று அவனை ஆக்கிரமிப்புச் செய்வதை அவனால் சகித்துக் கொள்ள முடியாமல் போனது. அந்த வேறு எதுவோ ஒன்றுதான் தரித்திரம்.*

இதனால்தான் ஏழையாக இருப்பது கஷ்டமாக இருக்கிறது, பணக்காரனாக இருப்பது நன்றாக, சந்தோஷமாக இருக்கிறது! இப்போது புரிகிறதா?

இந்த உலகத்தில் உள்ள எந்த மனுஷனுக்கானாலும் சரி, அது தேவனை அறிந்தவனாக இருந்தாலும் சரி, தேவனை அறியாதவனாக இருந்தாலும் சரி. கையில் பணமில்லாமல் அல்லாடுவது தாங்கக்கூடாததாக இருக்கிறது. கை நிறைய பணமிருந்தால் உற்சாகம் பீறிடுகிறது.

"ஐசுவரியவானுடைய பொருள் அவனுக்கு அரணான பட்டணம்; ஏழைகளின் வறுமையோ அவர்களைக் கலங்கப்பண்ணும். நீதி. 10:15"

நடக்கும் பாதசாரிக்கு சைக்கிள்மேல் ஆசை, சைக்கிள் வாங்கியதும் பைக், பிறகு ஏதாவது ஒரு **Four wheeler!** பிறகு? பறக்க ஆசை! இது தேவனிடமிருந்துதான் வந்தது என்று எப்படிச் சொல்ல முடியும்? பிதாவுக்கு ஒரேயொரு செல்ல மகன் இருந்தார், அவர் இயேசு. அதோடு நிற்கவில்லை அவர் ஆசை, இயேசுவின் சாயலில் கோடானு கோடியாக, கணக்கிலடங்காத மகன்களை, மகள்களை பெற்றெடுக்க ஆசைப்பட்டார், அதற்காகவே நம்மை உருவாக்கினார் (பெற்றெடுத்தார்).

அவருடைய நல்லதொரு ஆசை, எதிர்பார்ப்பு சாத்தானால் கெடுக்கப்பட்டது என்பதற்காக மனுக்குலமே தவறானது என்று வாதாட முடியுமா? சர்வவல்லமையுள்ள தேவன் தவறான ஒன்றையா உண்டாக்குவார்? அது மட்டுமா? வானங்களை உண்டாக்கினார், கணக்கிலடங்கான கிரகங்களையும், நட்சத்திரங்களையும் உருவாக்கினார். ஏதோ சில நூறு, அல்லது ஆயிரம் கிரகங்களை உருவாக்கியிருந்தாலே போதும்.

என்றாலும் ஏன் இப்படிச் செய்தார்? அவருடைய சர்வ வல்லமையை விளங்கப்பண்ணுவதற்காக. அந்தப்படியே நாமும் நம்மிலிருக்கும் அவருடைய குணாதிசயமான சர்வவல்லமையை விளங்கப்பண்ண வேண்டுமானால் ... திருப்தியடையாதிருப்போம் — அதாவது அவருக்குச் சித்தமான காரியங்களில் மட்டும்!

ஆபிரகாமின் ஆசீர்வாதங்களைச் சுதந்தரிக்கும் விஷயத்தில் இந்த குணாதிசயத்தை எப்படி உபயோகிப்பது என்பதைப் பார்ப்போம். ஒரு 500 ரூபாய் தேவ இராஜ்ஜியத்திற்கென்று விதைக்கும்போது; அது ஆபிரகாமின் ஆசீர்வாதத்தின்படி 1000 மடங்காகப் பெருகுகிறது **(500 X 1000 = 500000).** 5 லட்சம் ரூபாய் வந்து விட்டது, போதும் என்று திருப்தியடைந்து அங்கேயே உட்கார்ந்துவிடக் கூடாது. அந்த 5 லட்சத்தின்மேல் நின்று கொண்டு, மீண்டும் ஆயிரம் மடங்கு ஆசீர்வாத்திற்காக **Claim** பண்ண வேண்டும். 5 லட்சத்தில் தசமபாகம் 5000 என்றால் **(5000 X 1000 = 5000000).** தொடர்ச்சியாக **(50000 X 1000 = 50000000), (500000 X 1000 = 500000000), (5000000 X 1000 = 5000000000), (50000000 X 1000 = 50000000000)** இப்போது 5000 கோடி வந்து விட்டது. தாவீது எருசலேம் தேவாலயம் கட்ட கொடுத்தத் தொகை மட்டும் சுமார் 5000 கோடி ரூபாய். முதலில் இதைத்தான் என்னுடைய இலக்காக வைத்திருந்தேன். ஆனால் தாவீது பழைய உடன்படிக்கையின் காலத்தில் வாழ்ந்தவர். நாம் இன்னும்

அதிகமல்லவா? அதிகம் மட்டுமல்ல, பரிபூரணத்தையும் அடைந்தவர்கள், இயேசுவின் மூலமாக. இயேசுவோடு நாம் இணைக்கப்பட்டிருப்பதால் அவருடைய பரிபூரணத்துவம் நமக்கும் வந்திருக்கிறது. அதனால் திருப்தியடையாமல் பெற்றுக்கொண்டேயிருப்போம், திருப்தி அடைந்துவிடாமல் விதைத்துக்கொண்டேயிருப்போம், கடைசிமூச்சு உள்ள வரை திருப்தியுறாமல் அறுவடையைப் பார்த்துக்கொண்டேயிருப்போம், அளவிட முடியாத ஆஸ்தி, ஐசுவரியங்கள் நம்மப்பாவிடம் இருக்க, போதும் என்று கையை நீட்டி அவரை தடுத்து **insult** பண்ணாமலிருப்போம்!

போதும் என்ற வார்த்தை நம் தேவனுடைய அகராதியில் கிடையாது. அதனால் நம் அகராதியிலிருந்தும் அந்த வார்த்தையை அழித்துவிடுவோம். தேவனுடைய ஆசையை நிறைவேற்ற இந்த கடைசி நாட்களில் முழுமூச்சாக தோள் கொடுப்போம். வெண்ணெய் திரண்டு வரும் போது தாழியை உடைத்த கதையாகிவிடாதபடிக்கு, முடிவு பரியந்தம் சோர்ந்து போகாமல் சத்தியத்தில் நிலைத்திருந்து, அதை அறிவிப்போம்.

“… மனுஷகுமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ … லூக் 18:8” என்ற தேவன் இயேசுவின் ஏக்கமான கேள்விக்கு நிச்சயமாக ஆண்டவரே நீர் விசுவாசத்தைக் காண்பீர் என்று பதில் கொடுப்போம். போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து என்ற பழமொழி நமக்குப் பொருந்தாது! போதும் என்ற வார்த்தை நம்மை அந்த இடத்திலேயே நிறுத்திவிடும் வல்லமை பொருந்தியது. நம் இலக்கு முடிவில்லாத இராஜ்ஜியம் அல்லவா? தொடர்ந்து ஓடும் விசுவாசப் பாதையல்லவா?

பலர் சொல்வதைக் கேட்டிருக்கிறேன். “என் குறி பரலோகம்தான், அங்கே போகவே வாஞ்சை, அதற்காகவே ஓடுகிறேன், இவ்வுலகம் எனக்குச் சொந்தமில்லை”யென்று! நம் அப்பாவாகிய தேவனுடைய நோக்கத்தை புரிந்து கொள்ளாமல், ஆனால் சரியாகப் புரிந்துக் கொண்டதாக நினைத்துக் கொண்டவர்களின் வார்த்தைகள்தான் இது.

பரலோகம் நம் தாய்வீடு, பரலோகம்தான் நம்மதாச்சுதே, நாம் அங்கேதானே இருக்கிறோம்? பூமியை சுதந்தரித்துக் கொள் என்று சொன்னாரே? உனக்குச் சொந்தமாகக் கொடுத்த பூமியை சாத்தானுக்கு தாரைவார்த்துவிட்டு வந்து நிற்கிறாயே! முதலில் போய் நான் சொன்னதைச் செய், என்கிறார் தேவன்!

இப்படிச் சொல்லுவது போதாதென்று, இந்த பூமியிலே எனக்கு எதுவுமில்லை, இது குப்பை, தூசி, என் கண்களெல்லாம் பரலோகத்தை நோக்கிதான், இந்த உலகம் போதும் போதும் என்றாச்சி, நான் அங்கே பறந்து வருகிறேன் — இப்படியெல்லாம் பாட்டு வேறு! இந்த பூமி உங்களுக்கு சொந்தமில்லையென்றால், பிறகு வேறு யாருக்கு? சாத்தானுக்கா? உங்களுக்கு எதுவுமே வேண்டாமென்றால், அப்போ எல்லாவற்றையும் சாத்தானே எடுத்துக் கொள்ளட்டும் என்று விட்டுவிடப் போறீங்களா? சாத்தானுக்கு ஆதரவளிக்கும் இப்படிப்பட்ட பாடல்களை மாற்றுவோம், திருத்திப் பாடுவோம்!

சிலுவையில் நம் தரித்திரம் அவர்மேல் விழுந்தது, அவருடைய ஐசுவரியம் நம் மேல் விழுந்தது!

## செழிப்பு பிரசங்கம் தேவைதானா ?

இரட்சிப்பின் செய்தியை ஒரு ஊழியக்காரர் பிரசங்கித்தபோதுதான் கேட்டு இரட்சிக்கப்பட்டோம், ஞாபகமிருக்கிறதா? நாம் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு இரட்சிக்கப்படுவதற்கு இயேசுவின் சுவிசேஷத்தை நமக்குச் சொல்ல ஒரு பிரசங்கம் தேவையாயிருக்கிறது. அதைப் போலவே நாம் ஆபிரகாமின் ஐசுவரியங்களைச் சுதந்தரிக்க வேண்டுமானால், அதை எடுத்துச் சொல்லவும் ஒரு பிரசங்கம் தேவையாயிருக்கிறது.

இரட்சிப்பு தானாக வருமானால் அதைப் பற்றிய பிரசங்கங்கள் தேவையில்லையே? எதற்காக இரவும் பகலும் இடைவிடாமல் சுவிசேஷத்தை அறிவிக்கிறார்கள்? ஆசீர்வாதம் தானாக வருமானால் அதைக் குறித்ததான பிரசங்கங்கள் தேவையில்லைதான். ஆனால் வராதே, வரவில்லையே! தானாக வந்திருக்குமானால் இதற்குள் அனைத்து தேவ பிள்ளைகளும் கோடீஸ்வரர்களாகி இருப்பார்களே?

தேவ பிள்ளைகளின் நிலைமை மிக மோசமாக, கவலைக்கிடமாக இருப்பதால்தான், ஐசுவரியத்தை பிரசங்கிக்க செழிப்பின் பிரசங்கியார்கள் எழும்பியிருக்கிறார்கள். விதண்டாவாதம் செய்து கொண்டிருக்காமல் இந்த பிரசங்கங்களைக் கேட்டு ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டு தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றுங்கள்.

இரட்சிக்கப்படும்போது நாம் பரலோகம் போகிறோம். கூடவே வாக்குப்பண்ணப்பட்ட ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளும்போது, அதை உபயோகித்து, ஒரு கூட்ட ஜனங்களையும் பரலோகத்திற்கு கொண்டு போகப் போகிறோம். எப்படி வசதி?

## சாபத்தை மாற்றும் ஆசீர்வாதம்:

உண்மையாகவா? சாபத்தை மாற்றும், மேற்கொள்ளும் சக்தி ஆசீர்வாதத்திற்கு உண்டு. ஆதியில் மனிதன் தேவனை விட்டு விலகியதால் சாபம் வந்தது. மனிதனின் கீழ்ப்படியாமையினால் விழுந்த சாபத்தின் விதை முளைத்து உலகத்தை ஆட்கொண்டது. சாபமான இந்த உலகத்தை மறுபடியும் திருத்தம் செய்து (rectify) ஆரம்பத்தில் தேவன் உருவாக்கியபோது இருந்தது போல, அந்த அழகான உலகத்தை மீண்டும் பெற்றுக்கொள்ள வேண்டுமானால், நாம் ஆசீர்வதிக்கப்படுவதைத் தவிர வேறு வழியில்லை.

ஆபேலின் இரத்தம் பூமியில் சிந்தப்பட்டபோது உருவான சாபம், அந்த வினாடியிலிருந்து தன் பயங்கரத்தை தொடங்கியது, (விஸ்வரூபம் எடுக்க ஆரம்பித்தது). வைரஸ் போல பரவ ஆரம்பித்தது. (வைரஸ் என்பது ஒரு செல் நுண்ணுயிரி ஆகும். இது ஒன்று இரண்டாக, இரண்டு நான்காக, நான்கு எட்டாக ... இந்த விகிதாச்சாரத்தில் பிரிந்து தனித்தனியான நுண்ணுயிரிகளாக

மாறுகிறது. ஒரு வைரஸ் எட்டு மணி நேரத்தில் பிரிந்து பிரிந்து 800 கோடி வைரஸ்களை தோற்றுவித்து விடுகிறது!) ஒரு நாளைக்கு மூன்று உலகங்களை உருவாக்கும் சாப வைரஸ்கள், **My God!** என்று யோசித்துக் கொண்டு நிற்காதீர்கள், சடுதியாக ஐசுவரியங்களைச் சுதந்தரியுங்கள். நோய் எதிர்ப்பு சக்தி மருந்து நம் கையில்தான் இருக்கிறது.

மனிதனின் பாவத்தால் வந்த இந்த சாபம் கடந்த 6500 வருஷங்களாக இந்த பூமியின் மீது கோர தாண்டவம் ஆடிக்கொண்டிருக்கிறது. சாபமானது வியாதிகள், கர்ப்ப வேதனை, அங்கஹீனக்குறைபாடுகள், பலவிதமான துன்பங்கள், வேதனைகள், நெருக்கடிகள், ஏழ்மை, பாழ்க்கடிப்புகள், இயற்கை சீற்றங்கள், பயங்கரங்கள், வன்முறைகள், சண்டைகள், பிரிவினைகள், உச்சக்கட்ட பாவங்கள், இன்னும் காதால் கேட்க முடியாத, கண்களால் காண முடியாத, உணர்வுகளால் உணர முடியாத, நம்பமுடியாத காரியங்களாக உருமாறி இந்த பூமியில் உலாவிக் கொண்டிருக்கின்றன.

பூமிக்கு வந்த ஒரு பயங்கரமான உயிர்க்கொல்லி நோய்தான் இந்த சாபம்! இந்த நோயைத் தீர்க்கும் வல்லமையுள்ள ஒரே மருந்து? நாம் ஆசீர்வதிக்கப்படுவதுதான், ஐசுவரியங்களைச் சுதந்தரிப்பதுதான்! இதற்காகத்தான் இந்த செழிப்பின் உபதேசங்கள்! (மீண்டும் சொல்கிறேன், செழிப்பு என்பது பணம் மட்டுமல்ல, நன்றாக இருப்பது, வெற்றியடைவது, அபிவிருத்தியடைவது என்றுதான் அர்த்தம். **Prosperity - succeed, thrive, flourish, good fortune**) சாத்தான் அவன் சௌகரியத்திற்காக எதை வேண்டுமானாலும் பேசுவான், அவன் வார்த்தைகளைக் கேட்காதீர்கள். தேவன் நம் சௌகரியத்திற்காக ஆயத்தம் செய்திருக்கும் இப்படிப்பட்ட உபதேசங்களைக் கேளுங்கள்.

நீங்க சொல்றதையெல்லாம் எப்படி நம்புவது? ஒருவேளை தவறாக இருந்தால்? வேதத்தை மாத்திரமல்ல, அதற்கு விளக்கவுரை கொடுக்கும் புத்தகங்களை வாசிக்கும்போதும் நமக்கு உதவி செய்பவர் பரிசுத்த ஆவியானவரே. அவரையே கேளுங்கள், சொல்லிக் கொடுப்பார். மீன் சாப்பிடும்போது, முள் இருந்தால் ஓரமாக எடுத்துவைக்கிறோமே, அப்படியே இதை வாசிக்கும்போது எடுத்து வையுங்கள், சதைப்பற்றானதை மாத்திரம் சாப்பிடுங்கள்.

## 'Try Jesus'!:

இயேசுவை பரீட்சித்துப்பாருங்கள் என்றுதானே சொல்கிறோம்? கட்டாயப்படுத்தவில்லையே? எதையெதையோ முயற்சிக்கிறோம். புதிதாக மார்க்கெட்டில் வந்திருக்கும் வாஷிங் பவுடர் நன்றாக துணி துவைக்கிறதா என்று வாங்கி **try** பண்ணுகிறோம். "பளுபாகற்காய்" என்ற ஒரு வித இராஜஸ்தான் காய்கறி மார்க்கெட்டில் விற்கிறது, வாங்கி பொரியல் செய்து பார்க்கிறோம். என்ன ருசி! கண்டகண்ட சினிமாவின் பெயரில் வெளிவரும் புடவைகளுக்காக கால்கடுக்க ஜவுளிக்கடைகளில் ஏறி இறங்குகிறோம். ஆனால்...

வானத்தையும் பூமியையும் உருவாக்கிய கர்த்தர் இயேசு நமக்குள் வாழ்கிறார், அவரை **miss** பண்ணிக்கொண்டேயிருக்கிறோம். செழிப்பின் உபதேசங்களைப் பார்த்து பயந்து ஓடும் ஒவ்வொரு முறையும் இயேசுவை விட்டு ஓடுகிறீர்கள் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். நம்மைச் செழிக்க வைக்கத்தானே அவர் வந்தார்? நம்மை ஒழிய வைக்க வந்த சாத்தானின் உபதேசங்கள் நம்மை மூழ்கடிக்க விடாதிருப்போம்.

பழைய ஏற்பாட்டின் பரிசுத்தவான்களைப் பாருங்கள், சாத்தானின் கொடியேற்றப்பட்டிருந்த காலங்களிலேயே அவர்கள் வெற்றிகளைக் குவித்தார்கள். ஆபிரகாம், மோசே, யோசேப்பு, தானியேல் ... வரிசையாக வாசித்துப் பாருங்கள். அதான் வாசித்திருக்கிறோமே! வாசித்தீங்கதான், ஒத்துக்கொள்கிறோம், ஆனால் பழைய உடன்படிக்கையின் சிவப்பு கண்ணாடியை மாட்டிக் கொண்டு! அதை கழட்டி வைத்துவிட்டு, இதோ இந்த பச்சைக் கண்ணாடியை மாட்டிக் கொள்ளுங்கள், ஒரு பைசா கூட தர வேண்டாம், முற்றிலும் இலவசம்!

ஐஸ்கிரீம் ... பார்த்த உடனேயே சாப்பிடத் தோன்றுகிறது. இந்த ஐஸ்கிரீமை முதன்முதலில் உருவாக்கி ருசித்த பெருமை பெற்றவர்கள் ரோம அரச குடும்பத்தினர். அக்காலங்களில் இந்த ஐஸ்கிரீமைத் தயாரிக்க படாதபாடு பட்டார்கள். தேவையான ஐஸ் கட்டிக்காக அடிமைகளை குதிரையில் மலை உச்சிக்கு அனுப்பிவிடுவார்கள். அங்கேயிருக்கும் பனிப்பாறைகளிலிருந்து அவசரஅவசரமாக வெட்டி எடுத்துக்கொண்டு வேகவேகமாக இறங்கி வர வேண்டும். அதற்குள் அரண்மனையில் பழங்களையும், தேனையும் கலந்து ஜாம் செய்து வைத்திருப்பார்கள். அதனுடன் பனிக்கட்டிகளை நொறுக்கிப்போட்டு நன்றாகக் கலக்கி சாப்பிடுவார்கள்!

இக்காலத்திலோ, கையில காசு வாயில ஐஸ்கிரீம்! போன் பண்ணினா வீட்டிலேயே கொண்டு வந்துத் தரான்! திடீர் ஐஸ்கிரீம்கள், உடனடி ஐஸ்கிரீம்கள் செய்யும் வசதியெல்லாம் வீட்டு ஃபிரிட்ஜ் ஃப்ரீசரிலேயே செய்வதற்கான வசதிகள் இருக்கின்றன. ரோட்டுக்கு ரோடு ஐஸ்கிரீம் பார்லர்கள்.

சாத்தான் தோற்கடிக்கப்படாத அந்நாட்களிலேயே பழைய ஏற்பாட்டின் நம் முற்பிதாக்கள் போர் செய்தார்கள், வெற்றி பெற்றார்கள், ஐசுவரியங்களைச் சுதந்தரித்தார்கள். இக்காலத்திலோ யெகோவா நிசி என்ற கொடியை ஏற்றி விட்டு, அதன் முன்னால் உட்கார்ந்துகொண்டு நான் தூசிதான், குப்பைதான், புழுதான், பூச்சிதான் என்று பாடிக்கொண்டிருக்கிறோம்!

இயேசு ஜெயித்தார், நாம் வெற்றிக் கீதம் பாடுவோம்! பழைய ஏற்பாட்டில் சேனைகளின் தேவன் யுத்தக்காலங்களில் முன்னே சென்றார், ஜனங்கள் யுத்தத்தை நடத்தினார்கள். இக்காலத்திலோ இயேசு நம் யுத்தத்தை தன் தோள்மீது போட்டுக் கொண்டார். இயேசு யுத்தம் செய்வதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம், அவ்வளவுதான்.

*பழைய ஏற்பாட்டை வாசிக்கும்போது இப்படி நினைத்துக் கொள்வதுண்டு.*

*இதில் வருபவர்களெல்லாம் புதிய ஏற்பாட்டின் காலத்தில் பிறந்திருப்பார்களானால், அல்லது இவர்கள் காலத்திலேயே சாத்தான் தோற்கடிக்கப்பட்டிருந்தால்? என்றைக்கோ இயேசுவுக்கு வழியை ஆயத்தம் பண்ணியிருப்பார்கள், பூமியின் சாபம் மாற்றப்பட்டிருக்கும், செழித்தோங்கியிருக்கும், பூமி ஏதேன் தோட்டமாக உயிர்மீட்சியடைந்திருக்கும்!*

*காரியம் ஒன்றும் மிஞ்சிப்போய்விடவில்லை. இப்போது இந்த வெளிச்சம், வெளிப்பாடு கிடைத்திருக்கிறதே, இதுவே போதும், எழும்புங்கள்!*

*செழிப்பைப் பிரசங்கிப்பவர்கள் மிகக் குறைவாக இருக்கிறார்கள், அதனால்தான் விழிப்புணர்ச்சி இல்லை என்று சோர்ந்து போக வேண்டாம். "கத்திரிக்காய் மலிந்தால் சந்தைக்கு வந்துவிடும்." மலிய வைப்பதுதான் நம் பொறுப்பு!*

## பின்தொடரும் ஐசுவரியங்கள்:

*ஆபிரகாமுடன் உடன்படிக்கை செய்து கொண்டவர் சாதாரணமானவர் இல்லை, அண்டசராசரங்களைப் படைத்த தேவாதி தேவன் இயேசு!*

*"நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன், நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், … பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார்"*

*உலக மனிதர்கள் நிரந்தரமானவர்கள் அல்ல, சாவு அவர்களை தற்காலிகமானவர்களாக ஆக்கி விடுகிறது. அதனால் பிதாவாகிய தேவன் என்றும் அழியாமையுள்ள சாவாமையுள்ள தன்னுடைய தேவக்குமாரனாகிய இயேசுவுடன் ஆபிரகாமுக்கு உடன்படிக்கையை ஏற்படுத்தி வைக்கிறார். இதனால் ஆபிரகாம் இறந்து போனபிறகும் ஆசீர்வாதம் இயேசு கிறிஸ்துவின் மூலமாக அவனுடைய சந்ததியினருக்கும் தொடர்ச்சியாக வந்துக் கொண்டே இருக்கிறது.*

*… உன்னை (ஈசாக்கை) ஆசீர்வதிப்பேன் … உன் தகப்பனாகிய ஆபிரகாமுக்கு நான் இட்ட கட்டளையை நிறைவேற்றுவேன். (ஆதி. 26:3)*

*யாக்கோபு (ஆதி. 27:29), யோசேப்பு, மனோசே, தாவீது, எசேக்கியா ராஜா என்று இந்த ஆசீர்வாதம் தொடர்கிறது. காலம் நிறைவேறினபோது; இயேசு வெளிப்படுகிறார், அவர் மூலமாக மீண்டும் இந்த உடன்படிக்கை தொடந்து புறஜாதியாராகிய நமக்கும் கடந்து வந்து கொண்டேயிருக்கிறது. கடைசி மனிதன் வரைக்கும் இது தொடரும்….*

*உலகம் தோன்றிய நாட்களிலிருந்தே தேசங்களில் பஞ்சம், பணவீக்கம், விலைவாசி, வறுமைக்கோடு, பட்டினிச்சாவுகள், என்ற பிரச்சனைகள் இருந்து கொண்டேதான் இருக்கிறது. ஆனால் இந்த சாபங்கள் இயேசுவுடன்*

உடன்படிக்கை செய்துக் கொண்ட நமக்கு இல்லை, ஏனென்றால் இந்த சாபங்களெல்லாம் இயேசுவால் சிலுவையில் முறியடிக்கப்பட்டன.

இயேசுகிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தது பாவிகளை இரட்சித்து, பரலோகம் சேர்ப்பதற்கு என்ற ஒரு விஷயத்தைத் தவிர வேறு எதையுமே தெரிந்து கொள்ளாமல் அந்த **chapter-** ஐயே **close** பண்ணிவிட்டார்கள். அதனால் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு இரட்சிக்கப்பட்டார்கள், தேவனுடைய பிள்ளைகளானார்கள், அபிஷேகமும் கிடைத்தது அந்நிய பாஷை அடையாளத்துடன்... என்றாலும் ...? உலகத்தில் சாத்தானால் விதைக்கப்பட்டு முளைத்தெழும்பிய எல்லா சாபத்தின் விளைச்சலும் இயேசுவின் சிலுவை மரணத்தில் வேரோடு பிடுங்கப்பட்டு சுட்டெரிக்கப்பட்டன என்ற சத்தியம் தெரியாமல் போனதால் ...? ஆசீர்வாதம் வரவேண்டிய வழித்தடங்களிலெல்லாம் சாபம் நடந்து வந்துக் கொண்டே இருக்கிறது. வாழையடி வாழையாக இந்தச் சாபமானது, தொடர்கதை எழுதிக் கொண்டே இருக்கிறது.

இந்த சத்தியத்தைக் குறித்ததான வெளிப்பாட்டை பெற்றவர்கள் கதைக்கு முடிவுரை எழுதி முடித்துவிட்டார்கள். சத்தியம் அறியாதவர்கள், எடுத்துச் சொல்லியும் புரிந்து கொள்ள திராணியில்லாதவர்கள், இந்த தொடர்கதையை **interesting** ஆக வாசித்துக் கொண்டேயிருக்கிறார்கள், அதன் **author** யார் என்றே தெரியாமல்! தேவப்பிள்ளைகளே, சாத்தான் எழுதிய தொடர்கதையை வாசிப்பதை நிறுத்துங்கள்!

## வேதத்தின் இரகசிய குறியீடுகள்:

சுவிசேஷத்தின் இரகசியம் என்று பவுல் இதைக் குறிப்பிடுகிறார். வேதத்தின் சத்தியங்கள் வசனத்திற்குள் மறைபொருளாக புதைத்து வைக்கப்பட்டிருப்பதால் விளங்கிக் கொள்வது கடினமாக இருக்கிறது. என்றாலும் கண்திறக்கப்பட்டு, வெளிச்சம் கிடைத்த பிறகு வேதத்தின் இரகசியங்களை அறிந்து கொள்வது கஷ்டமே கிடையாது.

அக்காலங்களில் சிப்பர் **(Chipper)** என்ற இரகசிய குறியீட்டு முறையை அரசர்கள் பயன்படுத்தி வந்தனர். ரோமானிய மன்னன் ஜூலியஸ் சீசர் இதை அறிமுகப் படுத்தினார். எழுத்துக்களை இரகசியக் குறியீடுகளாகப் பயன்படுத்தி யாரும் புரிந்து கொள்ள முடியாத வகையில் எழுதுவதுதான் இதன் அடிப்படை. இப்படி எழுதப்பட்ட இரகசியச் செய்தியைப் பார்த்து படித்து சரியான அர்த்தத்தை எழுதுவதற்குப் பெயர்தான் “கிரிப்டோகிராஃபி” **(Criptography).**



இரகசியமான இராணுவச் செய்திகளை தளபதிகளுக்குத் தெரிவிக்க இந்த ரகசியக் குறியீட்டு முறையை **Julius Ceazer** பயன்படுத்தினார். ஒரு குறிப்பிட்ட வரிசையில் எழுத்துக்களை இடம் மாற்றிப் படிக்கும் முறைதான் இது. உதாரணமாக இரண்டு வரிசையில் எழுத்துக்கள் இருக்கிறது என்றால், அதில் **A, B, C** என்ற எழுத்துக்களுக்குப் பதிலாக கீழ் வரிசையில் உள்ள **D, E, F** என்ற எழுத்துக்களைப் போட்டுப் படிக்க வேண்டும்.

இந்த குறியீட்டுமுறை எளிதாக படித்துவிடக்கூடியதாக இருந்ததால் பாதுகாப்பானதாக இல்லை. ஆனால் ரோமானியக் காலத்தில் இது பயனுள்ளதாகவே இருந்தது. ஏனென்றால் அக்காலத்தில் சீசரின் எதிரிகளில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் குறைவு. 1915 ம் ஆண்டுக்கு மேல் இந்த முறை ரஷிய இராணுவத்தால் பயன்படுத்தப்பட்டது. தற்காலங்களில் வேடிக்கை விளையாட்டுகளின் பயன்பாட்டுக்கு வந்துவிட்டது.

வசனங்களை வாசிக்கும் விஷயத்திலும் இதே சூட்சுமம்தான் வருகிறது. சூட்சுமம் பரிசுத்தாவியானவரிடம் இருக்கிறது. அவருடைய உதவியுடன், பிரகாசமுள்ள மனக்கண்களுக்காக ஜெபித்து வாசிக்க வேண்டும். அப்போது ஆவியானவர் தெளிவைத் தருவார், சூட்சுமம் தெரிந்தபிறகு வெளிப்பாடுகளைப் பெறுவதில், புரிந்து கொள்வதில் கஷ்டமே இல்லை.

பழைய ஏற்பாட்டின் காலங்களில் பல குறைபாடுகள் இருந்தன. இயேசு வெளிப்படாத காலகட்டம். பரிசுத்தாவியானவரின் தற்காலிகமான அபிஷேகங்கள். சாத்தானின் தலை நசுக்கப்படவில்லை. மனுக்குலத்தை மரணபயம் பிடித்து ஆட்டிக்கொண்டிருந்தது. தீர்க்கதரிசிகளுக்கு வெளிப்படுத்தப்பட்டவைகளின் மறைபொருள் அவர்களுக்கே விளங்காமல் இருந்தது.

ஆனால் இக்காலத்தில் சூட்சுமத்தை அறிந்த நாம் வெளிப்பாடுகளை அறிந்து கொள்கிறோம்.

*"... கர்த்தர் அவனை நோக்கி; ... ஊமையனையும், செவிடனையும், ... குருடனையும் உண்டாக்கினவர் யார்? கர்த்தராகிய நான் அல்லவா? யாத். 4:11"*

இந்த வசனத்தை வாசிக்கும் போது ஊமை, செவிடு, குருடான மக்களை தேவன்தான் உண்டாக்கினார் என்பது போலத் தோன்றும். மனசுக்குள் ஒரு திடுக்கிடுதல், குழம்பம், தலையைப் பிய்த்துக் கொள்ளலாம் போலிருக்கும். புரியவில்லையே, நம் தேவன் நல்லவர், அன்பாகவே இருக்கிறார், அவரால் இதையெல்லாம் செய்ய முடியாது. ஏனென்றால் பரலோகத்தில் இதெல்லாம் கிடையாது.

அப்படியானால் பரிசுத்தாவியானவர் என்ன சொல்ல வருகிறார்? ஊமையனை நான்தான் உருவாக்கினேன்; ஆனால் ஊமையாக அல்ல! செவிடனை நான் தான் உருவாக்கினேன்; ஆனால் செவிடாக அல்ல! குருடனை நான் தான் உருவாக்கினேன்; ஆனால் கண்தெரியாதவனாக அல்ல!

மூளை வளர்ச்சியில்லாதவனை நான்தான் உருவாக்கினேன்; ஆனால் **MR** என்று முத்திரை குத்தியல்ல.

அப்படியானால்? குறைபாடுகளெல்லாம் ஆதாமின் விழுகையால் பேயாட்டம் போட்டுக்கொண்டிருக்கும் சாபத்தால் வந்தது! இப்போது புரிகிறதா? வசனம் புரியாவிட்டால் குறிப்பிட்ட வசனத்திற்கு மேலேயிருக்கும் வசனத்தையும், கீழே இருக்கும் வசனத்தையும் படிக்க வேண்டும். அப்படியும் புரியலையா, முழு அதிகாரத்தையும் தியானியுங்கள் ஒன்றும் குடிமுழுகிப் போய்விடாது. பைபிள் வாசிக்க நேரமில்லை என்று சொல்லும் அளவுக்கு தலைபோகிற வேலை யாருக்கும் இருக்காது, இருக்க முடியாது, இருக்க வேண்டிய அவசியமில்லை, அப்படி ஒரு வேலை தேவையில்லை!

வசனங்களை இணைத்துப் படிக்கும் போது அர்த்தம் புரியும்.

உலகமெங்கும் அழிவுகள் ... ஏன்? சாத்தான், அவன் மூலமாக ஏவாளின் உள்ளத்தில் விழுந்த விதைகள். அந்த விதைகள் முளைத்தெழுபியது, பாவங்கள் விளைந்தது. கொலை நடக்கிறது, ஆபேலின் இரத்தம் சிந்தப்படுகிறது, பாவம் விளைய ஆரம்பித்தது. இந்த விதைப்பும் அறுப்பும் **concept** தன்னிச்சையாக செயல்பட்டு உலகத்தை அழித்து வருகிறது. தேவன் நல்லவர், ரொம்ப ரொம்ப நல்லவர், அவரால் கெட்டதைச் செய்யவே முடியாது, காரணம் அவர் இருக்கும் பரலோகத்தில் கெட்டது எதுவும் கிடையவே கிடையாது. அங்கே இருக்கும் நன்மையான காரியங்களைக் கொண்டுதான் அவர் இந்த உலகத்தில் எதையாவது செய்ய முடியும்.

அவர் மக்களுக்கு நன்மை செய்வதற்கானச் சூழ்நிலைகள் இல்லாமல் இருக்குமானால் எதுவுமே செய்யாமல் இருந்து விடுகிறாரே தவிர தீமை எதையும் செய்வதில்லை. பழைய ஏற்பாட்டின் பரிசுத்தவான்கள் அறியாமையினால் தேவனைப் பற்றி தப்புத்தப்பாகப் பேசினார்கள். பட்சிக்கிற அக்கினி என்றார்கள், நொறுக்குகிறார், உடைக்கிறார், சின்னாபின்னமாக்குகிறார் என்றெல்லாம் புலம்பினார்கள். இவர்களுடைய வார்த்தைகளெல்லாம் தேவனுடைய தெய்வத்துவத்தை மாற்றிவிடுவதில்லை. அவர் நல்லவராகவே இருக்கிறார், அன்பாகவே இருக்கிறார், துரோகிகளுக்கும் நன்மை செய்கிறார், சாத்தானைக் கூட அவர்தான் பராமரித்து வருகிறார். (!) **Yes,** தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட அவன், தேவன் உருவாக்கிய வானமண்டலத்தில்தான் உலாவிக்கொண்டிருக்கிறான். மனிதர்களுடைய ஆத்துமாவில் அரண்களைக் கட்டி அதில் தங்கிக்கொண்டு செயல்படுகிறான்.

ஒரு விஷயம், தேவன் சாத்தானை உருவாக்கவில்லை, அவர் தேவ தூதனைத்தான் உருவாக்கினார், அவன் தன் பெருமையினால் சாத்தானாக மாறினான். தேவனால் சாத்தானை உருவாக்க முடியாது, பரலோகத்தில் சாத்தானை உருவாக்குவதற்கான **raw materials** எதுவும் கிடையாது!

இந்த சாப விளைச்சலை அழித்தொழிக்கத்தான் இயேசு வந்தார். அவர் வந்த நோக்கம் 100% **success!** ஆனால் நாம் அவரை, அவர் சிலுவையில் செய்தவைகளைத் தெரிந்துகொள்வதில் .00001% தான் **success!** அது 100%

ஆக மாறும் போது உலகத்தின் சாபம் மாறி, ஏதேன் தோட்டம் உருவாகும் — ஆயிர வருட அரசாட்சியில் அதைப் பார்க்க முடியும்.

தேவனுடைய இந்த நோக்கம், திட்டத்துக்கு செயலாக்கம் கொடுக்கத்தான் இந்த ஆசீர்வாத உபதேசங்கள், செழிப்பின் உபதேசம்!

செழிப்பின் உபதேசம் என்ற வார்த்தையை உச்சரிக்க நான் பயப்படுவதில்லை, யாருக்கும் பயப்பட வேண்டிய அவசியமுமில்லை.

சிறுகுழந்தைகளுக்கு அஜீரண கோளாறு இருக்குமானால், இஞ்சி சாறு கொடுப்பார்கள். பிள்ளை தன் அம்மா தனக்கு ஏதோ வருத்தம் கொடுப்பதாக நினைத்து, சாற்றை கொப்பளித்துவிடும்.

கிராமப்புற பள்ளிக்கூடங்களில் அம்மை வியாதி தாக்காமல் இருக்க இலவச தடுப்பூசி போட வருவார்கள். பிள்ளைகள் டாக்டர்களுக்கு தப்பி அங்கும் இங்கும் ஓடி விடுவார்கள். பிள்ளைகளே யாருக்கு நஷ்டம்?

ஒரு ஆட்டோவில் ஒட்டப்பட்டிருந்த வாசகம். "பணம் இருந்தால் எங்கேயும் போகலாம், ஆனால் பணத்துக்கு எங்கே போவது?(!)"

பணம் எல்லாவற்றிற்கும் உதவும் என்ற வசனம் வேதத்தில்தான் இருக்கிறது, நான் வேறு எந்த புத்தகத்தையும் **reference** பண்ணி எழுதவில்லை. அதே நேரத்தில் பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கான பாதுகாப்பான வழியையும் சொல்லித் தருகிறது. ஏதோ ஒரு வழியில், எப்படியோ அல்ல தன்னுடைய நல்ல வழிகளில்!

தேவன் பரலோகத்திலிருந்து நமக்கு பணத்தைத் தர முடியுமா? இப்படிப்பட்ட ஆசை பலருக்கு இரகசியமாக இருக்கிறது. கட்டுகட்டாக ரூபாய் நோட்டுகள் வந்து விழுந்தால் நன்றாக இருக்குமே என்று. ஆனால் தேவன் அவ்விதம் செய்வதில்லை. அப்படி தேவன் செய்வதில்லை, அவர் பரலோகத்திலிருந்து தன் வார்த்தையை அனுப்புகிறார். அந்த வார்த்தை ஆசீர்வாதத்தைக் கொண்டு வரும். பரலோகத்தில் வார்தைகள்தான் இருக்கிறது.

ஆதியிலே அவர் பூமியையும் அதன் நிறைவையும் உண்டாக்க தன் வார்த்தைகளைத்தான் உபயோகிக்கிறார் என்பதைக் கவனியுங்கள். அதனால் அவர் வார்த்தையைத் தவிர வேறு எதையுமே அனுப்ப முடியாதென்பதைப் பார்க்கிறோம்.

அப்படியே நம் விருப்பப்படி அவர் பணத்தைப் போட்டாலும் ... அது பரலோக நாட்டின் நோட்டாக இருக்கும், இங்கே செல்லாதே! அதை வைத்துக் கொண்டு நாம் எதையும் செய்ய முடியாதே!

... கர்த்தருடைய வார்த்தை ஆபிராமுக்குத் தரிசனத்திலே உண்டாகி, ... பயப்படாதே, நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன் என்றார். ஆதி. 15:1 (**Ref:** ஆதி. 15:4, யாத். 4:30, எண். 22:35, உபா. 6:6,)

... மனுஷன் அப்பத்தினால் மாத்திரம் அல்ல, கர்த்தருடைய வாயிலிருந்து

புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்பதை உனக்கு உணர்த்தும்படிக்கு, ... உபா. 8:3

இப்படித்தான் தேவன் செயல்படுகிறார். அவருடைய வார்த்தை வேதத்தின் மூலமாக, தரிசனத்தில், சொப்பனத்தில், அல்லது எதாவது ஒரு தேவபிள்ளையின் மூலமாக ஏற்படுகிறது. (வேத வசனங்களின் மூலமாக தேவனுடைய வார்த்தைகளை பெற்றுக் கொள்வது பாதுகாப்பானது, மற்ற காரியங்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து, அது வசனத்திற்கு ஒத்துப்போகிறதா என்று கவனித்தறிய வேண்டும்.)

அந்த வார்தைகளை நாம் எடுத்து, இருதயத்தில் விசுவாசித்து. நம் வாயில் வைத்து, உச்சரிக்கும் போது ... நாளடைவில் அது காணும் பொருளாக மாறுகிறது.

கர்த்தருடைய வார்த்தை வானத்தில் எங்கும் வியாபித்திருக்கிறது. அவர் எப்போதுமே தன் வார்த்தைகளை அனுப்பிக் கொண்டேதான் இருக்கிறார். (சங். 19:1—4) அவர் பேசுவதை நாம் கேட்கிறோமா என்பதுதான் பிரச்சனை. அவர் வார்த்தைகளைக் கவனித்திருந்து, நம் ஆவியில் அதை உள்வாங்க வேண்டும். ரேடியோ ஆண்டனா வானத்தின் ஒலியலைகளை உள்வாங்குவதைப் போல. ஒலிபரப்பாகும் வார்த்தைகள் வான்வெளியில் அலைரூபத்தில் மிதந்து வருகிறது. ஆண்டனாதான் அதை ஈர்க்கிறது.

தேவனுடனான நம்முடைய தொடர்பு சரியானபடி இருக்குமானால் அவருடைய வார்த்தைகளைக் கிரகிக்க முடியும். நம் நினைவில் அவை உண்டாகும். அதன்படி செயல்படும்போது நமக்கு எது தேவையோ அது இந்த பூமியில், நம் எல்லைகளுக்குள் உண்டாகிறது, நாம் எடுத்துக் கொள்ளலாம்.

இதுதான் ஜெபம்! அதாவது தேவனுடனான தொடர்புதான் ஜெபம். அதாவது அவருடைய பிரசனத்திற்குள் எப்போதும் இருப்பதுதான் ஜெபம். அதாவது அவருடைய ஆளுகைக்குள், **(Control, Custody)** இருப்பது தான் ஜெபம்.

அறைக்குள் போய் கதவைப் பூட்டி மணிக்கணக்காக எதையெதையெல்லாமோ சொல்லி கொட்டி, அழுது, புலம்பிய அனுபவம் எனக்கும் உண்டு, அந்த காலமெல்லாம் இப்போது மலையேறிப் போச்சி!

என் தேவனை என் அப்பாவாக அறிந்து கொண்ட பிறகு... வேலையினூடே என்னால் ஜெபிக்க முடிகிறது, எப்போதும் அவர் பிரசன்னத்தில் நடக்க முடிகிறது, தோட்டத்தில் உலாவ முடிகிறது, அங்கே ரோஜா பூக்களை ப்பறிக்கவும் முடிகிறது. ஒரு நிமிஷம், ஒரு நொடி ஜெபித்தாலும் கேட்கிறார், நின்றோ, நடந்தோ, உட்கார்ந்தோ, படுத்தோ கூட அப்பாவிடம் கேட்டுப் பெற்றுக் கொள்கிறேன்.

“தேவசமுகத்தில் நீ துணிகரமாய் உன் வாயினால் பேசாமலும், மனம்பதறி ஒரு வார்த்தையையும் சொல்லாமலும் இரு; ... உன் வார்த்தைகள் சுருக்கமாயிருப்பதாக. பிர. 5:2”

என் சரீரப்பிரகாரமான அப்பா உயிரோடிருந்த நாட்களில், நான் அவர் முன்னே போய் முழங்கால் படியிட்டு, அழுது மன்றாடி எனக்கு வேண்டியதை பெற்றுக் கொண்டதாக எதுவும் எனக்கு நினைவே இல்லை! சாதாரணமாக கேட்பேன், அல்லது சிரித்துக் கொண்டே கேட்பேன். அப்படியானால் நம் ஆவியின் தேவன் இன்னும் அதிகமல்லவா?

## அரண்கள் ? :

இதைப் பற்றிய நிறைய பிரசங்கங்கள் கேள்விப்பட்டிருப்போம்? அரண்கள் சாத்தான் குடியிருக்கும் ஸ்தலம் ஆகும். இங்கே பதுங்கியிருந்துதான் இவன் தாக்குதல் நடத்துகிறான்.

இந்த அரண்களைக் கட்டுவதற்கு அவன் எதை பயன்படுத்துகிறான் தெரியுமா? தேவனுடைய சித்தத்திற்கு மாறான, அவருடைய எண்ணங்களுக்கு எதிரிடையான காரியங்களினால் இதைக் கட்டுகிறான். அங்கே இருந்து அவன் நம் நினைவுப் பகுதியை தாக்குவதால்தான் நாம் தேவனைப் பற்றி தப்புத் தப்பாக நினைத்துக் கொள்கிறோம்.

தேவன் பயங்கரமானவர், பட்சிக்கிற அக்கினி, உடைக்கிறார், நொறுக்குகிறார், மோதியடிக்கிறார், தண்டிக்கிறார், வியாதியை தருகிறார், தரித்தரராக்குகிறார், ... என்றெல்லாம் நினைத்துக் கொண்டு வேதனைப்படுகிறோம். இதனால் நம்மால் தேவனை உண்மையாக நேசிக்க முடியாமல் போகிறது. மோசமானவர் என்ற தவறாகப் புரிந்து கொள்ளப்பட்ட அப்பாவை எப்படி நேசிக்க முடியும்?

தேவன் இயேசு இந்த உலகத்திற்கு வந்த நோக்கம், அவர் செய்திருக்கும் காரியங்கள், நம்மைக் குறித்ததான காரியங்கள் எல்லாவற்றையுமே இந்த அரண்கள் மறைக்கின்றன. இந்த அரண்கள் உடைக்கப்பட வேண்டியதாயிருக்கிறது. எப்படி உடைப்பது?

“எங்களுடைய போராயுதங்கள் ... அரண்களை நிர்மூலமாக்குகிறதற்குத்

தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது. 2 கொரி. 10:4”

ஆவிக்குரிய போராயுதங்கள் நமக்கு இருக்கிறது என்பதை பார்க்கிறோம். அதைக் கையில் வைத்துக் கொண்டுதான் இன்னும் அரண்களை உடைக்காமல் காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கிறோம்.

இந்த ஆவிக்குரிய போராயுதங்களை சர்வாயுதவர்க்கம் என்று வேதம் குறிப்பிடுகிறது.

“நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள். எபே. 6:11”

சத்தியம் — கச்சை (இடுப்புப் பகுதியில் அணியப்படுகிறது... மனிதன் பலம் அவனுடைய இடுப்பில்தான் இருக்கிறது. கால் பாதிக்கப்பட்டால்கூட நொண்டி நொண்டி நடந்துவிடலாம், இடுப்பு எலும்பு, நரம்புமண்டலம்

பாதிக்கப்பட்டால் படுத்த படுக்கைதான். சத்தியம் என்பது தேவனை அறிந்து கொள்வது, அதைத்தான் இந்த புத்தகங்களின் வாயிலாகப் பார்த்துவருகிறோம். — நாம் பலத்தோடு இருந்தால் அரண்களை எளிதாக உடைக்கலாம்)

நீதி — மார்க்கவசம் (மார்பை மறைப்பது, உயிரைக் காக்கும் முக்கியமானதொன்றாகும். தேவனுடைய சித்தத்தை, விருப்பத்தை செய்வதுதான் அது. அப்படிச் செய்வது நம் உள்ளான மனிதனுக்குப் பாதுகாப்பைத் தருகிறது. — தேவனுக்குப் பிரியமானதைச் செய்யும் போது, அவருக்குப் பிரியமில்லாத செங்கற்களால் கட்டப்பட்ட அரண்கள் உடைந்து விழுகின்றன.)

சுவிசேஷம் — பாதரட்சை (செருப்பு) (தேவனைப் பற்றியும், அவரைப் பற்றிய நல்ல காரியங்களையும் மக்களுக்குச் சொல்வது. இது செருப்பைப் போல, நம் ஊழிய நடையை இலகுவாக்கி, வெற்றியாக்கிக் கொடுக்கிறது. — இந்த நற்காரிய சுவிசேஷம் பரவும்போது, புரிந்து கொண்ட ஜனங்கள் தங்களை நிதானித்துப் பார்க்கிறார்கள், தங்களில் சாத்தானின் அரண்கள் இருப்பதை அவர்கள் புரிந்து கொள்கிறார்கள். தான் இருக்கும் இடத்தை மனிதன் கண்டுபிடித்துவிட்டான் என்று தெரிந்தாலே போதும் சாத்தான் ஓடி விடுகிறான்.)

விசுவாசம் — கேடகம் (முழு உடலுக்கும் பாதுகாப்பைத் தருவது. கிறிஸ்தவமே விசுவாசத்தின் மேல்தான் கட்டப்பட்டிருக்கிறது. தேவன் மேலிருக்கும் விசுவாசம் சரியானபடி இருந்தால் போதும்; சாத்தானால் நம்மிடம் இருக்க முடியாது.)

இரட்சிப்பு — தலைச்சீரா. (நாம் இரட்சிக்கப்படும்போது பாவத்திலிருந்து மீட்கப்படுகிறோம். இந்தக் காரியம் நம் ஆவியில் நடைபெறுகிறது. நம் ஆவி நம் மூளைப் பகுதியில் இணைக்கப்பட்டிருக்கிறது. மூளை தன் செயல்பாட்டை இழந்தாலே மனிதன் இறந்துவிட்டதாகத்தான் அர்த்தம். இருதயம் இயங்கிக் கொண்டிருந்தாலும் பிரயோஜனமில்லை. அவன் கோமா நிலையில் இருப்பான். உள்ளான ஆவிக்குரிய மனிதன் உயிரோடிருக்க அவனுடைய ஆவி ஜீவனோடிருப்பது அவசியம். நம் ஆவியில் உயிரோட்டத்தை உருவாக்குவதே நம் இரட்சிப்புதான். மனிதன் தன்னுடைய இரட்சிப்பைச் **(salvation)** சரியாக பிரயோஜனப் படுத்துவானானால், சாத்தானால் அவன்முன் நிற்க முடியாது.

வசனம் (வார்த்தைகள்) — பட்டயம் (கத்தி). வசனங்களை உச்சரித்து அரண்களில் குடியிருக்கும் பிசாசுகளைத் துரத்தலாம்.

ஜெபம் — தேவனுடனான தொடர்புதான் ஜெபம். இது எப்போதுமே இருக்கிறது. தொடர்பு அறுபடாத பட்சத்தில் சாத்தானால் அரண்களில் இருந்து வேலை செய்ய முடியாது.

## கதை பழசுதான், கருத்துதான் புதுசு:

இரட்சிக்கப்பட்டு ( ... ) வருஷம் ஆச்சி, நூற்றுக்கணக்கில் பிரசங்கங்கள் கேட்டு, குறிப்பெடுத்தாச்சி, நான் இதற்கெல்லாம் காரண காரியங்கள்,

நோக்கம், இலக்கு எதுவுமே சரியாகத் தெரியவில்லை.

தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது மனுக்குலம். தேவனுடைய ஆசீர்வாதத்துடன் இந்த உலகத்தில் வாழ்க்கையைத் தொடங்கியவன்தான் மனிதன்.

வாழ்க்கையின் பிரமாணம் என்னவென்றால் வளர்ச்சி, பெரிதாகுதல், விரிவாகுதல், பரிபூரணம் ... இவற்றை நோக்கித்தான் இருக்க வேண்டும். இரட்சிக்கப்பட்டு 25 வருஷம் ஆச்சி, இன்னும் அப்படியே இருக்கேன் பிரதர், ஒரு மாற்றமும் இல்லை என்று பெருமையுடன் சொல்லிக் கொள்வது வாழ்க்கையின் பிரமாணத்திற்கு விரோதமானது, முரண்பாடானது!

முன்னேறாதவன் மனுஷனே அல்ல. **(Growth principle)** ஒரு நாய் பிறக்கிறது ... வளர்கிறது. 1 மாதம் முடிந்ததும் ஆகாரத்தை எதிர்பார்க்கிறது, கிடைத்ததும் சாப்பிடுகிறது, படுத்து தூங்குகிறது. நாட்கள் ஓடுகிறது 6 மாதங்கள் ஆனது ... அந்த நாய் சாப்பாட்டுக்கு அலைகிறது, சாப்பிடுகிறது, மரத்தடியில் ஓய்வு எடுக்கிறது. வருஷங்கள் உருண்டோடுகிறது, 4 வருஷங்கள் கழிந்தன, வீட்டெஜமானி கொடுத்த சாப்பாட்டை ஆசையோடு அவசர அவசரமாக சாப்பிடுகிறது, வாசல்படியருகே உட்கார்ந்து ரோட்டை வேடிக்கை பார்க்கிறது, குலைக்கிறது, கொஞ்சம் நேரம் ஆனதும் மீண்டும் தூக்கம்.

10 வருஷங்களுக்குப் பிறகு, நாய் பசியோடு எதிர்பார்த்து காத்திருக்கிறது, சாப்பாடு எப்போது கிடைக்கும் என்று. வீட்டு வேலைக்காரி தட்டில் சாப்பாட்டைக் கொண்டு வந்து போட்டதும் மெதுவாக எழுந்துப் போய் சாப்பிடுகிறது, தண்ணீர் குடிக்கிறது, அதே வெறிச் பார்வையுடன் திரும்பி தன் இடத்திற்கு நடக்கிறது.

அந்த நாயின் நோக்கம் என்ன? மிருகங்களின் இலக்குதான் எது?

சாப்பாடு, ஒரு சில செயல்கள், தூக்கம், மரணம் ... இவற்றைத் தவிர அவைகளுக்கு வேறென்ன இருக்கிறது, வளர்ச்சியில்லாத வாழ்க்கை என்பதும் இதற்கு ஒப்பனையானது தான்.

“மனுபுத்திரர் தாங்கள் மிருகங்களைப்போல் இருக்கிறார்களென்பதை அவர்கள் காணும்படிக்கு தேவன் அவர்களைச் சோதிக்கிறாரென்று நான் மனுஷருடைய நிலமையைக் குறித்து என் உள்ளத்தில் எண்ணினேன். பிர. 3:18”

ஆசீர்வாதம் என்றால் அதில் மனுக்குலம் நன்றாக இருப்பதற்கான அனைத்து சாராம்சங்களுமே அடங்கும். என்றாலும் இதில் பொருளாதாரம் அதிக முக்கியமானது என்பதால் இதைக்குறித்து கொஞ்சம் அதிகம் உபதேசிக்க வேண்டியதாயிருக்கிறது. உடனே இது பண உபதேசம், இந்த பிரசங்கியார் பண ஆசை உள்ளவர், இது மக்களைக் கெடுக்கும் உபதேசம் ... ஏகப்பட்ட விமரிசனங்கள்.

என்ன செய்வது? **சிவப்புக் கண்ணாடி** இந்தப் பாடு படுத்துகிறது.

தேவனை விசுவாசித்து, அவருடைய வழிகளில் பணம் சம்பாதிக்கும் விஷயத்தில் "போதும்" என்று திருப்திப்பட்டுவிடுவது தேவனுடைய சித்தத்திற்கு விரோதமானது.

இந்த விஷயத்தில் நாம் திருப்திபட்டு நின்றுவிடும்போது, ஆத்தும ஆதாய விஷயத்திலும் இதே மனநிலை வந்துவிடுகிறது. சுவிசேஷத்தை அறிவித்தது போதும், கிடைத்த ஆத்துமாக்கள் போதும், சபை விஸ்தாரம் தேவையில்லை என்று திருப்தியடைய முடியுமா? எப்போதும் எந்நேரமும் பிறந்து கொண்டேயிருக்கும் ஒவ்வொரு குழந்தையும் தேவன் மனுஷனில் திருப்தியடைந்துவிடவில்லை என்பதை நிரூபிக்கிறது. குழந்தைகள் அப்படியே இருக்க போவதில்லை, வளருகின்றன ... முன்னேறுகின்றன ... ஏதோ ஒரு பரிபூரணத்தை அடையத் துடிக்கின்றன. பிறந்து கொண்டேயிருக்கிற ஒவ்வொரு ஆத்துமாவுக்கும் சுவிசேஷ தேவை இருந்துகொண்டே இருக்கிறது.

தேவனுடைய சுவிசேஷம் இலவசம்தான். ஆனால் அதை ஆத்துமாக்களின் எல்லைகளுக்குள்ளாகக் கொண்டு செல்லும் வேலையை இலவசமாகச் செய்ய முடிவதில்லை.

கோடானுகோடி பணம் இதற்காக செலவழிக்கப்படுகின்றன. இவ்வுலகத்தின் காரியங்களுக்காக கோடானுகோடியாகப் பணத்தை உலகளாவிய நிறுவனங்கள் கொட்டோகொட்டென்று கொட்டிக் கொண்டிருக்கின்றன. அப்படியிருக்க, வானத்தையும் பூமியையும் உண்டாக்கிய தேவனுடைய விருப்பம் இந்த உலகத்தில் செய்யப்பட வேண்டியது மிக அவசியமல்லவா?

சுவிசேஷம் என்னென்ன செய்கிறது. சாத்தானால் சாபத்துக்குள்ளான இந்த உலகத்தின் 1,00,000 தீமைகளிலிருந்து மக்களைக் காப்பாற்றுகிறது. இயேசு கிறிஸ்துவின் மூலமாக சிலுவையில் ஏற்படுத்தப்பட்ட 1,00,000 நன்மைகளை மனுக்குலத்திற்கு அளிக்கிறது.

கண்டிப்பாக இந்த மகா பெரிய திட்டத்திற்கு நிறைய செலவு செய்ய வேண்டும் இல்லையா? யார் செய்வார்கள்? சந்தேகமென்ன கண்டிப்பாக நாம்தான்? அப்பாவுடைய மனதின் விருப்பத்தை பிள்ளைகள்தான் நிறைவேற்ற வேண்டும். நமக்குத்தான் அந்த பொறுப்பு இருக்கிறது. இந்த வேலையை இந்த உலகத்தில் செய்ய நம் தேவனுக்கு நம்மை விட்டால் வேறு யாருமில்லை.

நமக்கு இந்த உலகத்தைக் கொடுத்து, அதன் மேல் ஆளுகையையும் கொடுத்து, ஆளத் தேவையான எல்லாவற்றையும் செய்து கொடுத்த தேவனுடைய நோக்கம் நிறைவேற கண்டிப்பாக கொடுக்க வேண்டும் இல்லையா?

செய்ய வேண்டியது? இலவசமாக இயேசு தயார் செய்து வைத்திருக்கும் ஆசீர்வாதங்களை எடுத்துக் கொள்வோம். சரி... எந்த வழியாக நுழைந்தால் எடுத்துக் கொள்ளலாம்? இயேசுவே வழி! அப்படியானால் வாக்குத்தத்தங்கள்? அதுதான் இயேசுவுக்குள் ஆம் என்றும், ஆமென் என்றும் இருக்கிறதே? (2 கொரி. 1:20)

*வாக்குத்தத்தங்களை வாசித்து, தியானித்து, விசுவாசித்து இருதயத்தில் வைத்து, அதை எடுத்து (வாயின் அறிக்கை மூலம்) உச்சரிப்பதன் மூலம் நாளடைவில் வார்த்தை உருமாற்றம் அடைந்து கண்களால் காணும் பொருளாக மாற்றம் அடைகிறது.*

*பிறகு அதை எடுத்து தசமபாகமாக ... அதாவது நியாயப்பிரமாணம் வரும் முன்னதாக உலகத்திலிருந்த பத்தில் ஒன்று என்ற தேவனுடைய* **Principle**-*ன்படி கொடுங்கள். பவுல் அப்போஸ்தலனின் ஆலோசனைப் படி எதையாகிலும், இயன்றதை, மனதின் நிர்ணயத்தின்படி, விசனமில்லாமல், கண்டிப்பில்லாமல், வாஞ்சையோடு, விசுவாசத்தோடு கொடுப்போம்.*

*ஐசுவரியங்கள் இலவசமாக இருந்த போதிலும், நாம் தேவனை விசுவாசிக்கிறோம் என்பதை விதைப்பு என்ற கிரியையின் மூலம்தான் நிரூபிக்க வேண்டியதாயிருக்கிறது.*

*கிருபையால் விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டோம். அப்படியே கிருபையால் விசுவாசத்தைக் கொண்டு சுகமானோம். அந்தப்படியே கிருபையால் விசுவாசத்தைக் கொண்டு (விதைப்பு என்ற கிரியையின் மூலம் அதை வெளிப்படுத்தி) ஐசுவரியங்களைப் பெற்றுக் கொள்வோம்.*

*இன்னும் கொஞ்சம்* **(deep)** *ஆழமாகப் போவோம். நம் விதைப்பு அல்ல, விசுவாசம்தான் தேவனிடமிருந்து ஐசுவரியங்களைப் பெற்றுத் தருகிறது. என்றாலும் விதைப்பு இல்லாவிட்டால் அந்த விசுவாசம் செத்துப் போய்விடுகிறது!*

*"... ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறது போல, கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கிறது. யாக். 2:26"*

*அதாவது நம் விசுவாசத்திற்கு உயிரோட்டத்தைக் கொடுப்பதே கிரியைதான் என்று பார்க்கிறோம்.*

*அதைப் போலவே விசுவாசமில்லாத கிரியையும் செத்ததுதான். இரண்டும் வண்டியில் கட்டப்பட்டிருக்கும் இரண்டு மாடுகளைப் போலத்தான். ஒன்று சண்டித்தனம் பண்ணினாலும் வண்டி நகராது. ஒரு மாடு படுத்துவிட்டால்? இன்னொரு மாடு வண்டியுடன் சேர்த்து இழுக்க வேண்டியதிருக்கும், அது முடியாத காரியம் என்பதால் அடுத்த மாடும் நின்றுவிடும், வண்டியும் நின்று விடும், பயணமும் நின்றுவிடும், ஆனால் ரோடு மட்டும் முன்னால் போய் கொண்டேதான் இருக்கும்! சரியான விதத்தில் பிரயோஜனப்படுத்தாமல் தவற விட்டுவிடுகிறோம் என்பதற்காக தேவனுடைய வழிகள், நியமங்கள் மாறப்போவதில்லை.*

## தேவனைக் கவனியுங்கள்:

*தேவன் என்னென்ன காரியங்களைச் செய்கிறார் என்பதைக் கவனித்து, அதன்படி செய்ய வேண்டும்.*

*ஏனென்றால் நாம் அவருடைய சாயலாகப் படைக்கப்பட்டிருக்கிறோம்,*

அவருடைய பிள்ளைகளாக சொத்துரிமை பெற்றிருக்கிறோம். இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல அழைக்கிறார். அதே போல் நாமும் இல்லாதவைகளை நோக்கி நம் வார்த்தைகளை அனுப்புவோம், அந்த வார்த்தையிலிருக்கும் ஆவி, ஜீவன் சூனியத்திலிருந்தும் ஒன்றை உருவாக்கி எடுத்து வரும். என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி என் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார். பிலி. 4:19. என்று அறிக்கையிடும்போது, இல்லாத செல்வத்தை சம்பத்தை நம் விசுவாச வார்த்தைகளின் மூலமாக அழைக்கிறோம், அது வருகிறது!

இதை வாசித்துக் கொண்டிருக்கிற நீங்கள் இந்த உலகத்தில் எந்த நிலைமையில் இருந்தாலும் சரி, இப்படிப்பட்ட நிலைமைக்கு நீங்கள் வந்ததற்கு காரணம் உங்கள் வார்த்தைகள்தான்!

“எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து; நீ பெயர்ந்து, சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். மாற். 11:23”

இந்த வசனத்தில் விசுவாசத்தை விட வார்த்தை முக்கியம் என்பதை பார்க்கிறோம். விசுவாசம் என்ற வார்த்தை ஒரு முறைதான் வருகிறது. ஆனால் சொல் (வார்த்தை) என்ற வார்த்தை மூன்று முறைகள் வருகிறது.

ஏனென்றால் வார்த்தையின் மூலமாகத்தான் நமக்குள் விசுவாசம் தோன்றியது.

இப்படிப்பட்ட விசுவாசத்தை வைத்து மலையை பெயர்க்க வைக்கும் ஜெபத்தை நம்மால் செய்ய முடியும். மலையென்றால் இந்த உலகத்தில் மனிதர்களுக்கு உண்டாகியிருக்கும் எந்த பிரச்சனையை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம். வியாதியோ, வறுமையோ, சாபமோ, பயமோ, எதுவோ, நம்முடைய வார்த்தைக்கு அந்த மலையை புரட்டித்தள்ளும் ஆற்றல் இருக்கிறது.

நம் விசுவாசம் **(Negative)** எதிர்மறையாகவும் இயங்கும் ஆபத்து இருக்கிறது, அது நம்முடைய வார்த்தையைப் பொறுத்து இருக்கிறது. நாம் நன்றாக இருக்க வேண்டுமென்பதற்காக நம் தேவன் எழுதிக் கொடுத்திருக்கும் வேத வசனங்களின் நல்ல வார்த்தைகளை எடுத்து **(Positive)** நேர்மறையாகப் பேசுவோம்.

இந்த விசுவாசத்தின் இயக்கம் தொடர்ச்சியானதான இருக்க வேண்டும். ஜெப வேளையில் மாத்திரமல்லாமல், நம்முடைய **outlook** (பேச்சு, செயல்பாடுகள், தோற்றம், சகலவிதமான வெளிப்பாடுகள்) மற்றவர்கள் கவனிக்கக்கூடிய எல்லாக் காரியத்திலேயும் வெளிப்பட வேண்டும்.

அதாவது ஜெபத்தில் பிரச்சனையை அல்ல, வேத வசனங்ளை, அதைச்சார்ந்த விசுவாச வார்த்தைகளை உச்சரிக்க வேண்டும்.

ஆமென் போட்டு ஜெபத்தை முடித்த பிறகும் அந்த விசுவாச வார்த்தைகளின் வெளிப்பாடுகள் தொடர்ச்சி இருந்து கொண்டேயிருக்க

வேண்டும். இதெல்லாம் சேர்ந்ததுதான் ஜெபம்! ஆமென் என்றவுடன் ஜெபம் முடிந்துவிடுவதில்லை!

வாயிலே விசுவாச வார்த்தை ... கொஞ்ச நேரம் கழித்து, வேறு விதமான பேச்சு, ஒருத்தரிடம் ஒன்று, இன்னொருத்தரிடம் இன்னொன்று, ஆளுக்கு தக்கபடி வார்த்தை ஜாலம் ... இதெல்லாம் நம் ஜெபத்தை செல்லரிக்க வைத்துவிடும்.

"நெருப்பென்றால் சுட்டு விடாது" என்ற பழமொழியை நம்பிக்கொண்டிருப்பவர்கள் சிந்தியுங்கள்.

பிரச்சனைகளை ஜெபத்தில் சொல்லி புலம்ப வேண்டியதில்லை. நம் பிரச்சனைகள் தேவனுக்கு ஏற்கெனவே தெரியும். அந்தப்படியே பிரச்சனைகளுக்கான பதிலும் ரெடியாகவே இருக்கிறது, வசனங்கள்தான் நம் பிரச்சனைகளுக்கான பதில். நம் விசுவாசத்தைப் பயன்படுத்தி அதை எடுக்க வேண்டும். இந்த மகத்தான காரியத்தைச் செய்து முடித்துவிட்டுத்தான் இயேசு கல்லறையை விட்டு வெளியே வந்தார்!

தேவனுடைய வார்த்தைகள் அது அனுப்பப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றாமல் திரும்பி வராது. பதில் வரவில்லையென்றால்? தவறு நம் பக்கத்தில்தான், எங்கே தவறு நடந்தது என்று கண்டுபிடித்து அடிக்கோடிடுங்கள், திருத்துங்கள்!

## முடிவாக...

நம்முடைய தேவன் யார்? நாம் யார்? கிறிஸ்துவுக்குள் நமக்கு என்ன என்னவெல்லாம் கையளிக்கப்பட்டிருக்கிறது? அதை எப்படிப் பெற்றுக்கொள்வது? பெற்றுக்கொண்டு அதை வைத்து என்ன செய்வது? ... இப்படியாக புதிய ஏற்பாட்டிலிருந்து, புதிய உடன்படிக்கையின் ஒரு சில சத்தியங்களைத் தியானித்தோம். தேவனைக் குறித்த வெளிப்பாடுகள் சூரியனைப் போல மிகப்பிரமாண்டமானதாக இருக்கிறது. அதில் நான் ஒரு ஒளிக்கீற்றை மாத்திரம்தான் பெற்றுக் கொண்டேன். அந்த வெளிச்சத்தை இருளுள்ள இடங்களில் பிரகாசிக்கும்படி ஏற்றி வைத்து விட்டு, விதைகள் 8—வது பகுதியைத் தயாரிக்க அடுத்த ஒளிக்கீற்றைத் தேடிப்போக இருக்கிறேன்.

**விதைப்பும் அறுப்பும் ஒழிவதில்லை ...**
**பூமி உள்ள நாளளவும்**
**தொடரும் ...**